விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஓரே சீமெந்து ராம்கோ

சங்கு 14 வள்ளுவர் ஆண்டு 2044 ஐப்பசி 28 வியாழக்கிழமை (14.11.2013) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 330

## வலி வடக்கில் இராணுவ ஆக்கிரமிப்பு

# இரண்டாவது நாளாக நேற்றும் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு மக்களின் மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தியும் பொது மக்களின் வீடுகளை இராணுவம் இடிப்பதனை தடுத்து நிறுத்தக் கோரியும் மக்களின் உண்ணாவிரதப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்றும் நடைபெற்றது. இப்போராட்டத்தில் வடக்கு மாகாண முதல மைச்சா சி.வி.விக்னேஸ்வரன் கலந்து கொண்டிருந்ததோடு 20-ம் பக்கம் பார்க்க

# 50 சர்வதேச பிரதிநிதிகள் நேற்று யாழ். வந்தடைவு

(யாழ்ப்பாணம்)

சர்வதேசப் பிரதிநிதிகள் 50 பேர் கொண்ட குழுவினர் யாழ்ப் பாணத்திற்கு வருகை தந்துள்ளனர்.

பொதுநலவாய மாநாட்டின் சமூக அமர்வுகளில் பங்கெடுப்பதற்காக கொழும்பு வந்திருந்த சர்வதேசப் பிரதிநிதிகள், அமைச்சர்கள், மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள் 50 பேர் நேற்றைய தினம் இரவு 8.30 மணியளவில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

முன்னதாக நேற்றுக் காலை கிளிநொச்சிக்கு விஜயம் மேற்கொண்ட இக்குழுவினர் கிளி.அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

யாழ்.வந்த சர்வதேச பிரதிநிதிகளின் குழுவிற்கு யாழ்.ரில்கோ விருந்தினர் விடுதியில் தமிழ் கலாசார முறைப்படி வரவேற்பு அளிக்கப் 20-ம் பக்கம் பார்க்க

# சனல் 4 ஊடகவியலாளருக்கு அனுராதபுரத்தில் வழிமறிப்பு



(கொழும்பு)

கலும் மக்ரே உள்ளிட்ட சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர்கள் குழு நேற்றுப் புதன்கிழமை வடக்கு நோக்கி பயணம் செய்து கொண்டிருந்த போது, அவர்கள் பயணித்த ரயில் அனுராதபுரத்தில் வைத்து வழிமறிக்கப்பட்டுள்ளது.

கொழும்பில் இடம்பெறும் பொதுநலவாய அரசியல் தலைவர்களின் மாநாடு குறித்து செய்தி சேகரிக்கச் சென்ற இவர்கள் நேற்றுக் காலை கிளிநொச்சி நோக்கி ரயில் மூலம் பயணம் செய்தனர். இந்நிலையில், இவர்கள் பயணம் செய்த ரயிலை அனுராதபுர ரயில் நிலையத்தில் வைத்து நூற்றுக்கும் மேற்பட்ட அரசாங்கத்தின் 20-ம் பக்கம் பார்க்க

## முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்

# இடிப்பு

## ஈழ ஆதரவாளர்கள் எதிர்ப்பு



(தஞ்சாவூர்)

இலங்கையில் நடந்த இறுதிப் போரில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக தமிழகத்தின் தஞ்சாவூரில் கட்டப்பட்டிருந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் சுவர் நேற்று இடித்து அழிக்கப்பட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

# ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளச் சென்ற வடபகுதி மக்களை தடுத்தது ரி.ஐ.டி..

(யாழ்ப்பாணம்)

வடக்கில் காணாமல் போனோரினை மீட்டுத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டமொன்றினை மேற்கொள்வதற்கு கொழும்பு சென்ற வட பகுதி மக்களினை பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவினர் (ரி.ஐ.டி) தடுத்து வைத்திருந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 7.30 மணியளவில் மாத்தளையில் இடம் பெற்றுள்ளது. சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கொழும்பு சிறிகொத்தாவில் நேற்று காணாமல் போனோரினை மீட்டுத் தருமாறு கோரி ஆர்ப்பாட்டம் மற்றும் மெழுகுவர்த்திப் போராட்டமொன்றினை முன்னெடுப்பதற்கு காணாமல் போனோரின் உறவுகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இப்போராட்டத்தில் கலந்து கொளவதற்காக மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த மக்கள் நேற்று அதிகாலை 4 மணியளவில் கொழும்பை நோக்கி சென்று கொண்டிருந்தனர்.

இதில் முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களினைச் சேர்ந்த காணாமல் போனோரின் உறவினர்கள் நான்கு பேருந்துகளில் சுமார் 260 பேர் மாத்தளையில் சென்று கொண்டிருந்தபோது பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் தடுக்கப்பட்டு மாத்தளை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு கொழும்பு செல்லவிடாது திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

திருப்பியனுப்பப்பட்ட இவர்கள் வவுனியா யூசி மைதானத்தடியில் ஆர்ப்பாட்டமொன்றினை முன்னெடுத்தனர்.

இதேபோல் மன்னாரினைச் சேர்ந்தவர்களும் வழிமறிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்ட நிலையில் மன்னார் கட்டைப்பறிச்சான் எனுமிடத்தில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பொதுநலவாய மாநாட்டிற்காக உலகத் தலைவர்கள் கொழும்பில் கூடியுள்ள 20-ம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அழைப்பு விடுக்கப்பட்டாலும் மாநாட்டிற்கு செல்லமாட்டேன்

## வடக்கு முதல்வர் உறுதிபட தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கப்பட்டாலும் செல்ல மாட்டேன் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உறுதிபட தெரிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கில் மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தியும் இராணுவத்தினர் மேற்கொள்கின்ற வீடழிப்பினை நிறுத்தக் கோரியும் மக்களினால் தெல்லிப்பழை மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றலில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இப்போராட்டத்திற்கு நேற்றையதினம் வருகை தந்திருந்த முதலமைச்சரிடம் ஊடகவியலாளர்களினால் பொதுநலவாய மாநாட்டிற்கு நீங்கள் செல்வீர்களா? எனக் கேட்ட போதே அவர் அழைப்பு விடுத்தாலும் செல்ல மாட்டேன் என பதிலளித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்கெனவே எடுத்த முடிவுக்கு அமைவாக கொழும்பில் நடைபெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் நான் கலந்து கொள்ளமாட்டேன்.

மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு இதுவரை (நேற்று) எனக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை. எனினும் அழைப்பு விடுக்கப்பட்டாலும் கலந்து கொள்ளமாட்டேன் என உறுதிபடத் தெரிவித்தார். (செ-4-6)

# போராட்டத்திற்கு சென்ற பஸ் மீது கல் வீச்சு

(யாழ்ப்பாணம்)

மீள்குடியமர்வினை வலியுறுத்தியும் இராணுவத்தினர் மேற்கொள்ளும் வீடழிப்பினை நிறுத்தக் கோரியும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றிலில் நடைபெறுகின்ற தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக பஸ்ஸில் சென்றவர்கள் மீது கல் வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வலி.வடக்கு மக்களில் மீள்குடியேற்றத்தினை வலியுறுத்தி தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தின் இரண்டாம் நாளான நேற்றைய தினம் குறித்த உணவு தவிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு வடமராட்சியிலிருந்து வலி.வடக்கிற்கு பொதுமக்களுடன் சென்ற இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்து மீது நேற்றையதினம் காலை வடமராட்சியில் வைத்து கல்வீச்சுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பொதுமக்கள் உணவுதவிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதை தடுக்கும் முகமாகவே இச் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வலி.வடக்கு மீள்குடியேற்றத் தலைவர் எஸ்.சஜீவன் குற்றஞ்சாட்டியுள்ளார்.(செ-4-6)


**தொடர்ந்தும் மேலதிக சேவையில்...**

இலங்கையின் எப்பாகத்திற்கும் குறைந்த செலவில் உங்கள் அன்புக்குரியவர்களுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், உடுபுடைவைகள் மற்றும் எதுவித பார்சல் ஆயினும் மறுநாள் **(24 மணித்தியாலயம்)** உரிய முகவரிக்கு (Door to Door) ஒப்படைக்கப்படும்.

**குறிப்பு:** விசுவமடு, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, ஒட்டுசுட்டான், நெடுங்கேணி, மல்லாவி, துணுக்காய், பூநகரி ஆகிய வன்னி மாவட்டங்களுக்கும் எமது சேவை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

WESTERN UNION MONEY TRANSFER

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
(சி-5456) T.P. No.:-021 222 5392


# நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு நிகழ்வுகள் நாளை வெள்ளிக்கிழமை கனடாவில் நடைபெறவுள்ளது.

வித்துவான் க.செபரத்தினம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வரவேற்புரையை பேராசிரியர் அமுதுயோசப் சந்திரகாந்தன் வழங்கவுள்ளார்.

தனிநாயகம் அடிகளாரும் சங்க இலக்கியமும் என்னும் தலைப்பிலான நினைவுப் பேருரையை யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவரும் யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியருமான அ.சண்முகதாஸ் வழங்கவுள்ளார். (செ-5)


**கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம்**
**கரணவாய் கிழக்கு, கரவெட்டி**
நடாத்தும்
**பௌர்ணமி விழா**

**இடம்:** ஜெயச்சந்திரன் மண்டபம்
**காலம்:** 15.11.2013 வெள்ளிக்கிழமை
**நேரம்:** மாலை 7 மணி

**தலைவர்:** திரு.C.G.திருமாலழகன்

**பிரதம விருந்தினர்**
திரு.சிவ்குரு குகதாசன்
(ஓய்வுபெற்ற சிரேஷ்ட பொலிஸ் உத்தியோகத்தர்)

**சிறப்பு விருந்தினர்**
திரு.K.M.W.T.கஹங்கற
(பொறுப்பதிகாரி-நெல்லியடி பொலிஸ் பிரிவு)

**சிறப்பு விளக்கவுரை**
"வீதிப்போக்குவரத்தும் விதிமுறைகளும்"
திரு.M.F.M.பிறிடஸ்
(I.P பொலிஸ் நிலையம்-நெல்லியடி)

(புறொஜெக்ரர் மூலம் விளக்கப்படங்கள் காண்பிக்கப்படும்)
சிறுவர் நிகழ்ச்சிகளும் பிரசாத அன்பளிப்பும் இடம்பெறும்.
**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

(இ) -நிர்வாகத்தினர்.



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு:
T.P : 021 321 0815,
021 567 1532



# UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

## HIGHER EDUCATION FOR THE TWENTY FIRST CENTURY (HETC) PROJECT

Applications are invited from suitable candidates for the following posts to work under the guidance of the Coordinator of the respective study programmes (Physical Science and Agriculture).

**a. POST OF MANAGEMENT ASSISTANT (on Contract)**

**Required Qualification and Skills:**

Should have

- passed G.C.E (O/L) examination in six subjects in one sitting, with credit pass in at least four subjects including Tamil/English and Mathematics,
- passed G.C.E (A/L) examination in three subjects in one sitting,
- knowledge and skills in MS Office applications, windows file management and email communication,
- English language proficiency: Skills in written and oral communications and typing with good speed and
- systematic record keeping skills.

Must be

- 25-35 years old and
- an efficient team worker.

**Remuneration:** Rs.15,000/- per month (fixed)
**Contract period:** One year in the first instance and will be extended for a further period of 1-2 years on satisfactory performance.
**Recruitment:** By interview. Only the shortlisted candidates will be called for interview. Successful candidates should be able to start work immediately.

**b. POST OF PROJECT MANAGEMENT ASSISTANT (on Contract)**

**Required Qualification and Skills:**

Should have

- passed G.C.E (A/L) examination,
- knowledge and skills in MS Office applications, windows file management and email communication,
- English language proficiency,
- written and oral communication skills to deal with people of diverse backgrounds,
- skills in setting priority and managing multiple assignments
- systematic record keeping skills and
- experience in preparing reports

Must be

- 25-35 years old,
- an initiator in taking responsibilities and
- an efficient team worker

**Note:** Candidates, who have knowledge in agriculture, are preferred.

**Remuneration:** Rs.15,000/- per month (fixed)
**Contract period:** One year in the first instance and will be extended for a further period of 1-2 years on satisfactory performance.
**Recruitment:** By interview. Only the shortlisted candidates will be called for interview. Successful candidates should be able to start work immediately.

Applications must be submitted in the prescribed application form available at the Operational Technical Secretariat (OTS), HETC Project, University of Jaffna and in the University website www.jfn.ac.lk. The envelope containing duly filled application form must bear "the name of the post applied for" on its top left hand corner and must be either hand delivered or sent under registered post to reach "**Director, Operational Technical Secretariat (OTS), HETC Project, University of Jaffna, Thirunelvely, Jaffna**" on or before **25.11.2013**. Incomplete and illegible applications and applications that are received after the closing date will be rejected. Canvassing in any form will be a disqualification.

**Vice-Chancellor**
**University of Jaffna.**

(C-5460)

# இன்று ஒரு தகவல்

## உள்மன ஆற்றல்

தையல் ஊசியைக் கண்டு பிடிப்பதற்காக பலகாலம் தலையைப் பிய்த்துக் கொண்டு ஆராய்ச்சி பண்ணிக் கொண்டிருந்தார் ஹோ என்ற விஞ்ஞானி.

அவருக்குப் பிடிபடாமலிருந்த விடயம் என்னவென்றால், அந்த ஊசியின் கூர்மையான பாகத்தில் நூலை எப்படிச் சேர்ப்பது என்பதுதான்.

மற்றைய பாகம் மெசினுக்குள்ளே போய்விடுகிறது. அதனால் அந்தப் பாகத்தில் சாதாரணமற்ற ஊசியில் செய்வது போல் நூலை நுழைக்க முடியாது. அப்படி நுழைத்தாலும் எப்படி தைப்பது? இதுதான் அவருக்கிருந்த பிரச்சினை.

நீண்டநாள் யோசித்தார். தையல் மெஷின் ஊசியின் வடிவமைப்பு அவருக்குப் புலப்படவில்லை. இரவு பகலாக அதே ஞாபகமாக இருந்தார். ஒருநாள் அவர் தூங்கிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு கனவு கண்டார்.

அந்தக் கனவில் அவரை ஒரு மலைச்சாதியினர் பிடித்துக் கொண்டு போய் ஒரு இடத்தில் கட்டிப்போட்டு விடுகிறார்கள்.

அந்த மலைச்சாதி மக்களின் அரசன் ஒருத்தன் வருகின்றான். அவனைப் பார்த்து ஒரு உத்தரவிடுகின்றான்.

என்ன உத்தரவு தெரியுமா?

பொழுது சாய்வதற்குள் நீ தையல் மெஷின் ஊசியைக் கண்டு பிடிக்க வேண்டும். அப்படிக் கண்டு பிடிக்கவில்லையானால் உன்னுடைய தலையை வெட்டிவிடுவோம்.

இதுதான் அரசன் போட்ட கட்டளை.

இவருக்கு என்ன செய்வதென்று ஒன்றுமே புரியவில்லை. திருதிருவென்று முழித்தார்.

இந்த நேரத்தில் அந்த மலைச்சாதியினர் அவரைச் சுற்றி சுற்றி வந்து பயங்கரமாக முழித்துக்கொண்டு நடனமாடுகிறார்கள்.

தன்னைச் சுற்றிச் சுற்றி ஆடிக்கொண்டுவரும் அவர்களை இவர் திகிலுடன் பார்க்கிறார். நேரம் ஆக ஆக தன்னுடைய இறுதி நேரம் நெருங்குவதை உணர்ந்தார். மிகவும் நெருக்கடியான நிலைமை. தன்னைச் சுற்றிச் சுற்றி ஆடுபவர்களைக் கவனித்தார். அவர்களுடைய கைகளில் ஈட்டிபோன்று ஓர் ஆயுதம் வைத்திருந்தார்கள். அந்த ஆயுதத்தை இவருடைய கண்ணுக்கு நேராகக் கொண்டு வந்தார்கள். அதை அவர் பார்த்தார். அந்த ஆயுதத்தின் கூரான முனையை இவர் கூர்ந்து கவனித்தார்.

அந்தக் கூரான முனையில் ஒரு சின்ன துவாரம் தெரிந்தது. உடனே அவருக்குப் பளிச்சென்று ஒரு ஐடியா வந்தது. இதைத் தானே இவ்வளவு காலமும் நான் தேடிக் கொண்டிருந்தேன். கூரான முனையில் ஒரு சின்ன துவாரத்தைப் போட்டுவிட்டால். அதன்மூலமாக நூலைச் செலுத்தி மறு முனையை மெஷினில் வைத்துவிடலாமே. தையல் மெஷின் ஊசி ரெடி என்று நினைத்தார்.

திடீரென்று தூக்கம் கலைந்த உடனே தன் தலைமாட்டில் இருந்த குறிப்பேட்டில் இதைக் குறித்து வைத்துக் கொண்டார். அதன்பின் அந்த ஊசியையும் அவர் செய்து முடித்தார். இது எப்படியென்று நீங்கள் நினைக்கலாம். ஆனால் இது சாத்தியம்தான்.

முழித்துக் கொண்டிருக்கும் போது நமக்கு ஏற்படும் சில பிரச்சினைகளுக்குக் கனவில் விடைகிடைப்பதுண்டு. உங்களில் பலருக்கு இப்படியான அனுபவம் ஏற்பட்டிருக்கலாம். எந்த ஒரு செயலைப்பற்றி நினைக்கும் போதும் அந்தந்தச் செயல் நம்முடைய நினைவில் ஒரு நல்ல வடிவம் பெறுகிறது. ஒரு செயற்றிட்டத்தை எந்தளவுக்கு நாம் நன்றாக யோசனை செய்து திட்டம் போடுகிறோமோ அந்த அளவுக்கு அதை சுலபமாக செய்து முடிக்கமுடியும். அந்த விஞ்ஞானி நினைத்த காரியம் அவருடைய எண்ணம் முழுவதும் ஆக்கிரமித்தது. அதனால் அவர் நினைத்தது கனவில் உருவாகி அதற்கு செயல் வடிவம் கிடைத்தது.

மனிதனின் உள்மனதுக்கு அவ்வளவு ஆற்றல் உண்டு என்று சொல்கிறார். தூக்கத்தை ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்துவதெப்படி? என்பதைப் பற்றியெல்லாம் இப்பொழுது நிறைய ஆராய்ச்சி செய்கிறார்கள். பயிற்சியெல்லாம் கொடுக்கிறார்கள். அதனால் தூக்கத்தைப் பற்றி இலேசாக நினைத்துவிடாதீர்கள்.

நமக்கு வேண்டப்பட்ட ஒருத்தருக்கு தூக்கத்தில் நடக்கின்ற வியாதி இருந்தது. அதற்காக மருந்து எடுத்துக் கொண்டிருந்தார்.

ஒரு நாள் அவரைப் பார்த்துக் கேட்டேன்.

"ஏங்க... தூக்கத்தில் நடக்கிற வியாதிக்கு மருந்து உள்ளெடுக்குறீங்களே... ஏதாவது முன்னேற்றம் தெரியுதா?" என்று கேட்டேன்.

"தெரியுது" என்றார்.

"எப்படி"என்றேன்.

"முன்பெல்லாம் தூக்கத்தில் 10 அடிவரைக்கும் நடப்பேன். இப்பொழுது 40 அடிவரைக்கும் நடக்கிறேன்"என்றார்.

- தென்கச்சி கோ சுவாமிநாதன்

# தமிழர்களின் ஆட்சி 30 வருடங்களாக இந்த மண்ணில் இடம்பெற்றுள்ளது

## நாம் தோற்றுப்போன இனமல்ல - விவசாய அமைச்சர் தெரிவிப்பு

(நெடுந்தீவு)

தமிழீழ விடுதலைப் புலிகளால் முன்னெடுக்கப்பட்ட ஈழத் தமிழ்களின் 30 வருட கால போராட்டம், சர்வ தேச நாடுகளின் துணையுடன் அடக்கி ஒடுக்கப்பட்டுவிட்டது என்று அரசாங்கம் கூறுவதனால் மட்டும் தமிழரின் போராட்டம் தோல்வி அடைந்துவிட்டது என நாம் கருதக் கூடாது. தமிழரின் அப் போராட்டத்தை தமிழரினால் 30 வருடகாலமாக இந்நாட்டில் இடம் பெற்ற ஆட்சி முறையாகவே நாம் கருதவேண்டும் என வடக்கு மாகாண விவசாயம், சுற்றுச் சூழல், கால்நடை மற்றும் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் நெடுந்தீவில் தெரிவித்துள்ளார்.

யாழ்.நெடுந்தீவுக்கு நேற்றைய தினம் விஜயம் மேற்கொண்ட அமைச்சர் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தீவக மக்களின் பிரதிநிதியும் வடக்கு மாகாண சபையின் ஆளுங்கட்சி உறுப்பினருமான விந்தன் கனகரத்தினம் உள்ளிட்டவர்கள் முதலாம் வட்டாரத்திலுள்ள ஐக்கிய தீவ சனசமூக நிலையத்தில் விவசாயிகளை நேற்று சந்தித்து கலந்துரையாடினர். இச்சந்திப்பின் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

போர்த்துக்கேயர் உள்ளிட்ட அந்நியநாட்டவர்களின் வருகையை எதிர்த்து நெடுந்தீவு மக்கள் வாழ்ந்தனர் என்பதற்கும், இந்த மக்கள் யாருக்கும் அடிபணிய மாட்டார்கள் என்பதற்கும் இங்கு அமைக்கப்பட்ட கோட்டை சான்றாகவுள்ளது.

மேலும் பசுத்தீவு, மூலிகைத்தீவு, பருத்தித்தீவு என்று வரலாற்றில் பல பெயர்களால் இத்தீவு அழைக்கப்பட்டிருந்தது என்பதையும் நினைவுபடுத்தினார். குறிப்பாக பருத்தித்தீவு என்று முன்னர் பிரபல்யமாக அறியப்பட்ட நெடுந்தீவில் அந்நியர்களின் ஆதிக்கம் காரணமாக பருத்திச் செடிகள் முற்றாக அழிக்கப்பட்டு அந்நாமமே இல்லாத அளவிற்கு மாற்றப்பட்டுள்ளது.

அத்தோடு வரண்டநிலத்திற்குரிய எந்தப் பயிரையுமே செய்ய முடியாத நிலைக்கும் இந்த பிரதேசங்கள் மாற்றப்பட்டுவிட்டன என்பது மிகவும் மனவேதனையளிக்கிறது.

எனவே, முதலாவதாக இந்தத் தீவில் விவசாய நடவடிக்கைகளை செய்யக்கூடிய சூழ்நிலைகளை உருவாக்க நடவடிக்கைஎடுக்க வேண்டிய பாரியபொறுப்புஎமதுஅமைச்சுக்குள்ளது. அத்தோடு காற்றினால் கடல் உவர் காவிக் கொண்டுவரப்பட்டு விவசாய நிலங்களில் படர விடப்படுவதை தடுப்பதற்கும் நீண்டகால திட்டத்திற்கு அமைவாக கடற்கரை ஓரங்களில் சவுக்கு மரங்களை நடும் திட்டத்தையும் அமுல்படுத்த நாம் ஆலோசித்து வருகின்றோம்.

எமது அமைச்சினூடாக நடைமுறைப்படுத்த கூடிய திட்டங்களை கட்டாயம் நாம் நிறைவேற்றுவோம்.

தமிழரின் ஆயுதப்போராட்டம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என கூறப்படினும் அதனை எமக்கு கிடைத்த தோல்வியாக நாம் கருதக்கூடாது.

மாறாக தமிழரின் ஆட்சியே வடக்கு, கிழக்கில் கடந்த 30 வருடங்களாக இருந்தது என நாம் கருதிக் கொள்ளவேண்டும்.

யுத்த காலத்திலும் சரி, தற்பொழுதும் சரி புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகள் எமக்கு ஆற்றி வரும் உதவிகளுக்கு வார்த்தைகளால் நன்றி கூற முடியாது.

புலம் பெயர்ந்தவர்கள் பலர் தற்பொழுது உதவிகளை வழங்க முன்வந்துள்ளனர் எனவும் நவீன விவசாய நடவடிக்கைகளைப் பின்பற்றி பயிர்ச் செய்கைகளில் ஈடுபட இப்பகுதி விவசாயிகள் முன்வரவேண்டும் எனவும் தேவையான உதவிகளை வழங்க தமது அமைச்சு தயாராக இருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-7-6)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 40 | 40 | 40 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 - 160 | 140 | 160 |
| பச்சைமிளகாய் | 70 | 70 | 80 | 120 |
| தக்காளி | 60 | 50 | 60 | 100 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 30 | 40 | 40 |
| கோவா | 35 | 20 | 40 | 60 |
| கரட் | 40 | 20 | 60 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 |
| புடோல் | 30 | 40 | 35 | 50 |
| வாழைக்காய் | 40 | 30 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 210 | 220 | 200 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 210 | 240 |
| பாகற்காய் | 100 | 80 | 80 | 100 |
| வெண்டிக்காய் | 30 | 30 | 30 | 60 |
| கருணைக் கிழங்கு | 30 | 30 | 50 | 50 |
| பயற்றங்காய் | 30 | 90 | 50 | 60 |
| லீக்ஸ் | 50 | 50 | 90 | 90 |
| பீற்றூட் | 15 | 15 | 30 | 40 |
| கறிமிளகாய் | 80 | 80 | 80 | 120 |
| முருங்கைக்காய் | 30 | 50 | 80 | 50 |
| போஞ்சி | 100 | 100 | 120 | 170 |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 40 | 20 |
| தேசிக்காய் | 150 | 160 | 280 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 50 | 40 | 35 - 45 |

# இராசி பலன்

14.11.2013
(ஐப்பசி 28, வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.00 மணிக்கு
துவாதசி முன்னிரவு 8.38 மணிவரை
உத்தரட்டாதி முற்பகல் 10.51 மணிவரை
இராகுகாலம் 1.37-3.07 மணிவரை
சுபநேரம் 7.37-9.07 மணிவரை

**மேடம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வழக்கத்தைவிட கூடுதல் நேரம் பணிபுரிய நேரலாம், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், சயன சுகக் குறைவான நாள்.

**இடபம்** செல்வாக்கு மேலோங்கும் நாள், உறவினர் வருகையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும், மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும்.

**மிதுனம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள், தொழில் வளர்ச்சி மேலோங்கும், அரசு வழியில் அனுகூலமுண்டு.

**கடகம்** மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், சொத்து சம்பந்தப்பட்ட வகையில் இருந்த மனஸ்தாபங்கள் அகலும், புதிய திட்டங்கள் கைகூடும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம்,குடும்பத்தில் கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்த நேரிடலாம்.

**கன்னி** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், குடும்பத்தினருடன் குதூகலப் பயணமொன்றை மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, புதிய பொருட்சேர்க்கையுண்டு.

**துலாம்** சுப காரியங்கள் நடைபெறலாம், உடல் நலம் சீராகும், பயணங்களால் பலனுண்டு, சுவாரஸ்யமான நாள், போசன சுகமுண்டு, தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.

**விருச்சிகம்** சொல்லை செயலாக்கிக் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் நடைபெறலாம், பிறருக்கு உதவி செய்யும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** பெற்றோர் மீது பிரியம் கூடும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம், மங்கல நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**மகரம்** கேட்ட இடத்தில் உதவிகள் கிடைத்து மகிழ்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

**கும்பம்** கோரிக்கைகள் நிறைவேறும் நாள், ஆரோக்கியம் சம்பந்தப்பட்ட வகையில் இருந்த அச்சுறுத்தல்கள் அகலும், வாக்கு மேன்மையுண்டு, பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**மீனம்** பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள், திட்டமிட்ட காரியங்களில் சில திருப்பங்கள் ஏற்படலாம், கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்ள முற்படுவீர்கள்.

வளவன்

# இராசவீதி பகுதியில் பாதீனிய செடி அதிகரிப்பு

## கட்டுப்படுத்த கோரிக்கை


வலிகாமம் கிழக்கு இராசவீதி பகுதியில் பாதீனியச் செடி அதிகமாக வளர்ந்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இராசவீதிப் பகுதியிலுள்ள கரந்தன் நீர்வேலி, நவக்கிரி, புன்னாலைக்கட்டுவன், ஈவினை போன்ற இடங்களின் தெருவோரங்களிலும் அவற்றை அண்டிய விவசாயக் காணிகளிலும் பாதீனியச் செடிகள் பரவலாக முளைத்துள்ளதை காணக் கூடியதாகவுள்ளது.

இச் செடி விவசாயக் காணிகளுக்குள் பரவுமாயின் பயிர்ச் செய்கையை அழித்துவிடும் என விவசாயிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கடந்த வருடமும் இவ்வாறாக பாதீனியச் செடி பரவிய போது அதைத் தாம் பல சிரமங்களின் மத்தியில் அழித்ததாகவும் அச்செடி ஒவ்வொரு வருடமும் குறித்த காலப் பகுதியில் பரவலாக வளர்ந்து விவசாயச் செய்கைகளை அழித்து வருவதாகவும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் பாதீனியச் செடியை அழிப்பதற்கு புதிய திட்டங்களை வகுக்குமாறும் அவை ஏனைய விவசாய காணிகளுக்குள் பரவுவதற்கு முன்னர் தடுக்குமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-134)



(நன்றி:- மிரர்)




# தடை செய்யப்பட்ட கடற்றொழில் உபகரணங்களை பயன்படுத்துகின்றனர்

## வடக்கு மீன்பிடி அமைச்சரிடம் சுட்டிக்காட்டு



(யாழ்ப்பாணம்)

தடைசெய்யப்பட்ட தொழில் முறைகளை மீனவர்கள் தொடர்வதனால் மீனவர்களின் தொழில் பிரதேச வாரியாக பாதிக்கப்படுவதாக யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளன உறுப்பினர்கள் வடமாகாண மீன்பிடி அமைச்சர் பா. டெனிஸ்வரனிடம் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபையின் இரண்டாவது அமர்வைத் தொடர்ந்து பிற்பகல் 4 மணியளவில் யாழ்.மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் உறுப் பினர்களை அவர்களது சம்மேளன அலு வலகத்தில் வடக்கு மாகாண மீன்பிடி போக்கு வரத்து வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்க ளான இ.ஆணல்ட் மற்றும் ச.சுகிர்தன் ஆகியோர் சந்தித்து அவர்களது பிரச்சினைகள் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

இதன்போது அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

இந் நிகழ்வை சம்மேளனத்தின் தலைவர் அ.எமிலியான்பிள்ளை தலைமை தாங்கி நடத்தினார். சம்மேளன உறுப்பினர்கள் தங்களது கருத்துக்களை மேலும் தெரிவிக்கையில்,

தடை செய்யப்பட்ட 18 தொழில்களையும் பாகுபாடின்றி நிறுத்தி அனைத்து மீனவ சமூகங்களும் ஒரே மட்டத்தில் நோக்கப்பட வேண்டும் என்றும் யாழ். மீனவர்கள் பிரதேச வாரியாக தொழிலில் பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ந்து மீன்பிடி அமைச்சர் மீனவ சமூகங்களின் பிரச்சினைகளைத் தான் நன்கு அறிந்தவன் என்றும் ஒவ்வொரு மீனவ சமூகங்களுக்கும் நவீன மீன்பிடி முறைகளை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவுள்ளதாகவும் தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளை நிறுத்துவதற்கு அனைத்து மீனவ சமூகங்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் எனவும் தெரிவித்தார்.

நிகழ்வைத் தொடர்ந்து யாழ்.நெட் மீன்பிடி வலைகள் உற்பத்தி தொழிற்சாலையை பார்வையிட்டார். (அ-4)

# மத்தியஸ்தர் சபை வழக்கு 17 ஆம் திகதி

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச மத்தியஸ்தர் சபையின் பிணக்குகள் தொடர்பான கலந்துரையாடல்கள் வழமை போன்று 17 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறுமென பிரதேச மத்தியஸ்தர் சபை தவிசாளர் இ.மயில்வாகனம் அறிவித்துள்ளார்.

மத்தியஸ்தர் சபையின் பிணக்குகள் 16 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறுமென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது வழமை போன்று ஞாயிறு நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-9-134)

# மாயக்கை வீதியை புனரமைக்குக

(தும்பளை)

அல்வாய் வடக்கு மாயக்கை மாவடி வீதி சேதமடைந்து போக்குவரத்தை மேற்கொள்ள முடியாதளவுக்கு காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் 30 வருடங்களாக புனரமைப்புச் செய்யப்படாத நிலையில் காணப்படும் 500 மீற்றர் நீளமுடைய இவ்வீதி மிகமோசமாக சேதமடைந்துள்ளது.

இவ்வீதி தூரம் குறைந்ததாகவுள்ள போதிலும் இவ்வீதியை பெரும்பாலானோர் பயன்படுத்தி வருகின்றனர்.

எனவே, குறித்த வீதியைப் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் உரியவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ-9-19)

# உடல்களை அடக்கம் செய்ய கட்டண விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையின் பராமரிப்பின் கீழ் இயங்கும் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் இறந்தவர்களின் உடல்களைத் தகனம் செய்வதற்கான மற்றும் நல்லடக்கம் செய்வதற்கான கட்டண விபரங்களை யாழ். மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா அறிவித்துள்ளார்.

இதன்படி குறித்த மயானத்தில் பெரியவர்களின் தகனத்திற்கு 2 ஆயிரம் ரூபாவும் பெரியவர்களின் நல்லடக்கத்திற்கு ஆயிரத்து 500 ரூபாவும் சிறியவர்களை நல்லடக்கம் செய்வதற்கு ஆயிரம் ரூபாவும் கால்நடைகளை புதைப்பதற்கு 600 ரூபாவும் அறவிடப்பட்டுள்ளது.

இதேவேளை இதற்கு மேலதிகமான கட்டணங்கள் எவையும் யாழ்.மாநகர சபையால் அறவிடப்படமாட்டாது எனவும் இது தொடர்பில் முறையிடுவதற்கு 021 222 2019, 021 222 2275, 021 222 2335 என்னும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# பெண்ணுக்கு விளக்கமறியல்

பொலிஸார் விசாரணை நடத்திக் கொண்டிருந்த வேளை எதிராளியைத் தாக்கிய பெண்ணொருவரை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதவான் உத்தரவிட்டுள்ளார்.


சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை கரணவாய் ஆண்டார்தோட்டப் பகுதியில் இருவருக்கிடையில் மோதல் ஒன்று இடம்பெற்றுள்ளது.


இதனையடுத்து மோதலில் ஈடுபட்ட இருவரையும் நெல்லியடிப் பொலிஸார் கைது செய்து விசாரணைகளை நடத்திக் கொண்டிருந்த வேளை மோதலில் ஈடுபட்ட பெண் எதிராளியை அடித்துள்ளார்.

இதனால் குறித்த பெண்ணை அன்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதவானின் வாசஸ்தலத்தில் நெல்லியடிப் பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதவான் குறித்த பெண்ணை எதிர்வரும் 25 ஆம் திகதி வரை யாழ்.சிறைச்சாலையில் தடுப்புக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (அ-9-60)







யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் சிறுவர் தினமும் 15 ஆம் ஆண்டு நிறைவு விழாவும் அண்மையில் இடம்பெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்ட இந்துக் கல்லூரியின் சிறுவர் செயற்பாட்டுக் கழகத்தின் முன்னாள் பொறுப்பாசிரியர் திருமதி சா. அருந்தவபாலன் உட்பட விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வின் ஒரு பகுதியையும் கடந்த இரண்டு வருடங்களில் இலங்கையில் வெளியான பாடல்களில் சிறந்த பாடல் வரிகளுக்கான அரச தேசிய விருது பெற்ற மாணவனுக்கான விருது வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மானிப்பாய் செய்தியாளர்)

# கிறிஸ்தவ கல்லூரியின் பரிசளிப்பு விழா

யா/கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக் கிழமை முற்பகல் 9.30 மணிக்கு கல்லூரியின் 125 ஆவது ஆண்டு ஞாபகார்த்த மண்டபத்தில் கல்லூரி அதிபர் கே.ஆர். ராஜசேகரம் தலைமையில் நடை பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண விவசாயம், சுற்றுச் சூழல், கால் நடை மற்றும் நீர்ப்பாசனத்துறை அமைச்சரும் கல்லூரியின் பழைய மாணவருமான பி.ஐங்கர நேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.உதயகுமார், கோப்பாய் கோட்ட கல்விப் பணிப்பாளர் ஏ.எஸ்.சற்குண ராஜா ஆகியோரும் கௌரவ விருந்தினராக கல் லூரியின் பழைய மாண வரும் யா/செங்குந்தா இந்துக் கல்லூரியின் அதிபருமான ஆர்.பாலகு மாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (அ-5)



## மண்டைதீவு
## ஸ்ரீ சிவகாமவல்லி அம்பிகை சமேத
## ஸ்ரீமத் தில்லேஸ்வர் தேவஸ்தானம்
## பாலஸ்தாபன விஞ்ஞாபனம்
## 15.11.2013

**சிவநேயச் செல்வர்களே!**

*மண்டைதீவு தில்லேஸ்வரம் என்னும் திவ்விய ஷேத்திரத்தில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அருள்மிகு ஸ்ரீ சிவகாமவல்லி அம்பிகை சமேத ஸ்ரீமத் தில்லேஸ்வரப் பெருமானின் திருக்கோயிலில் நித்திய பூஜை ஆரம்பித்து திருப்பணிகளை நிறைவுசெய்து கும்பாபிஷேகம் செய்யதிருவருள் பாலித்துள்ளது. இக்கைங்கரியத்திற்குப் பூர்வாங்க மாகப் பாலஸ்தாபன அபிஷேகம் நிகழும் விஜய வருஷம் ஐப்பசி மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (15.11.2013) பிரதோஷ விரத புண்ணிய தினத்தில் காலை 8 மணிமுதல் 9.30 மணிவரையுள்ள சுபவேளையில் நடைபெறத்திருவருள் பாலித்துள்ளது.*

**கிரியா நிகழ்ச்சி**

ஐப்பசி 27 ஆம் நாள் (13.11.2013) புதன்கிழமை
*மாலை 5 மணி முதல் விநாயக வழிபாடு மற்றும் பூஜை ஆரம்பித்தல்*

ஐப்பசி 28 ஆம் நாள் (14.11.2013) வியாழக்கிழமை
*காலை 9 மணிமுதல் விநாயக வழிபாடு, கர்மாரம்பம்*
*மாலை 5 மணி முதல் - யாகபூஜை வழிபாடுகள், ஹோமங்கள் முதலியன*

ஐப்பசி 29 ஆம் நாள் (15.11.2013) வெள்ளிக்கிழமை
*காலை 7.00 மணிமுதல் -யாகபூஜை வழிபாடுகள், சுப வேளையில் பாலஸ்தாபன கும்பாபிஷேகம், விஷேட பூஜை, திருப்பணி, நாள்வேலை ஆரம்பம், ஆசீர்வாதம், பிரசாதம் வழங்கல்*

*பாலஸ்தாபன பிரதம குரு - வித்தியாசாகரம் சிவஸ்ரீ சபா.வாசுதேவக்குருக்கள் (சிவன்தேவஸ்தானம், சித்தன்கேணி)*

சிவனடியார்கள் பாலஸ்தாபன நிகழ்விற்கு வருகை தந்து எம் பெருமானை தரிசித்து திருவருளுக்குப் பாத்திரமாவீர்களாக.

தொடர்ந்து நடைபெறவுள்ள திருப்பணிகளுக்கும் கும்பாபிஷேகத்திற்கும் பெருநிதி நல்கி சிவகைங்கரியப் பணியில் ஈடுபட்டு அருள் பெற்றுய்யுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

**'தென்னாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி'**

தில்லேஸ்வரம்
மண்டைதீவு- 06 (இ)

இங்ஙனம் சிவப்பணியில்
ஆலய பரிபாலன சபை




குறைந்த கட்டணத்தில்
24 மணி நேர சேவை

Northern Central Hospitals

24/7 ONLY MULTI SPECIALITY HOSPITAL IN JAFFNA

நொதன் சென்றல் வைத்திய சாலை வழங்கும் பிரத்தியேக வைத்திய சேவைகள்

வட பகுதி மக்களின் தேவை கருதி நொதன் சென்றல் வைத்தியசாலை பல நவீன பிரத்தியேக வைத்திய மற்றும் சத்திர சிகிச்சை சேவைகளை நோயாளிகள் கொழும்பு செல்ல வேண்டிய அவசியமில்லாது இங்கேயே வழங்கி வருகின்றதென்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றது. இங்கு வழங்கப்படும் நவீன சேவைகளாவன:

➢ சாதாரண மகப்பேறு, மகப்பேற்று சத்திர சிகிச்சை



இவ்வைத்தியசாலையில் சாதாரண மகப்பேற்றுக்கான சகல வசதிகள் கொண்ட பிரசவ அறை, பிரசவ விடுதி என்பன உள்ளன. மருத்துவ தாதி மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் சேவை 24 மணித்தியாலமும் உள்ளது.தேவைப்படுமிடத்து சத்திரசிகிச்சை மகப்பேறும் நடைபெறுகின்றது.

➢ குழந்தைகளுக்கான பிரிவு



நொதன் வைத்திசாலையில் குழந்தைகளுக்கான சிகிச்சைகள் குழந்தைகளுக்கான விஷேட வைத்திய நிபுணர்களால் மேற்கொள்ளப்படுகின்றது.

➢ தீவிர சிகிச்சைப் பிரிவு



வட பகுதியில் உள்ள தனியார் வைத்தியசாலைகளில் நொதன் வைத்தியசாலையில் மட்டுமே தீவிர சிகிச்சைப் பிரிவு நடைமுறையில் உள்ளது.

342, பலாலி வீதி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9988, 021 221 9977,021 222 2263 Fax: 021 222 2263
Web : www.nchjaffana.com E-mail: nchjaffna@gmail.com
(C/5455)


# ஹையான் புயலின் கோரத்தால் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்சிற்கு உதவிக்கரம் நீட்டுங்கள்

## ஐ.நாவிடம் வேண்டுகோள்

(மணிலா)

புயலால் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்ஸ் நாட்டிற்கான நிவாரணப் பணிக்கு உதவி செய்யுங்கள் என ஐ.நா. வேண்டுகோள் விடுத்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டைத் தாக்கிய ஹையான் புயலால் 10 ஆயிரம் பேர் வரை இறந்திருக்கலாம் என்று கருதப்படுகின்றது. 6இலட்சத்து 60 ஆயிரம் பேர் தங்கள் இருப் பிடங்களை இழந்துள்ளனர். இவர்களுக் கான சர்வதேச நிவாரணப் பணிகள் வேகமாக ஆரம்பித்துள்ளன.

அமெரிக்காவும், பிரித்தானியாவும் ஆயிரக் கணக்கான வீரர்களுடன் தங்களின் போர்க்கப்பல்களை மீட்பு நிவாரணப் பணிக ளுக்கு அனுப்பியுள்ளன. நிவாரணப் பொருட் கள் ஏற்றி வரும் வாகனங்களை பட்டினியால் வாடும் மக்கள் தாக்கத் தொடங்கியுள்ளனர்.

இதனால் பிலிப்பைன்ஸ் அதிகாரிகள், மோசமாக பாதிக்கப்பட்ட தக்லோபான் நகரில் இன்று கவச வாகனங்களை நிறுத்தியும், சோதனைச் சாவடிகளை அமைத்தும் மக் களை முறைப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள் ளனர்.

செஞ்சிலுவை சங்கமும், கிரசென்ட் இயக்கமும் ஒரு இலட்சம் குடும்பத்தினருக்கு 18 மாதங்களுக்கு உணவு, குடிநீர் மற்றும் இருப்பிடம் போன்றவற்றை ஏற்பாடு செய்ய 95 மில்லியன் டொலர் வரை கோரியுள்ளன.

ஐ.நா. பொதுச் செயலாளரான பான் கீ மூன் வரவிருக்கும் நாட்களில் இந்த உதவியானது விரிவுபடுத்தப்பட வேண்டும் என்று கூறியுள்ளார்.

இந்த உலகளாவிய உதவி முயற்சியில் தைவான் மற்றும் சீனா போன்ற நாடுகளும் தங்கள் வேற்றுமையை ஒதுக்கிவிட்டு உதவி செய்யக் களம் இறங்கியுள்ளன.

அவுஸ்திரேலியாவிலிருந்து புறப்பட்டுள்ள மருத்துவர் குழு ஒன்று 10 மில்லியன் அவுஸ்திரேலியன் டொலர் நிதி உதவியுடன் இன்று பிலிப்பைன்ஸ் சென்று சேரும்.

இதேவேளை புயலால் பாதிக்கப்பட்ட பிலிப்பைன்சுக்கு இந்தியா சார்பில் 15 தொன் நிவாரணப் பொருட்கள் அனுப்பி வைக்கப்பட் டுள்ளன.

இவற்றில் மருந்து - மாத்திரைகள், பால், குடிநீர் போத்தல்கள், உணவு பொருட்கள், போர்வை, கூடாரம், தார்பாய், துணி போன்றவைகளுடன் டில்லியில் இருந்து தனி விமானம் நேற்றுமுன்தினம் இரவு பிலிப் பைன்ஸ் புறப்பட்டுச் சென்றது.

தண்ணீரை சுத்திகரித்து வழங்க கப்பல் அனுப்பவும் இந்தியா முடிவு செய்துள்ளது. அடுத்த கட்டமாக கூடுதல் நிவாரணப் பொருட்கள் அனுப்பப்படும் என்று வெளி யுறவு அமைச்சர் சல்மான்குர்ஷித் கூறி னார். (2)


**வாடகைக்கு**

வேம்படி பாடசாலைக்கு
முன்பாக கடையும் வீடும்
வாடகைக்குண்டு.
தொடர்பு: 0721837075
(4477)



கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து (V)
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா : 60 செவ்: 8 இல்
உயரம்: 168 cm
தகைமை/தொழில்: BIT (Following)
கல்வியியற் கல்லூரி / ஆசிரியர்
தொ.இ: B/2496

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: பரணி
கி.பா : 18.25
உயரம்: 5'8"
தகைமை/ தொழில்: BBA, MBA /
Bank Officer (கனடா)
தொ.இ: B/2498

பிறப்பு: 1983 இந்து (V)
நட்சத்திரம்: ஆயிலியம்
கி.பா : 24 .25 சூரி, செ 4 ல்
உயரம்: 5'5"
தகைமை/ தொழில்: A/L / வங்கி
தொஇ: B/2499

பிறப்பு: 1986 இந்து (V)
நட்சத்திரம்: மகம்
கி.பா : 43
உயரம்: 5'2"
தகைமை/ தொழில்: A/L / NDB
தொ.இ: B/2501

பிறப்பு: 1984 இந்து (V)
நட்சத்திரம்: மூலம் 2
கி.பா : 11
உயரம்: 5'8"
தகைமை/ தொழில்: A/L, CBF, DBF /
Executive Officer
தொ.இ: B/2502

பிறப்பு: 1977 இந்து (V)
நட்சத்திரம்: ரோகினி 4
கி.பா : 11
தகைமை/ தொழில்: A/L
டென்மார்க்(W.P)
தொ.இ: B/2503

பிறப்பு: 1980 இந்து (V)
நட்சத்திரம்: புனர்பூசம்
கி.பா : 31 செவ்: 4இல்
தகைமை/ தொழில்: கல்வியற்கல்லூரி
ஆசிரியர்
தொ.இ: B/2504

பிறப்பு: 1982 இந்து (V)
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா : 13 செவ் 12 ல
உயரம்: 5'3"
தகைமை / தொழில்: A/L, IT /
வியாபாரம் (வெளிநாடு)
தொ.இ: B/2505

சகல தொடர்புகளுக்கும்:-
கல்யாண மாலை
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )
ஊடக அனுசரணை வலம்புரி

## டேவிட் கமரூன் கொல்கத்தா விஜயம்



பிரத்தானியா பிரதமர் டேவிட் கமரூன் இன்று மேற்கு வங்காள மாநில தலைநகர் கொல்கத்தாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

சுமார் 6 மணி நேரம் அங்கு தங்கியிருக்கும் அவர் ஜோகாவில் உள்ள வணிகவியல் கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியில் பங்கேற்பார்.

பின்னர் அகில இந்திய வானொலிக்கு பிரத்தியேக பேட்டியளிக்கும் டேவிட் கமரூன் கொல்கத்தாவில் புதுப்பிக்கப்பட்டு வரும் இந்திய அருங்காட்சியகத்தையும் பார்வையிடுவார். பின்னர் நிறுவன பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் பங்கேற்பார்.

இந்த குறுகிய நேர சுற்றுப்பயணத்தின் போது மேற்கு வங்களா மாநில முதல் மந்திரி மம்தா பானர்ஜியை அவர் சந்திப்பாரா? என்ற உறுதியான தகவல்கள் ஏதுவும் வெளியிடப்படவில்லை. (அ-2)

# மாநாட்டில் பங்கேற்காமைக்கு மன்மோகன் வெட்கப்பட வேண்டும்

## ராவணாசக்தி கூறுகின்றது

தெற்காசியாவின் வல்லரசு என்ற ரீதியில் கொழும்பில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாமை யானது வெட்கப்பட வேண்டிய விடயமாகும். இதனால் இலங்கைக்கு எதுவிதமான பாதகமும் கிடையாது என ராவணா சக்தியின் தலைவர் இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை அவருக்கு இருக்குமானால் மாநாட்டில் கலந்து கொண்டு பிரச்சினைகளை பேசியிருக்க வேண்டுமென்றும் தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பாக இத்தேகந்த சத்தாதிஸ்ஸ தேரர் மேலும் தெரிவிக்கையில்,

மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்து கொள்ளாமையானது இலங்கைக்கு பாதகமானது அல்ல. இதனை அரசாங்கம் பொருட்படுத்தாது மாநாட்டை கோலாகலமாக ஆரம்பித்துள்ளதோடு பல்வேறு நாடுகளின் தலைவர்களும் இளவரசர் சார்ள்ஸூம் கலந்து கொள்கின்றனர்.

இவ்வாறானதோர் சூழ்நிலையில் தெற்காசியாவின் வல்லரசான இந்தியாவின் பிரதமர் இம் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லையென்றால் அது பிரதமர் மன்மோகன் சிங்கிற்கே வெட்கமாகும். எமக்கு எந்தப் பாதிப்பும் கிடையாது.

இலங்கை தமிழ் மக்கள் மீது உண்மையான அக்கறை இருந்திருந்தால் பொது நலவாய மாநாட்டில் மன்மோகன் சிங் கலந்து கொண்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளை பேசியிருக்க வேண்டும். (அ-2)

## புலிக் கொடியுடன் ஓடிய நபரை நாடு கடத்த பிரிட்டன் முடிவு

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டியின் போது மைதானத்தில் புலிக்கொடியுடன் ஓடிய சந்தேக நபரை இலங்கைக்கு நாடு கடத்த பிரித்தானியா நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக குற்றப் புலனாய்வு பிரிவினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த வழக்கு விசாரணை கொழும்பு பிரதான நீதவான் முன்னிலையில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட போதே சி.ஐ.டியினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

மேற்படி கிரிக்கெட் போட்டி ஐக்கிய இராஜ்ஜியதில் கார்டிப் நகர மைதானத்தில் கடந்த ஜூன மாதம் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் சிற்றி லயன்ஸ கழகத்தால் நலிவுறறோருககான அதிர்ஷ்ட இலாபச் சீட்டிழுப்பின குலுக்கல் திகதி இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், தவிர்க்க முடியாத காரணத்தினால் இச் சீட்டிழுப்பில் டிசெம்பர் 14 ஆம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என அதன் தலைவர் லயன் எஸ்.நாகையா அறிவித்துள்ளார். (அ-2)

# ஊழல் போதைப்பழக்கம் போன்று கொடியது - போப் பிரான்சிஸ்

ஊழல்வாதிகளின் கழுத்தில் பாறாங்கல்லை கட்டி கடலில் தூக்கி எறிய வேண்டும் என போப்பாண்டவர் தெரிவித்துள்ளார்.

போப் பிரான்சிஸ் நேற்று முன்தினம் வாடிகன் நகரத்தில் பல்லாயிரக்கணக்கான மக்களிடையே தோன்றி சொற்பொழிவாற்றினார்.

வாடிகன் அரண்மனை மற்றும் கத்தோலிக்க தேவாலயங்களில் பெருகி வரும் ஊழல்களைப் பற்றி விமர்சிக்கும் வகையில் அவர் உரையாற்றினார். அவர்மேலும் கூறுகையில,

வேதாகமத்தில் புதிய ஏற்பாட்டிலுள்ள லூக்கா அத்தியாயத்தில் ஏமாற்றுவேலை இருக்கும் இடத்தில் கடவுளின் தூய ஆவி இருக்க முடியாது என்று கூறப்பட்டுள்ளது.

எனவே தான், ஏமாற்றுக்காரர்களை பூமியில் விட்டுவைப்பதைக் காட்டிலும் அவர்களின் கழுத்தில் மைல் கல்லை கட்டி கடலில் தூக்கி எறிய வேண்டும் என்று இயேசு கிறிஸ்து கூறியுள்ளார். நாட்டையும், மக்களையும் வஞ்சித்து ஊழலின் மூலம் பணத்தை கொள்ளையடித்து அதே பணத்தை தேவாலயங்களுக்கு நன்கொடையாக அளிப்பவர்கள் இரட்டை நிலைப்பாடு கொண்ட வாழ்க்கையை வாழ்பவர்கள்.

அவர்கள் பாவிகள். ஊழல் செய்பவர்கள் எல்லாம் வர்ணப்பூச்சு செய்யப்பட்ட கோபுரத்துக்கு இணையானவர்கள் .அவர்கள் வெளியில் இருந்து பார்ப்பதற்கு பளபளப்பாக தெரிவார்கள். ஆனால், உள்ளே செத்துப் போன எலும்புகளாக, சிதிலமடைந்தே அவர்கள் காணப்படுவார்கள்.

ஊழல் என்பது ஒரு போதைப் பழக்கத்தை போல் கொடியது. ஊழல் செய்யாது வாழ முடியாத சூழ்நிலையை அது உருவாக்கி விடும். ஊழல் செய்வதன் மூலம் கண்ணியத்தை இழக்கும் இவர்கள், தாங்கள் சம்பாதித்த பணத்தை தங்களுடன் கொண்டு செல்வதில்லை. இவ்வாறு அவர் பேசினார். (2)

# இலங்கை முதலீடுகளுக்கு மத்திய வங்கி அங்கீகாரம்

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் செய்யும் ஒவ்வொரு முதலீடும் மத்திய வங்கியின் அங்கீகாரத்துடன் முன்னெடுக்கப்படுவதனால் அவை உத்தரவாதமுடையனவாயுள்ளன.

எனவே வெளிநாட்டவர்கள் இலங்கை வளங்களை உரிய முறையில் பயனபடுத்த முனவர வேண்டுமென வெளிவிவகார அமைச்சர் ஜீ. எல். பீரிஸ் கேட்டுக் கொண்டார்.

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற வர்த்தகப் பேரவை அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கூறுகையில்,

இலங்கை மனிதவளம் நிறைந்ததொரு நாடாகும். முதலீட்டு ஊக்குவிப்புச் சபையானது விசேட பொறிமுறையின் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

முதலீட்டின் பெறுமதிக்கேற்ப சலுகைகள் பெற்றுக் கொடுக்கப்படுகின்றன. வியாபார நட்புறவுடன் கூடிய கலாசாரம் இங்கு காணப்படுகிறது.

பொதுநலவாய உச்சி மாநாடு மற்றும் அதனை முன்னிட்டு வர்த்தக பேரவை என்பன நடத்தப்படகிடத்தமையையிட்டு நாம் பெருமையடைகின்றோம். இலங்கை புவியியல் ரீதியாக இயற்கை வளம் நிறைந்ததொரு நாடாகும்.

கடந்த 30 வருட காலமாக இலங்கையை ஆக்கிரமித்து வந்த பயங்கரவாதம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இது தற்செயலாக இடம்பெற்றதொரு சம்பவமாகாது என்றார். (அ-2)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விவசாய பீடம், கிளிநொச்சி

நூற்றாண்டுக்கான உயர்கல்வி (HETC) வேலைத்திட்டம்

**பண்ணைத் தொழிலாளி - கால்நடைப் பண்ணை (ஒப்பந்த அடிப்படையில்)**

**பண்ணைத் தொழிலாளி - பயிர்ப் பண்ணை (ஒப்பந்த அடிப்படையில்)**

விவசாயக் கல்வி நிகழ்ச்சி இணைப்பாளரின் வழிநடத்தலின் கீழ் செயற்படுவதற்கு மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் தகுதியான விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**தேவையான தகைமைகள் :**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தி அடைந்திருத்தல்.
2. கால்நடை மற்றும் பயிர்ப் பண்ணைகளில் பணி புரிந்தமை, அவற்றின் பராமரிப்பு தொடர்பான அனுபவம்.
3. பண்ணைப் பணிகளைச் செய்யக்கூடிய உடல் தகுதி.
4. தேவையேற்படுமிடத்து, மேலதிக நேரம் பணிபுரியத் தயாராக இருத்தல்.
5. அர்ப்பணிப்புடன் பணிபுரிதல்.
6. கடமைகளை சுயமாக முன்னெடுத்து செயற்படுத்தக் கூடியவராக இருத்தல்.
7. வேலைத்தளத்தில் நல்லுறவு பேணக்கூடியவராக இருத்தல்.

**வேதனம் :** நாளொன்றுக்கு ரூபா 750/= கூலியாக வழங்கப்படும். மாதமொன்றுக்கு இருபத்திரண்டு (22) வேலைநாட்கள் எனக் கணிப்பிடப்படும்.

**ஒப்பந்த காலம் :** முதற் சந்தர்ப்பத்தில் ஒரு வருடத்திற்கு ஒப்பந்தம் செய்யப்படும். பணி திருப்திகரமாக இருப்பின் மேலும் 1-2 வருடங்களுக்கு ஒப்பந்தகாலம் நீடிக்கப்படும்.

**தெரிவு :** நேர்முகத்தேர்வு மூலம். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி உடனடியாக கடமைகளைப் பொறுப்பேற்கத் தயாராக இருத்தல் வேண்டும்.

தகுதியான விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்ப படிவங்களை யாழ் பல்கலைக்கழக செயற்பாட்டு தொழில்நுட்ப அலுவலகத்தில் (OTS) பெற்று விண்ணப்பப் படிவத்தைப் பூர்த்திசெய்து கொண்டு, நேரடியாக 25 கார்த்திகை 2013 அன்று காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அவைக்கூடத்தில் (Board Room) நடைபெறும் நேர்முகத் தேர்வுக்கு சகல அவசியமான ஆவணங்களுடன் சமுகமளிக்கவும். சிபாரிசுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



## கண்ணீர் அஞ்சலி



திரு.நாகராஜா
கணபதிப்பிள்ளை

யாழ்.போதனா வைத்தியசாலையின்
என்பு முறிவு வைத்திய நிபுணர்
டாக்டர் க.உமாபதி அவர்களின்
அன்புத் தந்தையாரான

**நாகராஜா கணபதிப்பிள்ளை**

அவர்களின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று
ஆழ்ந்த கவலையடைவதோடு அன்னாரது
குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்குகொண்டு அவரது
ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றோம்.

சென்ஜோன் அம்புலன்ஸ் யாழ்.மாவட்ட ஆணையாளர்,
உத்தியோகத்தர்கள், தொண்டர்கள்


(4478)

# இலங்கை இராணுவத்திற்கு எதிராக மட்டும் காணொளிகளைத் தயாரிக்கவில்லை

## மனம் திறக்கிறார் கெல்லம் மக்ரே

(கொழும்பு)

**இலங்கை இராணுவத்திற்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள போர்க்குற்றங்கள் தொடர்பாக மட்டுமே விசாரணை நடத்த வேண்டும் என தாம் கூறவில்லையெனவும் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் தொடர்பிலும் உடனடியாக சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என சனல் 4 தொலைக்காட்சியின் ஊடகவியலாளர் கெல்லம் மக்ரே தெரிவித்துள்ளார்.**



கொழும்பில் நேற்றுமுன் தினம் ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிடுகையி லேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துரைக்கையில்,

இலங்கை இராணுவத்திற்கு எதிராக மாத்திரமல்ல அமெரிக்கா, பிரித்தானியா ஆகிய நாடுகள் மேற்கொண்ட போர்க்குற்றங்கள் குறித்தும் வசாரணை நடத்தப்படவேண்டும்.

இலங்கைக்கு எதிரான நிகழ்ச்சி நிரல் என்னிடம் இல்லை. புலிகள் அமைப்பும் போர்க்குற்றங்களை செய்தது என்பதை ஏற்றுக்கொள்கிறேன். பிரித்தானிய பிரஜையான நான் பிரித்தானியா ஈராக்கில் செய்த போர்க்குற்றங்கள் குறித்த தகவல்களை வெளிப்படுத்தினேன்.

சனல் 4 தொலைக்காட்சியின் ஆவணப்படங்களுக்கு முதலில் ஜேர்மனியிலுள்ள இலங்கையின் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பிலுள்ள சிங்கள மற்றும் தமிழ் ஊடகவியலாளர்களே பங்களிப்பை வழங்கினர்.

அந்த அமைப்பின் பின்னணி குறித்து நான் ஆராயவில்லை. புலிகளின் ஒப்பந்தகாரன் என்று என்னை குற்றம் சுமத்துகின்றனர். எனினும் நான் ஒரு ஊடகவியலாளன். ஆய்வு ரீதியான செய்திகளை தேடுவதே எனது பணி.

ஐக்கிய நாடுகளின் அறிக்கையின் படி 40 ஆயிரம் பேர் இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் கொல்லப்பட்டுள்ளனர். எனக்கு கிடைத்துள்ள தகவல்களின் படி 70 ஆயிரம் பேர் காணாமற் போயுள்ளனர். இவர்களை கண்டறிய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

எத்தனை பேர் காணாமற் போயினர் என்பது எம்மில் எவருக்கும் தெரியாது. இதனால் தான் அதனை கண்டறிய வேண்டும்.

விடுதலைப் புலிகள் மீது குற்றத்தை சுமத்தி அரசாங்கம் தப்பித்துக் கொள்ள முயற்சிக்கக் கூடாது. இலங்கையின் இறுதிக்கட்ட யுத்தத்தில் இராணுவத்தினரால் பொதுமக்கள் கொல்லப்பட்டமையே அதிகம். இதற்கான சுயாதீனமான விசாரணைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டும. யுத்தக்குற்றத்தில் அதிகளவான பங்கை இலங்கை இராணுவத்தினர் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

வடமாகாணத்திற்கான விஜயத்தை மேற்கொளளும் எவ்வித திட்டமும் எமக்கில்லை. நாம் அரசாங்கத்திற்கு எதிராக செயற்படுவதாக நினைத்து அரசாங்கம் எம்மை எதிர்க்கக்கூடாது என்றும் அவர் கூறினார்.

நாம் விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு சார்பாகவோ அல்லது எவ்வித நிறுவனங்களின் பின்னணியிலேயோ செயற்படவில்லை. இலங்கையில் விடுதலைப் புலிகளினால் இடம்பெற்ற யுத்தக் குற்றங்கள் தொடர்பிலும் நாம் ஆராய்ந்து வருகின்றோம்.

எனவே, எம்மை பக்கச் சார்பானவர்கள் என குறிப்பிடுவதில் எந்த உண்மையுமில்லை. ஆனால், அரசாங்கம் விடுதலைப் புலிகளின் பெயரைச சொல்லி தமது குற்றங்களை மறைத்து விடக்கூடாது.

இராணுவத்தினர் அதிகளவில் போர்க் குற்றங்களை செய்துள்ளனர் என்பதற்கான சர்வதேச ஆதாரங்களை வைத்துக் கொண்டேதான் நாம் செயற்படுகின்றோம்.

அதேபோல் இலங்கையில் பொதுநலவாய அரச தலைவர்கள் உச்சி மாநாட்டு காலப்பகுதியில் எவராலும் எவ்விதமான ஆர்ப்பாட்டங்களும் இடம்பெறாதென அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது.

எனினும் இங்கு நாம் வந்த போது நிலைமை தலைகீழாக இருந்து. எதிரணிகள் அரசுக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்யக் கூடாது என குறிப்பிட்டவர்களே எமக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்கின்றமை கேள்விக்குரியதான விடயமாகவுள்ளது.

சனல்-4 காணொளிகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் எம்மீது பொய்க்குற்றங்களை சுமத்தியுள்ளன. ஆனால், எமக்குக் கிடைத்த காணொளிகள் அனைத்தும் உண்மையானவை.

நாம் நீண்ட காலமாக ஆய்வுகளை மேற்கொண்டும் உயர் தொழில்நுட்ப வசதிகள் மூலமும் இந்த காணொளிகள் குறித்து ஆராய்ந்து யுத்தக் குற்ற காணொளிகளைத் தயாரித்துள்ளோம்.

இவற்றை ஐக்கிய நாடுகள் சபையும் பல கோணங்களில் விசாரித்து உறுதிப்படுத்தியுள்ளது. எனவே இவற்றை அடிப்படையாக வைத்தே நாம் யுத்தக் குற்றங்கள் தொடர்பில் ஆராய ஆரம்பித்துள்ளோம்.

அதேபோல் உச்சி மாநாடொன்றில் கலந்து கொள்ளும் ஓர் ஊடகவியலாளராகவே நான் இலங்கைக்கு வந்துள்ளேன். நாம் இங்கு சுயாதீனமாக செயற்படுவதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

எனவே நாம் இங்கிருந்து செல்லும் வரையில் எமக்கான முழு ஒத்துழைப்பையும் அரசாங்கம் வழங்கும் என அவர் குறிப்பிட்டார். (அ-2)

## யாழ்.மத்திய கல்லூரியில் தொழிற்சந்தை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட செயலகத்தின் மனிதவலு வேலைவாய்ப்புத்திணைக்களப் பிரிவினால் யாழ். மாவட்டத்தில் வேலை வாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்புக்கள் மற்றும் தொழிற் பயிற்சி வாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் மாபெரும் தொழிற்சந்தை நிகழ்வு எதிர் வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் பிற்பகல் ஒரு மணி வரை யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இத்தொழிற்சந்தை நிகழ்வில் உள்நாட்டு, வெளி நாட்டு தொழில் வெற்றிடங்களுக்கான ஆளணியினரை தேர்வு செய்வதற்காக அரச, தனியார் துறையைச் சேர்ந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனங்கள், ஆடைத் தொழிற் சாலைகள், தொழிற் பயிற்சி அதிகாரசபை (VTA ), உயர் தொழில்நுட்ப நிறுவனம் (ATI), Cargills, காப்புறுதித் துறை நிறுவனங்கள், ஹோட்டல்கள், பாதுகாப்பு சேவை நிறுவனங்கள், நிதி நிறுவனங்கள், கணினி நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் உற்பத்தி நிறுவனங்கள் வருகைதரவுள்ளன.

எனவே, தொழில்வாய்ப்புக்காக காத்திருக்கும் அனைவரும் இவ்வரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது உரிய நேரத்தில் தங்கள் சுய விபரக் கோவை மற்றும் ஆவணங்களுடன் பங்குபற்றி பொருத்தமான வேலைவாய்ப்புக்கள், தொழிற் பயிற்சி வாய்ப்புக்களை பெற்று பயனடையுமாறு கோரப்பட்டுள்ளது.

இச்சேவையினூடாக தங்களுக்கான ஆளணியினரை பெற்றுக் கொள்ள விரும்பும் நிறுவனங்கள் மற்றும் மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-2219359 என்ற அலுவலக தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கேட்டுள்ளார். (அ)

## படையினரின் அநாகரிகமான செயலுக்கு மக்கள் எதிர்ப்பு

(யாழ்ப்பாணம்)

பாடசாலை மாணவிகளோடு அநாகரிகமான முறையில் நடந்து கொண்ட படையினருக்கு எதிராக பொதுமக்கள் ஒன்றுதிரண்டு எதிர்ப்பை வெளிக்காட்டியுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று காலை 8 மணியளவில் மாவை கலட்டியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அப்பகுதியைச் சேர்ந்த மாணவிகள் இராணுவத்தின் காவலரண் அருகே உள்ள வீதியில் சென்று கொண்டிருந்துள்ளனர்.

இதன்போது அங்கு நின்ற படையினரில் ஒருவர் குறித்த பாடசாலை மாணவிகளுடன் தப்பான நோக்குடன் அநாகரிகமாக நடந்து கொண்டுள்ளார்.

இச்செயலைக் கண்டு அஞ்சிய மாணவிகள் பாடசாலைக்குச் செல்லாது தங்களது வீடுகளுக்குச் சென்று பெற்றோர்களிடம் முறையிட்டுள்ளனர்.

உடனடியாக அம் மாணவிகளினது பெற்றோரும் அயலவர்களும் கூடி இராணுவத்தினர் இருந்த இடத்திற்கும் சென்று இராணுவத்தினருக்கு எதிராக தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர். (அ-4)


# அரசாங்க அறிவித்தல்

## வழங்குநரை பதிவு செய்தல் - 2014
## மாவட்டச் செயலகம், கிளிநொச்சி

கிளிநொச்சி மாவட்ட செயலகம், கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்கள் என்பவற்றுக்கு 2014 ஆம் ஆண்டுக்கு கீழ்க் குறிப்பிடப்படும் பொருட்கள், சேவைகளை விநியோகிப்பதற்கான வழங்குநர்களை பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பதிவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவங்களை மாவட்ட செயலக கணக்குக் கிளை, பிரதேச செயலகங்கள் என்பவற்றில் 2013.11.15 - 2013.11.29 வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 02.12.2013 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கடித உறையின் (9''X4'') இடது பக்க மேல் மூலையில் 'வழங்குநரைப் பதிவு செய்தல் - 2014 எனக் குறிப்பிட்டு 'அரசாங்க அதிபர், கணக்குக்கிளை, மாவட்டச் செயலகம், கிளிநொச்சி' என்னும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். நேரடியாக கையளிப்பதாயின் மாவட்டச் செயலகத்தின் கணக்குக் கிளையில் சமர்ப்பித்தல் வேண்டும்.

**வழங்கல் சேவைகள் விபரம்**

- காகிதங்கள், எழுது பொருட்கள்
- மர உருக்கு, பிளாஸ்டிக், பைபர் கிளாஸ், தளபாடங்கள் வழங்கலும், திருத்துதலும் பராமரித்தலும்
- இலத்திரனியல், மின்சாரப் பொருட்கள், உதிரிப்பாகங்கள் வழங்கலும் திருத்தலும் பராமரித்தலும்
- சுத்திகரிப்பு சேவை, சுத்திகரிப்பு பொருட்கள்
- கட்டட நிர்மாணம், திருத்த வேலைகள் செய்தல், தீந்தை (பெயின்ற்), ஹாட்வெயர் பொருட்கள் வழங்கல்
- மோட்டார் வாகனங்கள் திருத்தம், பராமரிப்பு செய்தல், வாகன உதிரிப்பாகங்கள் வழங்கல்
- குடிநீர், பால்மா, மென்பானம் உணவு வகைகள்
- திரைச் சீலைகள், சீருடைகள், மேசை விரிப்புகள், நில விரிப்புகள், மேசை கண்ணாடிகள்
- தோல் வகை, உற்பத்திப் பொருட்களும், விளையாட்டுப் பொருட்களும்
- அச்சிடுதல், புத்தகம் கட்டுதல், இறப்பர் முத்திரைகள், திகதி முத்திரைகள், பிளாஸ்ரிக் பெயர்ப் பலகைகள், அடையாள அட்டைகள் செய்தல்
- நீர் விநியோக பொருத்துக்கான பொருட்கள், நுகர்வுப் பொருட்கள் வழங்கள்
- மின் இணைப்பு திருத்துநர், நீர்க்குழாய் பொருத்துநர், அலுமினிய பொருத்துநர்கள்

**திருமதி றூ.கேதீஸ்வரன்,**
அரசாங்க அதிபர்,
மாவட்டச் செயலகம், கிளிநொச்சி.

(சி-5450)


0779932692




## பெரிய பரிசு

..."அரசே, ஒரு நாட்டை ஆளும் மன்னர் எப்படி இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை விளக்கும் பழம் புளியம்பழம் ஒன்று தான். மன்னராக இருப்பவர உலகம் என்ற புளிய மரத்தில் காய்க்கும் பழத்தைப் போன்றவர். அவர் பழத்தின் சுவையைப்போல இனிமை



யானவராக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஆசாபாசங்கள் என்ற புளியம்பழ ஓட்டில் ஒட்டாமலும் இருக்க வேண்டும் என்பதை விளக்கவே இந்த புளியம்பழத்தைப் பரிசாகக் கொண்டு வந்தேன். புளியம்பழமும் ஓடும்போல இருங்கள்" என்றான்.

அவையினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.

மன்னர் தன் ஆசனத்தைவிட்டு எழுந்து வந்து தெனாலிராமனைத் தழுவிக் கொண்டு, "ராமா எனக்குச் சரியான புத்தி புகட்டினாய். ஒரு பிறந்த நாள் விழாவிற்கு இத்தனை ஆடம்பரம் தேவையில்லை. பொக்கிஷப் பணமும், பொது மக்கள் பணமும் வீணாகும்படி செய்து விட்டேன். உடனே விசேடங்களை நிறுத்துங்கள். இனி என் பிறந்தநாளன்று கோயில்களில் மட்டுமே அர்ச்சனை ஆராதனை செய்யப்பட வேண்டும். அவசியமில்ல்ாமல் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்யக் கூடாது." என உத்தரவிட்டார்.

தெனாலிராமனின் துணிச்சலையும் சாதுரியத்தையும் அனைவரும் பாராட்டினர்.

அரசர் தனக்கு வந்த பரிசுப் பொருள்களில் விலை உயர்ந்தவற்றைத் எடுத்து தெனாலிராமனுக்குப் பரிசாகத் தந்தார். **(முற்றும்)**

⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙

## எலி பாடிச்சா?

ரொம்ப வருடத்துக்கு முன்னர், காட்டுல வயசான தாத்தாவும் பாட்டியும் இருந்தாங்க. தினமும் காட்டுல இருக்கிற மரங்களை வெட்டி, விறகாக்கி அதை பக்கத்து கிராமத்தில விற்று வந்தார் தாத்தா.

ஒருநாள் மதியம் மிகவும் களச்சு போய் சாப்பிட உக்காந்தார்.

பாட்டி அவருக்கு கேழ்வரகு களி கொடுத்து அனுப்பி இருந்தாங்க.

களிய கையில எடுத்ததும் களி தவறி கீழ விழுந்து உருண்டு ஓடிடுச்சு. பாவம் தாத்தா, அந்த தள்ளாத வயசுல களிய துரத்திட்டு ஓடினார்.

களி ஒரு பொந்துக்குள்ள விழுந்துடுச்சு. அது எலி பொந்துபோல இருந்துச்சு. அய்யோ இனி சாப்பாட்டுக்கு என்ன செய்யறதுன்னு யோசிச்சார். நல்ல பசியாகவும் இருந்துது.

அப்போ திடீர்னு ஒரு அழகான எலி எட்டி பார்த்து.. "மிக்க நன்றி தாத்தா" அப்படின்னு சொல்லுச்சு. அட எலி பேசுதேன்னு பாத்தாரு.

"நல்லா சாப்பிடுங்க எலி. அழகா இருக்கிறீங்களே"ன்னு சொன்னாரு. எலி சிரிச்சிட்டு.." நீங்க எங்க அரண்மனைக்கு வாறீங்களா?" ன்னு கேட்டுச்சு எலி.

"இந்த சின்னப் பொந்துக்குள்ள நான் எப்படி வர முடியும்"ன்னு தாத்தா கீழே இருந்திட்டாரு. கால் வலி இருந்துச்சு போல. "என் வாலை பிடிச்சிக்கோங்க தாத்தா. கண்ணை மூடிக்கோங்க"ன்னு சொல்லுச்சு எலி. வாலை பிடிச்சிகிட்டார். கண்ணை மூடிக்கிட்டார்.

எங்கேயோ பறக்கிற மாதிரி இருந்துச்சு தாத்தாவுக்கு. "தாத்தா வாங்க... வாங்க" அப்படின்னு சத்தம கேட்டு கண்ணைத் தொறந்தார் தாத்தா. எலிக்களோட அரண்மனை தான் அது.

அங்கு நிறைய தங்கம் இருந்தது. எலிகள் சமைத்துக்கொண்டிருநதது. சில எலிகள் ஓடி, ஆடி விளையாடிட்டு இருந்துச்சு. சில எலிகள் சாப்பாட்டு பொருள்களை எங்கிருந்தோ எடுத்துட்டு வந்துச்சு. எங்க பாத்தாலும் தங்கமா இருந்துச்சு.

பெண் எலி ஒன்னு வந்து "தாத்தா உங்களுக்கு பசிக்கும், இந்தாங்க சாப்பாடு"ன்னு சாப்பாடு கொடுத்தது.

எலிகள் எல்லாம் பாட்டு பாடிட்டு இருந்துச்சு..

*"நாங்கள் இங்கே எலிகள்!*
*நல்ல நல்ல எலிகள்!*
*பூனை சத்தம் வேண்டாமே!*
*எங்கும் அமைதி வேண்டுமே!*
*திலக்கலக்கா திலக்கலக்கா!"*

தாத்தா பாட்டு கேட்டுகிட்டே சந்தோஷமா சாப்பிட்டார். ராஜாபோல இருந்த எலி ஒன்னு தாத்தாவுக்கு மூட்டை நிறைய தங்கம் கொடுத்து அனுப்பிச்சாம். மறுபடியும் அதே எலி வாலை புடிச்சிக்கிட்டு, கண்ணை மூடிக் கொண்டு பறந்து தன் வீட்டுக்கு வந்துட்டார் தாத்தா.

வீட்டுக்கு வந்த தாத்தா, அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை பாட்டிகிட்ட சொன்னாரு. தங்கத்தை எல்லாம் காட்டினார்தாத்தா.

பக்கத்து வீட்டில இருந்த ஒருத்தன் இதை எல்லாம் கேட்டான். அதே பொந்திற்கு போய் ஒரு களி உருண்டைய போட்டான்.



அதே எலி வந்துச்சு, அதேபோலவே அவனை அவங்க அரண்மனைக்கு கூட்டிட்டு போச்சு.

*"நாங்கள் இங்கே எலிகள்*
*நல்ல நல்ல எலிகள்*
*பூனை சத்தம் வேண்டாமே*
*எங்கும் அமைதி வேண்டுமே*
*திலக்கலக்கா திலக்கலக்கா"*

எலிகள் பாடும் சத்தம்.

அரண்மனையில எங்க பாத்தாலும் தங்கமா இருந்துச்சாம். இவனுக்கு பேராசை. ஒரு மூட்டை தங்கம் மட்டும் பத்தாது, இதை எல்லாம் எடுத்துக்க லாம்ன்னு யோசிசசான். பெண் எலி இவனுக்கு சாப்பாடு எடுத்துவரும்போது "மியாவ் மியாவ்" என சத்தம் போட்டான். எல்லா எலியும் பயந்து எங்க போச்சுன்னே தெரியல. கொஞ்ச நேரத்தில ஒரு எலியும் அரண்மனையில் இல்ல.

எல்லா தங்கத்தையும் அள்ளி எடுத்தான். ஆனா அங்கிருந்து எப்படி வெளிய போறாதுன்னு தெரியல. இருட்டா மாறிடுச்சு. கத்தி அழுது பாத்தான். ஒருத்தரும் வரல. தான் செய்த தவறை நினைத்து வருந்தினான்.

⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙⊙




- 1885-செர்பியா பல்கேரியா மீது போர் தொடுத்தது.
- 1889-நெல்லிபிளை என்ற பெண் ஊடகவியலாளர் 80 நாட்களுக்குள் உலகைச் சுற்றிவரும் தனது திட்டத்தை 72 நாட்களுக்குள் வெற்றிகரமாக முடித்தார்.
- 1918-செக்கொஸ்லவாக்கியா குடியரசாகியது.
- 1922-பிபிசி தனது வானொலி சேவையை ஐக்கிய இராச்சியத்தில் தொடக்கியது.
- 1940-இரண்டாம் உலகப்போர்: லண்டனில் கவெண்ட்ரி நகரம் ஜேர்மனியரின் குண்டுவீச்சில் பலத்த சேதமடைந்ததுடன் கவெண்ட்ரி தேவாலயம் முற்றாக அழிந்தது.
- 1956-ஹங்கேரியில் போர் முடிவுக்கு வந்தது.
- 1963-ஐஸ்லாந்து தீவின் அருகில் உள்ள சூர்ட்ஸி என்னும் தீவு வட அட்லாண்டிக் கடலில் எழுந்த எரிமலையால் புதிதாகத் தோன்றியது.
- 1965-வியட்நாம் போர்: லா ட்ராங் என்ற இடத்தில் அமெரிக்கப்படைகளுக்கும் வடக்கு வியட்நாம் படைகளுக்கும் இடையில் பெரும் போர் வெடித்தது.
- 1969-அப்பல்லோ திட்டம்: அப்போலோ 12 விண்கப்பல் மூன்று விண்வெளி வீரர்களுடன் சந்திரனை நோக்கிச் சென்றது.
- 1971-மரைனர் 9 செவ்வாய் கோளைச் சென்றடைந்தது. இதுவே பூமியில் இருந்து வேறொரு கோளின் செயற்கைச் செய்மதியாகச் செயற்பட்ட முதலாவது விண்கலமாகும்.
- 1975-மேற்கு சகாராவை விட்டு ஸ்பெயின் விலகியது.
- 1990-கிழக்கு ஜேர்மனி மற்றும் மேற்கு ஜேர்மனிகளின் இணைப்பிற்குப் பின்னர் போலந்துக்கும் ஜேர்மனிக்கும் இடையிலான எல்லைகள் வரையறுக்கப்பட்டன.
- 1991- நாடு கடந்த நிலையில் வாழ்ந்த கம்போடியாவின் இளவரசர் நொரொடோம் சிஹானூக், 13 ஆண்டுகளின் பின்னர் புனோம் பென்னுக்கு திரும்பினார்.
- 1996-டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 2001-ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலை ஆப்கான் கூட்டுப்படைகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தன.

**பிறப்புக்கள்**

- 1840-குளோட் மொனே, பிரெஞ்சு ஓவியர் (இ.1926)
- 1889-ஜவகர்லால் நேரு, இந்தியப் பிரதமர்(இ1964)
- 1930-எட்வேர்ட் வைட், நாசா விண்வெளி வீரர் (இ.1967)
- 1931-இரா.பெருமாள் ராசு, இந்தியக் கவிஞர்
- 1954-கொண்டலீசா ரைஸ், ஐக்கிய அமெரிக்காவின் 66ஆவது செயலாளர்
- 1971-அடம் கில்கிறிஸ்ற், ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்

**இறப்புக்கள்**

- 1831-ஹெகல், ஜேர்மன் நாட்டு மெய்யியல் அறிஞர் (பி.1770)

**சிறப்புநாள்**

இந்தியாவின் குழந்தைகள் தினம்
உலக நீரிழிவு நோய் தினம்

### ஜவகர்லால் நேரு



ஜவகர்லால் நேரு 1889 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி பிறந்தார். இவர் இந்தியாவின் முதல் பிரதமர் ஆவார். இவர் பண்டிட் நேரு, பண்டிதர் நேரு என்னும் பெயர்களாலும் அழைக்கப் பெற்றார்.

இந்தியா, 1947 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 15 அன்று ஆங்கிலேயர்களிமிருந்து விடுதலை பெற்றபோது அதன் முதலாவது தலைமை அமைச்சராகப் பதவியேற்றார். 1964, மே 27 இல் காலமாகும் வரை இப்பதவியை வகித்து வந்தார்.

இந்திய சுதந்திர இயக்கத்தின் முன்னோடியான நேரு, காங்கிரஸ் கட்சியினால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1952, இல் இந்தியாவின் முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் வெற்றி பெற்றதும் சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக பதவி ஏற்றார். அணிசேரா இயக்கத்தை உருவாக்கியவர்களில் ஒருவரான நேரு, போருக்குப் பின்னான காலத்தில் அனைத்து உலக அரசியலில் மிக முக்கிய நபரானார்.

# மனதை கூர்மைப்படுத்துங்கள்!



**ஆன்மீகம் 37**

கேள்வி:- எவ்வளவுதான் முயன்றாலும் இறந்த காலத்தில் செய்த பிழைகள், தவறுகள் மீண்டும் மீண்டும் நினைவுக்கு வந்து தாங்க முடியாத வருத்தத்தில் தள்ளுகின்றன. இதிலிருந்து மீள வழி இல்லையா?

சத்குரு:-அனேகமானவர்கள் என்னிடம் தங்கள் குழந்தைகளைக் கூட்டி வந்து நிறுத்துவார்கள். சத்குரு, இவனுக்கு ஞாபகசக்தி குறைவாக இருக்கிறது. அதை நிவர்த்தி செய்து விடுங்கள் என்பார்கள்.

பழசெல்லாம் ஞாபகம் இருப்பதால்தானே நீங்கள் இப்படிக் கஷ்டப்படுகிறீர்கள்? எல்லாம் மறந்து போனால் நல்லதுதானே? நேற்று பள்ளிக்கூடத்தில் நடந்தது ஒன்றும் ஞாபகம் இல்லாமல் உங்கள் பையன் ஆனந்தமாகத்தானே இருக்கிறான்? என்று வேடிக்கையாகச் சொல்வேன்.

உங்கள் தாய், தந்தை, கணவன், மனைவி, குழந்தை, தொழில் எதுவானாலும் உங்களுடைய ஞாபகசக்தி காரணமாகத்தானே அடையாளம் காணமுடிகிறது? அதேபோல் உங்கள் சாதி, மதம் அந்தஸ்து எல்லாமே ஞாபகப் பதிவுகள் தானே? ஞாபக சக்தியும் கற்பனையும் கூடாது என்று சொல்லவில்லை. ஆனால், அவை மனதின் மிக அடி நிலையில் உள்ள சக்தி. அந்த நிலையிலேயே மனதைப் பயன்படுத்தினால் இறந்தகாலம் என்பது நம் வாழ்க்கையின் நிகழ்காலமாகி விடும்.

கடற்கரையில் இருக்கிறீர்கள். சிலுசிலுவென்று காற்று பிரமாதமாக வீசுகிறது. ஆனால், அதை அனுபவிக்காமல், பத்து நாட்களுக்கு முன்னால் நடந்த அசம்பாவிதம் பற்றியே புத்தி, சிந்தனை செய்கிறது. இந்தக் கணத் தின் சுகம் கிடைக்காமல்போகிறது. பழைய வேதனையை அதற்கான சூழ்நிலை இல்லாதபோதிலும் மறுபடி அனுபவிக்கிறீர்கள்.

ஜப்பானில் இருந்து வருபவர்களிடம் ஒரு விசித்திர நோய் இருக்கும். ஒரு வீட்டில் இருந்து நான்கு பேர் சுற்றுலா வந்தால் நான்கு பேரிடமும் தனித்தனி கேமரா இருக்கும். மலையை, நதியை, சூரிய உதயத்தை, அஸ்தமனத்தை எதையும் நேரடியாக அனுபவிக்காமல் கேமரா வழியே கவனிப்பதிலேயே நேரம் செலவுசெய்வார்கள்.

துருக்கி சென்றிருந்தேன். அங்கே வெப்பக் காற்றை நிரப்பிய பலூன்கள் மேலே பறக்கையில், அதை ஆழ்ந்து அனுபவிக்காமல் நான்கைந்து ஜப்பானியர்கள் கேமரா வழியே படம் எடுப்பதிலேயே குறியாக இருந்தார்கள்.

கண்கள் இப்படிச் சிறைப்பட்டுப் போனதில், ஒருவர் தவறாக பின் நகர்ந்து, கிட்டத்தட்ட முப்பதடி உயரத்திலிருந்து தவறி விழுந்தார். தோள்பட்டையில் எலும்பு முறிவோடு அவரைத் தூக்கிப்போனார்கள். தலத்தில் அனுபவிப்பதைவிடுத்து, வீட்டில் போய் நினைத்துச் சந்தோஷப்படுவதற்கு என்ன இருக்கிறது என்று எனக்குப் புரியவில்லை.



உலகத்தில் பொதுவான பிரச்சினையாக இருப்பதே. இந்த மனதை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாமல் இருப்பதுதான். இறந்த காலத்தை நினைத்தபடி உயிர் இல்லாத ஒன்றுக்கு உயிர் கொடுக்க முயற்சி செய்தால் உயிரோடு இருப்பதுகூட உயிர் அற்றதாகிவிடும்.

இப்படி மனதை மிக மிக அடி நிலையிலேயே உபயோகப்படுத்திவராமல் நினைவாற்றல், கற்பனை இரண்டையும் கொஞ்சம் தள்ளி வைத்துவிட்டு மனதைப் பயன்படுத்தினீர்கள் என்றால் அது எப்பேர்ப்பட்ட கூர்மையான கருவி என்று உணர்வீர்கள். உங்கள் அனுபவத்தில் இல்லாத பரிமாணங்கள் கூட உங்கள் அனுபவத்தில் வந்து சேரும். அதற்காகத்தான் தியானம் என்று கொண்டு வந்தார்கள். உண்மையில் எந்தக் கணத்திலும் ஆனந்தமாக இருப்பது எல்லாவற்றையும்விட மிக முக்கியமானது இல்லையா? உங்கள் வாழ்க்கையில் ஆனந்தம்தான் முக்கியம் என்று நினைத்தால் அதுபற்றி மட்டுமே உங்கள் மனம் செயற்படட்டும்! சரி செய்வோம். (தொடரும்)

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# இலங்கை, இந்திய தமிழக தலைவர்களுக்கு அரசியல் ஆயுதமாகிவிட்ட சோகம்!

இலங்கை மண்ணில் நடைபெறும் இதே மாநாட்டில் வைத்து மனித உரிமை விடயத்தில் இலங்கை கண்டிக்கப்படும் அபாயமும் இல்லாமல் இல்லை. மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்ற புலம்பெயர் தமிழர்களின் பெரும் நெருக்குதலின் மத்தியில் மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்கனவே அதை கோடிட்டுக் காட்டியுள்ளது. நாம் கடும் செய்தியுடனேயே மாநாட்டுக்குச் செல்கிறோம் என கடந்த ஒக்டோபர் 31ஆம் திகதி பிரிட்டிஷ் வெளியுறவு மற்றும் பொதுநலவாய அலுவலகள் தொடர்பான செயலாளர் ஹியூகோ ஸ்வயர் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் வைத்துக் கூறியிருந்தார்.

மனித உரிமை விடயத்தில் இலங்கை அரசாங்கத்திற்கு கிடைக்கப் போகும் அங்கீகாரத்தை தடுப்பதற்காகவே தமிழ் நாட்டுத் தலைவர்கள் இலங்கையில் மாநாடு நடைபெறக் கூடாது என்றும் நடைபெற்றால் இந்தியா அதனை பகிஷ்கரிக்க வேண்டும் என்றும் அதுவும் முடியாவிட்டால் இந்திய பிரதமர் மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்றும் கூறி வருகின்றனர்.

ஆனால் இந்த நிலைப்பாடானது இலங்கை தமிழர்களையே பாதிக்கக் கூடும் என இலங்கையில் நிலைகொண்டிருந்த இந்திய சமாதானப் படையின் பிரதம புலனாய்வுத் துறை அதிகாரியாகவிருந்து தற்போது சென்னையில் அரசியல் ஆய்வாளராகவிருக்கும் கேர்ணல் ஆர். ஹரிஹரன் வாதிடுகிறார். மாநாட்டில் இந்திய பிரதமர் கலந்து கொள்ளாவிட்டால் அது தம்மை இழிவுபடுத்திய செயல் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கருதலாம் எனவும் அது ஏற்கனவே சீனாவுடன் நெருங்கிப் பழகும் இலங்கையை மேலும் சீனாவின் பக்கம் தள்ளிவிடும் என்றும் நற்பு ரீதியாகவே இலங்கையின் மீது செல்வாக்கு செலுத்தக் கூடிய தன்மையை இந்தியா இழந்து விடும் என்றும் அவர் வாதிடுகிறார்.

இதே வாதத்தை இந்திய வெளியுறவுத்துறை அமைச்சின் அதிகாரிகளும் முன்வைக்கின்றனர். இந்த நற்பு ரீதியான செல்வாக்கின் மூலமே 13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை ரத்துச் செய்யவும் பின்னர் மாகாண சபைகளின் அதிகாரங்களை பறிக்கவும் இலங்கை அரசாங்கம் எடுத்த முயற்சியை இந்தியா தடுத்தது என அவ் அதிகாரிகள் வாதிடுகிறார்கள்.




இலங்கை அரசாங்கமும் சீனாவின் பக்கம் சாய்ந்து இந்தியாவுடன் முட்டி மோத விரும்பவில்லை. ஆனால் தாம் எதை செய்தாலும் இந்தியா தமக்கு எதிராகவே செயற்படும் என்று இலங்கை அரசாங்கம் நினைக்கும் நிலை ஏற்பட்டால் அவ்வரசாங்கம் இந்தியாவை புறக்கணித்து மேலும் சீனாவின் பக்கம் சாயலாம். அப்போது இலங்கையில் அதிகார பரவலாக்கல் இந்திய மீனவர்கள் பிரச்சினை ஆகிய விடயங்கள் மேலும் மோசமாகலாம் என அவ் அதிகாரிகள் மேலும் வாதிடுகிறார்கள்.

அதேவேளை தமது வரவை பற்றிய ஏக்கத்தை இலங்கை அரச தலைவர்களின் மனங்களில் ஏற்படுத்தி தமது பெறுமதியை இலங்கை அரசாங்கம் உணரும் வகையில் இந்திய அரசாங்கம் தமது முடிவை முன்கூட்டியே அறிவிக்காமல் "ஸஸ்பென்ஸில்" வைத்திருக்கிறது.

ஆனால் தமிழ் நாட்டுத் தலைவர்கள் அவ்வாறான பக்குவ நிலைப்பாட்டை கொண்டிருக்க விரும்பவில்லை. அங்கு இலங்கை தமிழர்கள் விடயத்தில் பரிந்துப் பேசி அடுத்த தேர்தலுக்காக வாக்குத் திரட்டும் போட்டியொன்று நடைபெறுவதால் உணர்ச்சிகளை தூண்டும் போட்டியொன்றும் நடைபெற்று வருகிறது. எனவே அவர்கள் இந்திய தேசிய நலன் ஒருபுறமிருக்க எந்த இலங்கை தமிழர்களுக்காக தாம் குரல் கொடுப்பதாக கூறுகிறார்களோ அதே தமிழர்களுக்கு எது நடந்தாலும் அதே தமிழர்களின் பெயரால் மாநிலத்தில் போட்டிக் கட்சியை வீழ்த்துவதை நோக்கமாகக் கொண்டே செயற்படுகிறார்கள்.

இலங்கையில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இந்த இரண்டு நிலைப்பாட்டையும் கொண்டவர்கள் இருக்கிறார்கள். சிலர் இந்திய பிரதமர் மாநாட்டுக்கு வருகை தராமல் இலங்கை அரசாங்கத்தை அசௌகரியத்திற்குள்ளாக்கி அதன் மூலம் திருப்தியடைய காத்துக் கொண்டிருக்கிறார்கள். வேறு சிலர் இலங்கை அரசாங்கத்தின் மீது செல்வாக்கு செலுத்தும் தமது ஆற்றலை இந்தியா பறிகொடுக்கக் கூடாது என்று கடந்த வாரம் சென்னையிலிருந்து வெளியிடப்படும் இந்து பத்திரிகையிடம் கூறியிருந்தனர்.

இறுதியில் "ஷோகம்" என்று சுருக்கமாக அழைக்கப்படும் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின் மாநாடு இலங்கை, இந்தியா, தமிழ்நாடு, கனடா மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பு ஆகியவற்றின் தலைவர்களால் தமது சொந்த அரசியல் நலன்களுக்காக பாவிக்கப்படுகிறது. அதில் பிழையேதும் இல்லை.

இந்த அமைப்பில் வேறு பயனும் இல்லையே.

எம்.எஸ்.எம்.ஐயூப் (முற்றும்)

# முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் சுற்றுச்சுவர் இடிக்கப்படுகின்றது

## வழக்கு தொடர நெடுமாறன் ஆலோசிப்பு

**(சென்னை)**

**தஞ்சாவூரில் அமைக்கப்பட்ட முள்ளி வாய்க்கால் நினைவு முற்றத்தின் சுற்றுச் சுவர் இடிக்கப்பட்டு வருகிறது. இதை எதிர்த்து உயர் நீதிமன்றம் வழக்குத் தொடரப் போவதாக பழ.நெடுமாறன் கூறியுள்ளார்.**

இலங்கையில் நடந்த போரின் போது உயிரிழந்த தமிழ் மக்களின் நினைவாக தஞ்சாவூர், விளார் சாலையில், உலகத் தமிழர் பேரமைப்பு சார்பில் கடந்த 8ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைக்கப்பட்டது.

இதையிட்டு தொடர்ந்து 3 நாட்கள் நிகழ்ச்சிகள் நடைபெற்று, கடந்த 10ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அனைத்து நிகழ்ச்சிகளும் முடிவடைந்தன.

இந்நிலையில், நேற்று புதன்கிழமை காலை முள்ளிவாய்க்கால் முற்றத்தின்சுற்றுச்சுவர்மற்றும்பூங்காவை, சுமார் 300 இறகும் மேற்பட்ட பொலிஸார் முன்னிலையில் இடிக்கும் பணி நடந்து வருகிறது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தின் சுற்றுச்சுவர் மற்றும் பூங்கா நெடுஞ்சாலைத்துறைக்கு சொந்தமான இடத்தில் அமையப் பெற்றிருப்பதால் அதை இடிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இது தொடர்பாக வழக்கு தொடரப் போவதாக பழ.நெடுமாறன் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது,

இலங்கையில் நடந்த போரின் போது உயிரிழந்த தமிழர்களின் நினைவாக தஞ்சாவூர் விளார் சாலையில் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைக்கப்பட்டது.

இந்த நினைவு முற்றம் முறையான அனுமதி பெற்றே அமைக்கப்பட்டது. சட்டவிரோதமாக எதையும் செய்யவில்லை.

ஆனால், எவ்வித முனனறிவிப்பும் இல்லாது தமிழக அரசு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை இடித்துள்ளது.

தமிழக அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்படும். முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் இடிக் கப்பட்டது குறித்து ஏனைய கட்சி தலைவர்களுடன் ஆலோசித்து அடுத்த கட்ட முடிவு எடுக்கப்படும் என்றார்(அ-2)

# மயிலிட்டி வடக்கை கைப்பற்ற இராணுவம் முயற்சிக்கின்றது

## வலி.வடக்கு பிரதேச சபை துணைத்தவிசாளர்

(யாழ்ப்பாணம்)

சட்டரீதியாக மக்களை ஏமாற்றி மயிலிட்டி வடக்கு முழுவதையும் இராணுவம் கைப்பற்ற முயற்சிக்கின்றது என வலி.வடக்கு மீள்குடியேற்றத்தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபையின் துணைத் தலைவருமான எஸ்.சஜீவன் தெரிவித்தார்.

மேலும் கோணப்புலம், ஊறணி தும்புத் தொழிற்சாலை ஆகிய முகாம் மக்களை காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்குச் சொந்தமான குவாரி காணியில் குடியேற்றும் முயற்சி நடைபெறுவதாகவும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.


கோணப்புலம் முகாமுக்கு நேற்றையதினம் காலை 4 மோட்டார் சைக்கிளில் வந்திருந்த 8 நபர்களால் ஜே/246 மயிலிட்டி வடக்கு முழுவதையும் இராணுவம் கையகப்படுத்தியுள்ளதாகவும் இக்காணிகளுக்கு மாற்றுக்காணிகள் தரப் படவுள்ள தாகவும் அனைவரையும் நேற்று முன்தினம் தெல்லிப்பழை பிரதேச செயலகத்திற்கு வருகை தருமாறும் அழைப்பு விடுத்திருந்தனர்.

இந்த அறிவித்தலின்பேரில் அங்கு சென்ற மக்கள் இக்குடியேற்றத்துக்கு சம்மதிக்காது தம்மைத் தமது சொந்த நிலங்களில் குடியேற்றுமாறு கூறி திரும்பியுள்ளனர்.

அவர்களில் சிலர் காணிப் பதிவுகளையும் மேற்கொண்ட பின்னரே திரும்பியுள்ளனர்.

ஜே/253, ஜே/254 ஆகிய கிராம சேவகர்கள் பிரிவுகளுக்குட்பட்ட தையிட்டி, மயிலிட்டி மக்களை பலாலியில் குடியமர்த்துவதற்கான முயற்சி தோல்வியடைந்ததையடுத்தே அம்மக்களைக் காங்கேசன்துறை குவாரி, தொண்டைமானாறு, காத்தாட்டி வெளியில் குடியமர்த்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

குறித்த இரு இடங்களின் தரைப் பகுதிகள் சமாதான காலத்திலேயே மக்கள் வசிக்கமுடியாத அளவுக்கு பாரிய குழிகள் கொண்டவையாகக் காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-4-6)



யாழின் கரங்கள் நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாட்டில் யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியுடன் இணைந்து இரத்ததான முகாமொன்று அண்மையில் யாழ்.இந்துக் கல்லூரியில் இடம்பெற்றதைப் படத்தில் காணலாம்.

(படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

# சீன இராணுவ அதிகாரிகள் குழு இலங்கை வந்தடைந்துள்ளது

சீன இராணுவ உயர்மட்ட அதிகாரிகள் எட்டுப் பேரைக் கொண்ட குழுவொன்று இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டுள்ளது.

இந்தக் குழுவினர் கடந்த சனிக்கிழமை இலங்கை இராணுவத் தலைமையகத்தில், இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் தயாரத்நாயக்கவை சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர்.

சீனாவின் போர்த்தளபாட பொறியியல் கல்லூரியின் தளபதி மேஜர் ஜெனரல் ஷாவோ டாமிங் தலைமையிலான இந்தக் குழுவில் சீனாவின் விஞ்ஞான தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் மேஜர் ஜெனரல் சாங் லோங், போர்த்தளபாட பொறியியல் பல்கலைக்கழக ஆணையர் மேஜர் ஜெனரல் சோங் ஹையிங், இரண்டாவது இராணுவ மருத்துவ பல்கலைக்கழக ஆணையர் மேஜர் ஜெனரல் சென் ஜின்குவா, கடற்படை பொறியியல் பல்கலைக்கழக அமைச்சர் மூத்த கப்டன் குவோ சிசொங், பாதுகாப்பு ஆலோசகர் மூத்த கேணல் லீ செங்லின், பாதுகாப்பு அமைச்சின் வெளிவிவகாரப் பணியக அதிகாரி லெப்.கேணல் ஹூவாங் சியாவோமின், பிரதி பாதுகாப்பு ஆலோசகர் லெப்.கேணல மியாஓகாய் ஆகியோர் இந்தக் குழுவில் அடங்கியிருந்தனர்.

இவர்கள், இலங்கை இராணுவத் தளபதியுடனான சந்திப்பின் போது, பயிற்சித் திட்டங்களில் இருதரப்பு முக்கியத்துவம் பெற்ற விவகாரங்கள் குறித்து பேச்சு நடத்தியுள்ளனர்.

சீன இராணுவ அதிகாரிகளுடனான சந்திப்பில், இலங்கை இராணுவத்தளபதியுடன், மேஜர் ஜெனரல் லலித் தவுலகல, மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சீன இராணுவ அதிகாரிகள் குழு கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்துக்குச் சென்றதுடன், இலங்கை கடற்படை, விமானப்படையின் பயிற்சிப் பணிப்பாளர்களுடனும் பேசசுக்களை நடத்தியுள்ளது. (அ-2)

# சத்தியசாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீசத்தியசாயி சேவா நிறுவனத்தினரின் ஏற்பாட்டில் நடத்தப்படும் முதியோர்களுக்கான இலவச மருத்துவ முகாம் பருத்தித்துறை சத்தியசாயி சேவா நிறுவன மண்டபத்தில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இவ் இலவச மருத்துவ முகாமில் அறுபது வயதிற்கு மேற்பட்ட இருபாலாரும் கலந்து கொண்டு பயன் பெறலாம். இவர்களுக்கான இரத்த அழுத்தம், சலரோகம் போன்ற நோய்களுக்கு மந்திகை ஆதார வைத்தியசாலை வைத்தியர் கே.சிவராமன் வி.பி. மருத்து ஆலோசனை வழங்கவுள்ளார்.

நீரிழிவு நோயை இனங் காணவுள்ளவர்கள் மதிய உணவு உட்கொண்டு இரண்டு மணித்தியாலங்களின் பின்னரே பரிசோதனை மேற்கொள்ள முடியும்.

எனவே, பிற்பகல் 2 மணிக்கு பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதால் கலந்து கொள்பவர்கள் நண்பகல் 12 மணிக்கு முன்னராகவே உணவை உட்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இம்மருத்துவ முகாமின் தொடர்ச்சியாக பிற்பகல் 3 மணிக்கு வைத்திய ஆலோசகர் கா.வைத்தீஸ்வரன் வழங்கும் **முதியோர் நலம் காப்போம்** எனும் விடயப்பொருளிலான கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

ஒவ்வொரு மாதமும் இரண்டாவது வெள்ளிக்கிழமை பிற்பகல் இவ் இலவச மருத்துவமுகாம் நடைபெறவுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. (அ-7)

# ஆளுநரின் உரை அபாண்டமான பொய்; தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கண்டனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சபையில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆற்றிய உரையை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கின்றது.

அவர் இராணுவத்தினைச் சேர்ந்தவர் என்ற நிலையிலேயே அவ்வாறு உரையாற்றியுள்ளார்.

அவரது உரை அப்பட்டமான பொய்களையும் சோடிப்புக்களையும் கொண்டது என யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்றலில் நேற்று முன்தினம் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டத்தின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

56 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் வடக்கு மாகாணத்துக்குள்ளேயே இடம்பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மட்டும் 16 இற்கும் மேற்பட்ட அகதி முகாம்கள் உள்ளன. வலிகாமம் வடக்கிலுள்ள 27 கிராம சேவையாளா பிரிவுகளில் 7 கிராம சேவையாளர் பிரிவில் பகுதியாகவும் 14 கிராமசேவகர் பிரிவில் முழுமையாகவும் மக்கள் மீள் குடியேற்றம் செய்யப்படவில்லை.

தீவுப் பகுதியில் குறிப்பாக மண்டைதீவில் உள்ள செம்மண் தோட்டங்கள் குடியிருப்புக்களுடன் கூடிய காணிகள் இன்னமும் உரிய மக்களிடம் வழங்கப்படவில்லை.

வடமராட்சி கிழக்கில் பல மக்களுடைய குடியிருப்பு காணிகளை இராணுவத்தினர் அபகரித்து அவற்றை கடலோடு சேர்ந்த பாதுகாப்பு பிரதேசமாக வைத்திருக்கின்றனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் பரவிப்பாஞ்சான் மருதநகர் முழுமையாக மக்கள் குடியேற்றமுள்ள இடங்களாகும். அவற்றில் வாழ்ந்த மக்களை அவர்களின் இடங்களில் குடியேற விடாது இன்றுவரையும் அந்த மககளை தொடர்ந்தும் அகதிகளாகவே வைத்திருக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கேப்பாப்பிலவு என்ற கிராமத்தில் மக்கள் குடியேற்றப்படாது சீனியா மோட்டையில் குடியேற்றம் செய்யப் பட்டுள்ளார்கள்.

எனவே, ஆளுநர் வடக்கு மாகாணத்தில் அனைவரும் மீள் குடியேற்றப்பட்டுள்ளனர் என வடமாகாண சபையில் உரையாற்றியிருந்தமை முழுமையான அப்பட்டமான பொய்ப் பிரசாரமாகும்.

ஆளுநரின் இவ்வுரை வன்மையாக கண்டிக்கப்பட வேண்டும். அவருக்கு பேசுவதற்கு உரிமையிருக்கலாம்.

ஆனால், ஒரு இனத்தை அவர்களுடைய சொந்த இடங்களில் வாழ விடாது தடுப்பதற்கான உரிமை அவருக்கில்லை.

ஆளுநரின் உரைக்கான நல்ல பதிலையும் செய்தியையும் இன்றைய போராட்டம் வழங்கியிருக்கும்.

இப் போராட்டத்தைத் தொடர்ந்து உலக தலைவர்களின் கவனத்தை எமது மக்கள் பக்கம் திருப்பும் வகையில் நாம் தொடர் போராட்டங்களை நடத்தவுள்ளோம்.

குறிப்பாக இசைப்பிரியா, பாலச்சந்திரன் மட்டுமன்றி எமது சிறுவர்கள், பொது மக்கள் என பலர் கொல்லப்பட்டமைக்கு எதிராகவும் இவ் இன அழிப்பிற்கான சர்வதேச விசாரணையை கோரியுமே இவ் தொடர் ஆர்ப்பாட்டம் நடைபெறுகின்றது என்றார். (அ-4)

# இலங்கையில் பொதுநலவாய மாநாடு நடத்த ஏற்பாடு செய்தது இந்தியாவே

## ம.தி.மு.க. செயலர் வைகோ குற்றச்சாட்டு

(சென்னை)

**பொதுநலவாய நாடுகளின் தலைவர்கள் உச்சிமாநாட்டில் இருந்து இலங்கையை விலக்காது போர்க்குற்ற விசாரணையில் இருந்து இலங்கை அரசை தப்பிக்க வைக்கும் வகையிலேயே குறித்த மாநாட்டை இந்திய அரசு மறைமுகமாக நடத்துகின்றது என ம.தி.மு.க.செயலர் வைகோ தெரிவித்துள்ளார்.**



இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து ம.தி.மு.க. சார்பில் புகையிரத மறியல் போராட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மதுரை மேற்கு நுழைவு வாயிலில் இருந்து தண்டவாளம் வழியாக புகையிரத நிலையத்திற்குள் வந்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ வைகை அதிவேக புகையிரத எஞ்சின் முன்னால் தொண்டர்களுடன் நின்று மத்திய அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்பினார்.

ஈழத்தமிழர் படுகொலைக்கு காரணமான இலங்கை அரசையும் அங்கு நடக்கும் பொதுநலவாய மாநாட்டையும் மத்திய காங்கிரஸ் அரசையும் ஐக்கிய முற்போக்கு கூட்டணியில் அங்கம் வகித்த தி.மு.க., பா.ம.க. உள்ளிட்ட கட்சிகளையும் கண்டித்து அவர் கோஷங்களை எழுப்பினார்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்துக்கு எதிராக அ.தி.மு.க. அரசு செயற்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையில் ஈழத்தமிழர் படுகொலை நடந்த நிலையில் அந்நாட்டு ஜனாதிபதியை சர்வதேச போர்க் குற்றவாளியாக விசாரிக்க கோரிக்கை எழுந்துள்ளது.

இதுபோன்ற சூழலில் அங்கு பொதுநலவாய மாநாடு நடத்துவது சரியல்ல. இந்தியாதான் இம்மாநாட்டுக்கு ஏற்பாடு செய்துள்ளது.

ஜனநாயக மரபை மீறியதற்காக நைஜீரியா, பாகிஸ்தான், உகண்டா, தென்னாபிரிக்கா, பிஜித்தீவு உள்ளிட்ட நாடுகள் அனைத்தும் பொதுநலவாய அமைப்பிலிருந்து நீக்கப்பட்டன.

ஆனால், தமிழர்களை ஈவு இரக்கம் இன்றி கொலை செய்துள்ள இலங்கையை நீக்காது இலங்கை அரசை தப்பிக்க வைக்கும் வகையில் மாநாட்டை இந்திய அரசு மறைமுகமாக நடத்துகிறது.

இதைத்தான் தென்னாபிரிக்காவின் நோபல் பரிசு பெற்ற லெஸ்டிட்டோ இலங்கை மாநாட்டை அனைத்து நாடுகளும் புறக்கணித்தால் தமிழர்களுக்கு நீதி கிடைக்கும் என்று கூறியுள்ளார்.

ஆனால், ஹிட்லர் முசோலினி, நாசிக் படைகள் போல் செயற்பட்ட இலங்கை அரசுக்கு இந்தியா ஆயுத உதவி செய்ததோடு, இப்போது குற்றங்களில் இருந்து தப்பிக்க வைக்க ஆதரவையும் அளித்து வருகிறது என்று தெரிவித்தார்.

மேலும் மத்திய அரசில் அங்கம் வகித்த தி.மு.க. உள்ளிட்ட கட்சிகள் ஈழதமிழர்கள் படுகொலைக்கு பொறுப்பேற்க வேண்டும். பொதுநலவாய மாநாட்டை நடத்தினும் எங்கள் போராட்டம் தொடரும். இனம், மதம் கடந்து தமிழ் இளைஞர்கள் போராடுவார்கள். நிச்சயம் நீதி கிடைக்கும் என்றும் வைகோ கூறினார்.

கடந்த நான்கு வருடத்திற்கு பின்னர் இசைபிரியாவின் படுகொலைக்கு ப.சிதம்பரம் கருத்து தெரிவிக்கிறார். ஈழத்தமிழர் படுகொலையை கருணாநிதி ஏற்கனவே கிண்டலடித்துள்ளார். இதற்கெல்லாம் மக்கள் பாடம் புகட்டுவார்கள்.

இந்தியாவின் துரோகத்தை உணர்த்தவே இந்தப்போராட்டம் நடத்துகிறோம். இலங்கை ஜனாதிபதியை நிச்சயம் குற்றவாளிக் கூட்டில் நிறுத்துவோம். அப்போது காங்கிரஸ் தலைமையிலான இந்திய மத்திய அரசும் குறவாளி க்கூண்டில் நிறுத்தப்படும் என கூறினார். (அ-2)

## ஆளுநர் வருகையும் கலாசார விழாவும்

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் வருகையும் கலாசார நிகழ்வும் கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் கந்தையா வாத்தியாயர் அரங்கில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.30 மணியளவில் நடைபெறவுள்ளது.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும் வலி.வடக்கு பிரதேச சபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் ரஞ்சித் பெர்னாண்டோவும் லயன் சீமாட்டி டில்கானி பெர்னாண்டோவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறப்பு நிகழ்வுகளாக ஸ்கந்தவரோதயக் கல்லூரி மாணவிகளின் தமிழர்களின் கலாசாரத்தைப் பிரதிபலிக்கும் நடன நிகழ்வுகளும் கர்நாடக இசைப் பாடல்களும் இடம் பெறவுள்ளன. (அ-7-9-23)

## தே.அ.அட்டை கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

இளவாலை மயிலன்கூடல் கருணைராஜா மகேஸ்வரி என்பவருடைய 616402684V என்னும் இலக்கமுடைய தேசிய அடையாள அட்டை மற்றும் இரு வங்கிப் புத்தகங்கள் உள்ளடங்கிய பை ஒன்று கண்டெடுக்கப்பட்டு வலம்புரி அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் அடையாளம் காட்டி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம். (அ)

## மனித உரிமை மீறல்கள் குறித்து நியூஸிலாந்து அவதானம்

இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் தமது அரசாங்கம் தொடர்ந்தும் குரல் எழுப்புவதாக நியூஸிலாந்து வெளியுறவு அமைச்சர் முரே மெக்கலி தெரிவித்துள்ளார்.

ரேடியோ நியூஸிலாந்து இந்த தகவலை வெளியிட்டுள்ளது.

இந் நிலையில் இலங்கைக்கு வருகை தரும்போது நிலைமைகள் தொடர்பில் ஆராய்வதற்காக மெக்கலி இலங்கையின் வடக்குக்கு விஜயம் செய்வார் என்று ரேடியோ நியூஸிலாந்து குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்தும் அண்மையில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பிலும் தாம் நேரடியாகவே அவரிடம் கேள்வி எழுப்பவுள்ளதாக நியூஸிலாந்தின் பிரதமர் ஜோன் கீ குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையில் இலங்கைக்கு எதிரான கடுமையான செய்தி ஒன்று அவசியம் என்று அண்மையில் இலங்கையில் தடுத்து வைக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட நியூஸிலாந்தின் கிரீன் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜான்லோகி வலியுறுத்தியுள்ளார்.

கடந்த 2009 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் அவசியம் என்றும் அவர் கோரியுள்ளார். (அ-2)



*இளவாலை வாலிபர் சங்கத்தினால் ஆனைவிழுந்தான் விநாயகர் ஆலயத்தில் வில்லுப்பாட்டு நடத்தப்பட்டது. கந்த சஷ்டி நிகழ்வைத் தொடர்ந்து இடம்பெற்ற வில்லுப்பாட்டு நிகழ்வை படத்தில் காணலாம்.*

## கடன்பெற்ற விவசாயிகளுக்கு

இலங்கை வங்கிகளில் கடன் பெற்ற விவசாயிகள் பெற்றகடனைத் தவணை முறையில் செலுத்த அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக இலங்கை வங்கி தெரிவித்துள்ளது.

இலங்கை வங்கியில் கடன் பெற்ற விவசாயிகள் கடனை மீளச் செலுத்தும் காலம் முடிவடைந்திருப்பின் அவர்கள் அக்கடனுக்குரிய முழு வட்டியையும் செலுத்துதல் வேண்டும்.

அவ்வாறு செலுத்திய பின்னர் வங்கியிலிருந்து பெறப்பட்ட கடனை நான்கு தவணைகளில் மீளச் செலுத்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

கடன்களை அவ்வாறு செலுத்தும்போது புதிய விவசாய கடன்கள் வழங்கப்படுவதோடு அது விவசாயிகளின் தேவைகளுக்கு ஏற்பவும் வங்கியின் நடைமுறைக்கு ஏற்பவும் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வடக்கு அதிவேக பாதை நிர்மாணம் 2014 ஜனவரி மாதத்தில் ஆரம்பம்

### பெருந்தெருக்கள் அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு அதிவேக பாதையின் நிர்மாணப் பணிகள் எதிர்வரும் 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும் என பெருந்தெருக்கள், துறைமுகம் மற்றும் கப்பல் துறை அமைச்சின் செயலாளர் ரஞ்சித் பிரேமசிறி தெரிவித்துள்ளார்.

நான்கு கட்டங்களாக நிர்மாணிக்கப்படும் இந்த வீதியின் முதற்கட்டப் பணிகள் ஹெண்டரமுல்லயில் இருந்து மீரிகம வரை நிர்மாணிக்கப்படும்.

இரண்டாம்கட்ட நிர்மாணப் பணிகள் குருணாகலில் இருந்து நிர்மாணிக்கப்படவுள்ளதுடன், மூன்றாம்கட்ட பணிகள் மீரிகமவில் இருந்து கண்டி வரை நிர்மாணிக்கப்படும். நான்காம் கட்ட நிர்மாணப்பணிகள் குருணாகலில் இருந்து தம்புள்ள வரை நிர்மாணிக்கப்படும். இந்தப் பணிகள் அனைத்தும் ஒரே நேரத்தில் ஆரம்பிக் கப்படவுள்ளன.

அதேவேளை தென் பகுதிக்கான அதிவேக வீதியின் காலி முதல் மாத்தறை வரையான பகுதி எதிர்வரும 2014 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் திறந்து வைக்கப்படும் எனவும் அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டார். (அ-2)

## கொழும்பு மாநாட்டை அரசியல் கோணத்தில் நோக்க வேண்டாம்

### எல்லாவள தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

கொழும்பில் நடைபெறும் பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை அரசியல் கோணத்தில் இருந்து பார்க்க வேண்டாம்என நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவள மேதானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

அரசியல் இலாபங்களை கருத்தில் கொண்டு சிலர் ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றை மேற்கொண்டு உலக தலைவர்கள் எதிரில் இலங்கைக்கு தலைகுனிவை ஏற்படுத்த முயற்சிப்பது நாட்டுக்கு எதிராக மேற்கொள்ளும் துரோகம்.

நாடு என்ற வகையில் ஒன்றாக இணைந்திருக்க வேண்டிய சந்தர்ப்பத்தில், பல்வேறு அரசியல் கோணங்களில் நோக்கி அரச தலைவர்கள் மாநாட்டை தரம் தாழ்த்த அரசியல்வாதிகள் முயற்சித்து வருவதை காணமுடிகிறது.

அரசியல் ரீதியாக பல்வேறு கருத்து முரண்பாடுகள் இருந்த போதிலும் உலக தலைவர்கள் முன்னால் சகலரும் நாட்டுக்காக குரல் கொடுக்க வேண்டும் என்பதை சிலர் மறந்து போயுள்ளனர்.

இச் சந்தர்ப்பத்தில் இப்படியாக செயற்படுவது பொது எதிரிக்கு சாதகமான நிலைமையை ஏற்படுத்தும்.

உலக தலைவர்களின் மாநாடு ஒன்று நடைபெறவுள்ள நிலையில் முழு உலகத்தின் கவனமும் இலங்கை மீது திரும்பியுள்ளது.

இம் மாநாட்டின் மூலம் நாட்டுக்கு பல பயன்கள் கிடைக்கும். வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மூலம் நாடு அபிவிருத்தியடையும்.

எவர் ஆர்ப்பாட்டங்களைச் செய்யினும் நாட்டுக்கு கிடைக்க போகும் வெற்றியை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது என்றார். (அ-2)

# இனப்படுகொலையை மூடி மறைக்கும் இலங்கை!



...காயப்பட்ட மக்கள் பலர் இறக்கின்ற தறுவாயிலுள்ளனர். காயப்பட்ட நோயாளிகள் மத்தியில் இறந்த உடலங்களும் காணப்படுகின்றன. மக்கள் அழுவதைப் பார்க்க முடிகிறது. கேட்க முடிகிறது... அழிவுகள் தொடர்கின்றன என வன்னியில் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்றபோது மருத்துவராகக் கடமையாற்றிய

**றொறென்டோ ஸ்ரார் ஊடகத்தின் எழுத்தாளர் *ரோஷி டிமானொ* எழுதியுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுவை...**



வைத்திய கலாநிதி
தங்கமுத்து சத்தியமூர்த்தி

வைத்திய கலாநிதி தங்கமுத்து சத்தியமூர்த்தி மே 13 அன்று இறுதியாக போர் வலயத்திலிருந்து அனுப்பிய மின்னஞ்சலில் குறிப்பிட்டுள்ளார்.

### டாக்டர் தங்கமுத்து சத்தியமூர்த்தி

செறிவான ஆட்லறி மற்றும் மோட்டார் எறிகணைத் தாக்குதல்களின் மத்தியில் வைத்தியசாலைகளை பல இடங்களுக்கு மாற்றி, தற்காலிக கொட்டகைகளின் கீழ் அமைத்து, கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகளாக போர் வலயத்திற்குள் தங்கிநின்று மக்களுக்கு மருத்துவசேவையை வழங்கிய நான்கு தமிழ் வைத்தியர்களில் வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தியும் ஒருவராவார்.

சத்தியமூர்த்தி, போர் வலயத்திற்குள் இருந்தவாறு அங்கு மக்கள் கொல்லப்பட்ட ஒளிப்படங்கள் மற்றும் போர் அழிவுகளின் ஒளிப்படங்கள் போன்றவற்றை பதிவாக்கியிருந்தார். அத்துடன் போர் வலயத்திற்குள் மக்கள் கொல்லப்பட்டமை தொடர்பான தகவல்களை போர் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது வழமையாக 40 தூதரங்களுக்கும் 200 வரையான அனைத்துலக ஊடகங்களுக்கும் அனுப்பியிருந்தார்.

ஏனெனில், இந்தக் காலப் பகுதியில் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் யுத்த வலயத்திற்குள் செல்வதற்கான அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. இந்தப் போரானது சாட்சியங்கள் எதுவுமின்றி இடம்பெற்றதாக இலங்கை அரசாங்கம் கருதியது.

இறுதிக்கட்டப் போரின் போது ஐக்கிய நாடுகள் சபை தனது சகல பணியாளர்களையும் போர் வலயத்தைவிட்டு வெளி யேறுமாறு அழைத்தது.

ஆனால், விடுதலைப்புலிகள் அனுமதி வழங்காதமையால் ஐ.நா. தனக்குக்கீழ் பணிபுரிந்த தமிழ்ப் பணியாளர்களை வெளியேற்ற முடியவில்லை. இந்நிலையில் இறுதிக்கட்ட யுத்தத்திற்குள் அகப்பட்ட மக்களுக்கு வெளியிலிருந்தவாறு ஐ.நா. தனது உணவுத் தொடரணிகளை மட்டும் அனுப்பி வைத்தது.

இறுதியாக மே 11 அன்று இலங்கை படையினர் மற்றும் விடுதலைப்புலிகளுடன் சமரசம் செய்துகொண்ட பின்னர் ஐ.நாவின் உணவுப் பொதிகள் மக்களுக்கு வழங்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, அவ்விடத்தை நோக்கி இலங்கை இராணுவத்தினரால் எறியப்பட்ட பல்குழல் எறிகணைகளால் நூற்றுக்கணக்கான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற யுத்த களங்கள் ஆழிப்பேரலை போன்று காணப்



பட்டன. இந்த யுத்த பூமியில் ஆயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். இந்த மக்கள் பாதுகாப்பாக வெளியேறுவதற்கான வழிகள் காணப்படவில்லை. மக்கள் இராணுவத்தால் மீட்கப்பட்ட பகுதிகளுக்குச்செல்ல முடியவில்லை. எவ்வாறு அவர்கள் அங்கு போகமுடியும்? ஏனெனில், அந்தத் திசையிலிருந்து இடைவிடாது எறிகணைகள் வீசப்பட்டுக் கொண்டிருந்தன.

இதேபோன்று இலங்கைப் படைகள் தொடர்ச்சியாக விமானத் தாக்குதல்கள் மற்றும் கிளைமோர்த் தாக்குதல்களையும் மேற்கொண்டனர் என வைத்தியர் சத்தியமூர்த்தி அண்மையில்தான் வழங்கிய நேர்காணல் ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

கிளிநொச்சிக்குள் இராணுவம் உள்நுழைந்த போது நாங்கள், முல்லைத்தீவு மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தோம். அந்த வேளையில் ஐந்து கிலோ மீற்றர் நீளமான பிரதேசத்திற்குள் நாங்கள் ஏழு, எட்டு தடவைகள் இடம்பெயர்ந்தோம் என்கிறார் வைத்தியர் சத்தியமூர்த்தி.

இக்காலப்பகுதியில் வைத்தியர் சத்தியமூர்த்தி கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களுக்கான பிராந்திய சுகாதார பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றினார். வன்னியில் யுத்தம் தீவிரம் பெற்ற போது இவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகளை வவுனியாவுக்கு அனுப்பி வைத்தார். அதனைத் தொடர்ந்தும் இவர் வன்னியில் இலங்கை அரசாங்க வைத்தியராகப் பணியாற்றினார்.

தமிழ்ப் புலிகள் தமது அமைப்பில் வைத்தியர்களை உருவாக்கி அவர்களுக்கான மருத்துவக் கற்கைகளை வழங்கி அவர்களை சேவையில் ஈடுபடுத்திய அதே வேளையில் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் இவர்கள் சத்தியமூர்த்தியிடமிருந்தும் சேவையைப் பெற்றுக்கொண்டனர். வைத்திய சாலைக்கு வருகின்ற எவருக்கும் நாம் வைத்தியம் செய்வோம். மருந்துப் பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு நான் இராணுவத் தலைமையகம் மற்றும் விடுதலைப்புலிகளுடன் சமரசம் செய்ய வேண்டியிருந்தது. இராணுவத்தினர் என் மீது சந்தேகங்கொண்டிருந்தனர்.

2007 இற்குப் பின்னர் இலங்கை அரசாங்கம் வன்னிப் பிராந்தியத்திற்கான மருத்துவ வளங்களை அனுப்புவதை திட்டமிட்ட வகையில் நிறுத்தியது. எம்மிடம் மருந்துகள் கைவசம் இருந்தபோதிலும் மக்கள் அனைவரதும் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியவில்லை. இதனால் மக்கள் இறந்தனர் என் சத்தியமூர்த்தி தனது அனுபவங்களை விபரித்தார்.

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வருமாறு இராணுவத்தினர் என்னிடம் கேட்டனர். ஆனால், அங்கு செல்வதற்கு வழியிருக்கவில்லை. சரியான பாதை இருக்கவில்லை. மக்களுக்கு நான் சேவையாற்ற வேண்டியிருந்தது. ஒவ்வொரு நாளும் நூற்றுக்கணக்கான மக்களுக்கு மருத்துவம்செய்ய வேண்டியிருந்தது எனவும் என்னிடம் காயத்தைச் சுத்தப்படுத்துவதற்கான சில மருந்துகளே காணப்பட்டன. அவர்களின் வலியை ஆற்றக்கூடிய மருந்துகள் என்னிடம் இருக்கவில்லை. எம்மீது மீண்டும் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. மக்கள் பலர் கடல்நீரேரியின் ஊடாக தப்பிச்சென்றனர். இராணுவ நிலைகள் எம்மிலிருந்து 50 மீற்றர் தொலைவிலிருந்தது. எங்களுக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் நந்திக்கடல் நீரேரியை விட வேறு எந்தவொரு நிலப் பகுதியும் இருக்கவில்லை என வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி மேலும் குறிப்பிட்டார்.

போர் இறுதிக்கட்டத்தை அடைந்த போது சத்தியமூர்த்தியும் ஏனைய மூன்று வைத்தியர்களும் இணைந்து ஒரு இடத்தில் பணியாற்றினர். தற்காலிக நிலையம் ஒன்றில் இவர்கள் நால்வரும் இணைந்து பணியாற்றினர். இவர்கள் காயப்பட்ட மக்களைப் பராமரிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இவர்களின் கீழ் பணியாற்றிய தாதியும் பிறிதொரு வைத்தியரும் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த வைத்தியர்கள் மூலமே கொழும்பிலிருந்தவாறு ஐ.நா. பிரதிநிதிகள் போரின் இழப்புக்கள், மக்களின் இடப்பெயர்வுகள் போன்றவற்றை அறிய முடிந்தது.

நாங்கள் மருத்துவ சேவையை மாறுபட்ட முறையில் வழங்க வேண்டியிருந்தது. எனது பணி எல்லாவற்றையும் ஒன்றிணைப்பதாக இருந்தது. பாடசாலை ஒன்றில் நாம் எமது வைத்திய நிலையத்தை தற்காலிகமாக அமைத்து அங்கே கட்டில்கள் சிலவற்றைப்போட்டு சத்திர சிகிச்சைகள் சிலவற்றைச் செய்தோம் என வைத்தியர் சத்தியமூர்த்தி குறிப்பிட்டார்.

போரில் அகப்பட்ட மக்களைப் பாதுகாக்குமாறு சிலர் குரல் கொடுத்தனர். ஆனால், இலங்கை அரசாங்கம் இதனை செவிமடுக்கவில்லை.

காசாவில் இஸ்ரேலியர்கள் மூன்று வாரகாலம் முற்றுகைத் தாக்குதலை நடாத்திய போது 1000 வரையான பொதுமக்கள் மட்டும் படுகொலை செய்யப்பட்டனர். ஆனால் இலங்கையின் வன்னியில் நந்திக்கடல் நீரேரியில் மிகவும் ஒடுங்கிய சதுப்பு நிலப்பகுதியில் அகப்பட்ட பல பத்தாயிரக்கண்கான பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1000 மக்களைப் படுகொலை செய்த இஸ்ரேலுக்கு எதிராக ஐ.நாடு சபை 10 தீர்மானங்களை நிறைவேற்றியது.


ஆனால், இதே ஐ.நா. பல பத்தாயிரக்கணக்கான பொது மக்களின் இழப்புக்கு காரணமாக உள்ள இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக எவ்வித தீர்மானங்களையும் நிறைவேற்றவில்லை. இந்த யுத்தத்தில் எத்தனைபேர் கொல்லப்பட்டனர் என்பதை என்னால் கூற முடியாது. உயிர்களைப் பாதுகாக்கக் கூடிய பலர் தமது உயிர்களை இழந்தனர். ஒருநாள் இந்த மக்களுக்கு நீதி கிடைப்பதுடன் குற்றவாளிகள் தண்டிக்கப்படுவர் என நான் நம்புகிறேன் என வைத்திய கலாநிதி சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

(முற்றும்)

-நித்தியபாரதி-

# கல்வி நிர்வாகத்துறை சார்ந்த விடய ஆய்வு (Case Study)

பரீட்சை நோக்கிலான ஒரு பார்வை



பொ.அருணகிரிநாதன்
SLEAS III
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணக் கல்வி வலயம்.

(நேற்றைய தொடர்ச்சி)

**3. பாடசாலையின்/ நிறுவனத்தின் இலக்கை வரையறை செய்தல்**

பாடசாலையொன்றின் செயற்பாட்டிற்கும் அதன் இலக்கிற்கும் இடையிலான முரண்பாடான தன்மை மேலே காணப்பட்ட பிரச்சினையை மேலும் வலுவூட்டும் இலக்குகளை அடையாளம் காண்பது எஞ்சியிருக்கும் விடயங்களை பகுப்பாய்வு செய்வதற்கு வழிகாட்டியாக உதவும்.

**4.பிரச்சினைகளுக்குரிய தடைகளை இனம் காணுதல்**

நிறுவனம் ஒன்றின் இலக்குகளை அடைவதில் அங்கு சில தடைகள் காணப்படும். உதாரணமாக வரையறுக்கப்பட்ட நிதி, ஆளணிப்பற்றாக்குறை, வலுவான போட்டிகள் பலவீனங்கள், சவால்கள், முகாமைத்துவ கட்டமைப்பின் குறைபாடுகள், தீர்வுகளை முன்வைக்கும் போது அங்கு காணப்படும் தடைகள் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். தடைகளை நீக்குவதன் மூலம் இலக்குகளை அடைந்து கொள்ள முடியும்.

**5. பொருத்தமான மாற்று வழிகள் எல்லாவற்றையும் அடையாளம் காணல்**

இனம் காணப்பட்ட பிரச்சினைகளை தீர்ப்பதற்கு பொருத்தமான எல்லா மாற்று வழிமுறைகள் அனைத்தையம் பட்டியலிட வேண்டும். தமது ஆக்கத்திறன்களை மாற்றுத் தீர்வுகளை மேற்கொள்வதற்கு பயன்படுத்த வேண்டும். பொருத்தமான மாற்று வழிகளை தெரிவு செய்யும் போது பின்வரும் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

✦ செலவு குறைவாக இருத்தல்

✦ கால தாமதமின்றி செயற்படுத்தக் கூடியதாக இருத்தல்

✦ குறைந்த சாதனங்களை கொண்டு செயற்படுத்தக் கூடியதாக இருத்தல்

✦ இடர்கள் (Risk) குறைவாக இருப்பதை உறுதி செய்தல்

**6.பொருத்தமான சிறந்த மாற்று வழியை தெரிவு செய்தல்**

கைவசமுள்ள தகவல்களில் இருந்து ஒவ்வொரு மாற்று வழியையும் மதிப்பீடு



கல்வித் தரிசனம்

செய்து சிறந்த தீர்வை மேற்கொள்ள வேண்டும். அதாவது படிமுறைக்கு நேரடியாக தாவுவதை தவிர்க்க வேண்டும். ஏனெனில் இதனால் சில பிரச்சினைகள் ஏற்படும்.

✦ முக்கியமான தகவல்களை தவறவிடுதல்

✦ பிரச்சினையை தவறாக புரிந்து கொள்ளல்

✦ சிறந்த மாற்று வழித் தீர்வை தவறவிடுதல்

மேலும் கூறப்பட்டவை நிகழாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**7.அமுலாக்கல் திட்டத்தை விருத்தி செய்தல்**

திட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கான ஆராய்வின் இறுதி நிலையே முடிவினை நடைமுறைப்படுத்துவதாகும். அமுலாக்கல் திட்டம் இல்லாத ஒரு மிகச்சிறந்த தீர்மானம் கூட நிறுவனத்திற்கு பாதகமான நிலையை ஏற்படுத்தும் விடய ஆய்வுகளில் நிகழ்வுகள் முக்கியமான இடத்தை வகிக்கின்றன. நிறுவன செயற்பாடுகளில் எதிர்பாராமல் இடம்பெறும் விடயங்களை பொதுவாக நிகழ்வுகள் எனக் குறிப்பிடலாம். பாடசாலை செயற்பாடுகளில் அன்றாடம் எதிர்பாராத நிகழ்வுகள் நடந்தேறி வருவதுண்டு. இவை விரும்பத் தகாத பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தி சடுதியான எதிர்மறையான விடயங்களை ஏற்படுத்திவிடும். இதனால் முகாமையா ளர்கள் முன்கூட்டியே சில ஏற்பாடுகளை செய்து கொள்வதும் மனவெழுச்சி உறுதி களை பேணுவதும் முக்கியமானதாகும். முன்னெச்சரிக்கை செயற்பாடுகளை திட்டமிட்டுக் கொள்ள வேண்டும்.

**விடய ஆய்வு ஒன்றில் வினாக்கள் பற்றிய ஒரு நோக்கு**

இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான மடடுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைக்கான கல்வி நிர்வாகத் துறை சார்ந்த விடயம் பற்றிய ஆய்வு வினாத்தாளில் வினாக்களின் அமைப்பைப் பார்க்கும் போது பின்வரும் விடயங்களை அவதானிக்க முடியும்.

✦ குறித்த விடய வகை கற்றலில் இருந்து விடையை தெரிவு செய்யக் கூடியதான ஒரு வினா உள்ளடக்கப்பட்டிருக்கும்.

✦ ஏனைய வினாக்கள் கல்வி நிர்வாக முகாமைத்துவ விடயங்களோடு தொடர்புபட்ட பல்வேறு விடயப்பரப்புகளை உள்ளடக்கியிருந்ததை அவதானிக்க முடியும்.

✦ முகாமைத்துவ கட்டமைப்பு, ஆளணியினர் வகிபாகம் (2002 ஆம் ஆண்டு வினாத்தாள்)

✦ மாணவர் அடைவு மட்டத்தை அதிகரிப்பதற்கான செயற்றிட்டங்கள் (2002)

✦ தலைமைத்துவம், தலைமைத்துவ தேர்ச்சிகள், தலைமைத்துவ திறன்கள் (2002)

✦ ஆசிரியர் வினையாற்றுகை மதிப்பீட்டுத் திட்டம் (2005 , 2006)

✦ கல்வித்திணைக்கள அதிகாரிகளின் அணுகுமுறைக்ள (2005)

✦ அதிபரின் குறைபாடுகள், நீக்குவதற்குரிய நடவடிக்கைகள் (2010, 2011)

✦ ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்கான வேலைத்திட்டங்கள் (2010, 2011)

✦ பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டம் -PSJ (2010, 2011)

கடந்த கால பரீட்சை வினாத்தாள்களின் அமைப்பை சரியாக விளங்கிக் கொண்டு அதற்கேற்ப பரீட்சார்த்திகள் தம்மை பரீட்சைக்கு தயார் செய்து கொள்ள வேண்டும். கல்வித் துறையில் அண்மைக்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும் விடயங்கள் தொடர்பான அறிவும், அனுபவமும் தேடலும் முக்கியமானதாகும். அவை தொடர்பான சுற்று நிரூபங்கள் வெளியீடுகள், அறிக்கைகள், முன்மொழிகள், கட்டுரைகள் போன்றவற்றை வாசித்து அறிந்து கொள்ள வேண்டும். பின்வரும் விடயப்பரப்புகளில் பரீட்சார்த்திகள் தமது கவனத்தை செலுத்த வேண்டும்.

✦ பாடசாலை மேம்பாட்டுத்திட்டம் PSJ

✦ ஆசிரியர் செயலாற்றுகை மதிப்பீட்டுத் திட்டம்

✦ பாடசாலைச் செயற்றிட்டங்கள்

✦ பாடசாலைகளின், கல்வி நிறுவனங்களின் முகாமைத்துவ கட்டமைப்புகள்

✦ அதிபர்களின் தலைமைத்துவம், முகாமைத்துவம், தேர்ச்சித் திறன்கள்

✦ பாடசாலை மட்டத்திலான ஆசிரியர் அபிவிருத்தித்திட்டம்

✦ பாடசாலை உள்வாரி, வெளிவாரி மதிப்பீட்டு வேலைத்திட்டம்

✦ ஆசிரியர்களின் விழுமியம் மிக்க செயற்பாடுகள் தொடர்பான ஒழுக்க விழுமிய முறைமை மற்றும் பொதுச் சட்டத் தொகுப்பு

✦ பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படும் துறைசார் அபிவிருத்தி செயற்றிட்டங்கள்

✦ கல்வியில் தர உறுதிப்பாட்டை ஏற்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள்

✦ தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்திக்கான செயற்றிட்டங்கள்

✦ க.பொ.த. (உ/த) வகுப்புகளில் அறிமுகம் செய்யப்பட்ட தொழில் நுட்ப பாடத்துறை

✦ தொடருது கல்வி, ஆசிரியர் கல்வி-வாண்மை விருத்தி

✦ கல்வித்துறை வினைத்திறன் மேம்பாட்டுக்கான வேலைத்திட்டம்

மேலும் பாடசாலை முகாமைத்துவ, நிர்வாக செயற்பாடுகளில் பயன்படுத்தப்படும் முகாமைத்துவ கலைச் சொற்கள், நிர்வாக கலைச் சொற்களின் எண்ணக்கருக்களை சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும்.

**பின்வரும் விடயங்கள் தொடர்பான அறிவை மேம்படுத்த வேண்டும்.**

✦ வினைத்திறன் விளைதிறன்

✦ தலைமைத்துவ மாதிரிகள்

✦ பங்கு கொள் முகாமைத்துவம்

✦ பாடசாலையில் ஜனநாயக சூழலை ஏற்படுத்துதல்

✦ கல்வியில் தர விருத்திச் செயற்பாடுகள்

✦ தலைமைத்துவம் முகாமைத்துவம்

✦ பாடசாலை அபிவிருத்தித் திட்டங்கள்

✦ பாடசாலை தகவல் முறைமை (Emis)

✦ கலைத்திட்ட இணைக்கலைத் திட்ட முகாமை

✦ பாடசாலை நிதி , முகாமைத்துவ செயற்பாடுகள்

✦ தாபன விடயங்கள், நிதிப்பிரமாணங்கள், சுற்று நிரூபங்கள், அறிவுறுத்தல்கள் பரீட்சைக்கு தயாராகும் பரீட்சார்த்திகள் வினாக்களில் உள்ள சொற்பதங்களை சரியாக விளங்கிக்கொள்ளவேண்டும்.

**உதாரணம்:-**தலைவர் என்ற ரீதியில் 5 குறைபாடுகளை குறிப்பிடுக. நுனித்து விமர்சிக்குக, பரிசீலிக்குக, நுணுக்கமாக விளக்குக, நுணுக்கமாக பரிசீலிக்குக, நடைமுறைகளை விளக்குக. தெளி வாகக் காட்டுக. தேர்ச் சிகளை குறிப்பிடுக. தேர்ச்சிகளின் முக்கியத்துவ த்தை ஆராய்க. இவ்வாறான சொற்பதங்களை சரியாக விளங்கிக்கொண்டு விடையளிக்க முயற்சிக்க வேண்டும். பின்வரும் செயற்பாடுகளை முன்னெடுப்பது பொருத்தமானது.

✦ முகாமைத்துவ விடய ஆய்வில் பரீட்சார்த்திகள் பெறும் வெற்றியானது அவர்கள் விடய ஆய்வை எவ்வாறு அணுகுகிறார்கள் என்பதில் தங்கியுள்ளது.

✦ பரீட்சார்த்திகள் தமது அறிவு, அனுபவம்,ஆராயும்திறன் என்பவற்றின் என்பவற்றின் அடிப்படையில் விடய ஆய்வை விளங்கிக்கொள்ள வேண்டும்

✦ முகாமைத்துவ எண்ணக்கருக்களை சரியாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

✦ விடய ஆய்வை வாசித்து குறிப்பு எடுக்கும் போது வினாக்களுக்கு பொருத்த மான வகையில் குறிப்புகளை எடுத்தல் நன்று

✦ நேர முகாமைத்துவத்தை பின்பற்றுதல், வாசிப்பதற்கான நேரம் ஒதுக்குதல், குறிப் பெடுப்பதற்கான நேரம் ஒதுக்குதல், ஒவ் வொரு வினாவுக்கும் விடை எழுதுவதற்கான நேரம் ஒதுக்குதல் (உ+ம்) (15-20 நிமிடம்)

✦ முகாமைத்துவ எண்ணக் கருக்கள், முகாமைத்துவ கலைச் சொற்கள் பற்றி விளக்கம். (உ+ம்) திட்டமிடல், ஒழுங்குபடுத்துதல், நெறிப்படுத்தல், கட்டுப்படுத்துதல்.(PODC- Skill)

✦ குறித்த ஒரு நிகழ்வு நடைபெறாது தவிர்ப்பதற்கு என்ன நடவடிக்கையை மேற் கொண்டிருக்க வேண்டும் என்பதை குறிப்பி டுதல்

✦ விடைகளில் தெளிவு, தர்க்கரீதியான ஒழுங்கமைப்பு, தெளிவாக, சுருக்கமாக குறிப்பிடும் தன்மைகள் காணப்படுதல் வேண்டும்

✦ தேவையான இடத்து விடைகளில் கல்வி நிர்வாக கட்டமைப்புகள், சுற்றுநிருபங்கள், தாபன விடயங்கள், நிதிப்பிரமாணங்கள் ஆதாரங்களாக எடுத்தாளப்படலாம்

✦ விடைகளை தெளிவான, சுருக்கமான குறிப்புகளாக எழுவது பொருத்தமானது

✦ விடய ஆய்வில் குறிப்பிடும் பாடசாலையின் SWOT பகுப்பாய்வை செய்து குறிப்புகளை வைத்திருத்தல் (பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள், சவால்கள்)

**விடய கற்கை அடிப்படையிலான முறைமைகள்**

I நிலைமையின் இயங்குதன்மை இயங்கியலை விளங்கிக் கொள்ளல்

II நிலவும் பிரச்சினைகளை வரையறுத்தல், தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினையை தீர்மானித்தல்

III நடைமுறைச் சாத்தியமான வழியை உருவாக்குதல், அதனை கணிப்பீடு செய்து சாத்தியமான தீர்வை முன்வைத்தல்

IV ஒவ்வொரு வழிவகைகளுக்கு மான பலம், பலவீனம், சந்தர்ப்பங்கள், சவால்களை மதிப்பிடல்

V திருப்பதியளிக்கக்கூடிய அல்லது செயற்படுத்தக்கூடிய செயற்றிட்டங்களை தீர்மானித்தல்

**விடயக்கற்கைகளை பயன்படுத்தும் போது ஏற்படக்கூடிய நன்மைகள்**

✦ தெரிந்து கொள்வதற்கான தேவையை உருவாக்குதல்

✦ நடைமுறைகளை சிந்திப்பதற்கான கால இடைவெளியை வழங்குதல்

✦ விமர்சன ரீதியான சிந்தனைத்திறன் மட்டத்தை உயர்த்துதல்

✦ அவதானிக்கும் திறனையும் கற்றல் திறனையும் உயர்த்துதல்

✦ ஆழமான குறை காணலையும் கருத்துருவாக்கத்தையும் உடன் ஏற்படுத்துதல்

✦ பிரச்சினைகளை தீர்க்கும் திறன்களை விருத்தி செய்தல்

✦ கொள்கைகளையும் நடைமுறைகளையும் தொடர்புபடுத்த உதவுதல்

✦ சிக்கலான நிலைமைகளையும் சந்தர்ப்பங்களையும் வெளிப்படுத்துதல்

✦ நெருக்குதல்கள், பிரச்சினைகள் பற்றிய விழிப்புணர்வை அடைதல்

விடய ஆய்வினை உணர்வுபூர்வமாக அணுகும் போது பல நன்மைகள் ஏற்படும் முகாமைத்துவ திறன்களை அதிகரிப்பதற்கு விடய ஆய்வுக் கற்கைகளில் போதுமான அனுபவம் பெறுவது பொருத்தமானது. ஒவ்வொருவரும் தீர்மானம் எடுக்கும் திறனை வளர்த்துக் கொள்வதற்கும் விமர்சன ரீதியாக எந்தவொரு விடயத்தை அணுகுவதற்கும் விடய ஆய்வுக் கற்கைகள் உதவும் அறிவுசார் சிந்தனை வளர்ச்சிக்கும் அறிவுசார் செயற்பாடுகளுக்கும் இத்தகைய விடயக் கற்கைகள் பற்றிய அறிவு உந்துசத்தியாக விளங்க முடியும். (முற்றும்)

கல்வித் தரிசனம் பகுதிக்கு
துறைசார்ந்தவர்களிடமிருந்து
தரமான ஆக்கங்கள்
கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

# இலங்கை- இந்திய ஒப்பந்தம் முஸ்லிம்களை கண்டுகொள்ளவில்லை

## வடக்கு எதிர்க்கட்சி உறுப்பினர் றிவ்கான்

(யாழ்ப்பாணம்)

இலங்கை -இந்திய ஒப்பந்தம் முஸ்லிம்களின் அரசியல் இருப்பைக் கண்டு கொள்ளவில்லை என வடக்கு மாகாண சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர் றிவ்கான் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபையின் இரண்டாவது அமர்வு கடந்த 11 ஆம் திகதி யாழ்ப்பாணம் கைதடியில் அமைந்துள்ள வடமாகாணசபைக் கட்டடத்தில் நடைபெற்றது.

மேற்படி சபையின் அமர்வில் உரையாற்றும் போதே வடமாகாண சபையின் உறுப்பினர் றிவ்கான் பதியுதீன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 1987 ஆம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின்படி கொண்டு வரப்பட்ட 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் ஊடாக மாகாண சபைகள் உருவாக்கப்பட்டன.

வட-கிழக்கு முஸ்லிம்கள், இந்நாட்டின் வரலாற்றில் ஒருபோதும் தமிழ்த் தேசிய போராட்டத்திற்கு குறுக்காக நிற்கவில்லை. அதேநேரம் வடகிழக்கு முஸ்லிம்களின் அரசியல் இருப்பு வடக்கு -கிழக்கு தீர்வில் உதாசீனப்படுத்தக்கூடிய ஒன்றல்ல என்பதையும் இவ்வுயர் சபையில் அங்கம் வகிக்கும் அனைவரும் அறிவீர்கள்.

ஆயினும் எழுதப்பட்ட இலங்கை- இந்திய ஒப்பந்தம் முஸ்லிம்களின் அரசியல் இருப்பைக் கண்டுகொள்ளவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானது.

அதேநேரம் 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்திலும் முஸ்லிம்களின் அபிலாஷைகள் கணக்கில் எடுக்கப்படவில்லை.

இவ்வாறான சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் ஒரு நிதான போக்கைக் கடைப்பிடித்ததை இந்த நாடே அறியும்.

மாகாணசபை முறைமை தமிழ் மக்களைத் திருப்திப்படுத்தவில்லை என்ற அடிப்படையில் தமிழ் போராட்டம் கூர்மைப்படுத்தப்பட்டது. எதிர்காலத்தில் அரசியல் தீர்வுகளில் முஸ்லிம்களின் நியாயமான அபிலாஷைகள் உள்வாங்கப்பட வேண்டும் என்பதுதான் முஸ்லிம்களின் கோரிக்கையாக இருந்தது. இன்றும் இருந்து வருகிறது.

இவ்வாறான முஸ்லிம்களின் நிலைப்பாட்டுக்கு மத்தியிலும் முஸ்லிம்கள் வடகிழக்கு முழுவதும் தண்டிக்கப்பட்டார்கள், உயிர்களை இழந்தார்கள், உடைமைகளை இழந்திருக்கிறார்கள்.

யுத்தம் நடைபெற்ற போதும் இழப்புகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள். யுத்த நிறுத்த காலத்திலும் கூட இழப்புக்குள்ளாக்கப்பட்டார்கள் என்ற போதிலும் அவற்றைக் கிளறி ஏற்கனவே புண்பட்ட இதங்களை மேலும் ரணமாக்குவது எனது நோக்கமல்ல. ஏனெனில் தமிழ் பேசும் சமூகங்களான நம் இரு சமூகமும் இன்பத் தமிழின் சுகந்தத்தை ஒன்றாய் சுவாசித்த அந்தக்காலம் மீண்டும் இம் மண்ணில் மலர வேண்டும்.

அப்போதிருந்த நம் உறவுகளின் தொடர்புகள் மேலும் இறுக்கமாய் மிளிரவேண்டும் என்று நாம் ஆசைப்படுகின்றோம்.

மத்திய ஆட்சியிலிருந்து நீதி கிடைக்கவில்லை என்பதுதான் தமிழர் போராட்டத்தின் அடிப்படையாகும். அதே போன்று மாகாண ஆட்சியிலிருந்தும் நீதி கிடைக்கவில்லை என்று இன்னுமொரு சமூகம் விரக்தியின் விளிம்பிற்கு தள்ளப்படுவதற்கான ஆரம்ப சூழ் நிலைகூட இனியும் ஏற்பட்டு விடக் கூடாது என்பதில் இம் மாகாண ஆட்சி எப்போதுமே விழிப்பாக இருக்க வேண்டும்.

இம்மாகாண ஆட்சியின் கீழ் பல திணைக்களங்கள் இருக்கின்றன. அவற்றின் நிர்வாக செயற்பாடுகள் எப்பொழுதும் பக்கச்சார்பற்றனவாக இருப்பதை மாகாணசபை நிர்வாகம் உறுதி செய்ய வேண்டும்.

அதேநேரம், வெளியேற்றப்பட்ட வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக முதலமைச்சர் தனது கன்னியுரையில் குறிப்பிட்டு கூறியமை எமக்கு ஆறுதலை அளிக்கின்றது. அக்கூற்றுக்கு செயலுருவம் கொடுக்கவேண்டும்.

வடபுல முஸ்லிம்களின் மீள்குடியேற்றம் பலவித செயற்கையாக தோற்றுவிக்கப்படுகின்ற சவால்களுக்கு முகம்கொடுத்துக் கொண்டிருக்கின்றது.

அவர்கள் வெளியேற்றப்பட்ட பொழுது வேதனையைச் சுமந்து கொண்டு சென்றார்கள். மீள் குடியேற வரும் போதாவது நிம்மதிக் காற்றைச் சுவாசிப்போம் என்ற ஒரு ஆறுதலான மனோநிலையில் வர வேண்டும்.

துரதிர்ஷ்டவசமாக இம் மண்ணில் அவர்களின் மீள்குடியேற்றத்திற்கு ஏற்படுத்தப்படுகின்ற தடைகள் அவர்களுக்கு வெந்த புண்ணில் வேலைப்பாய்ச்சுவது போல் இருக்கின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் முதலாம் தெரு அருள்தரு சிவ தர்ம சாஸ்தா திருக்கோயிலில் (ஐயப்பன் கோயில்) எதிர்வரும் 17 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஐயப்பன் புனித மலை குருசுவாமி அணிவித்தல் விழா நடைபெறவுள்ளது.

அத்துடன் வருடாந்த மகர ஜோதி மண்டல பூஜை பெரு விழாவும் மஹோற்சவமும் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி டிசெம்பர் மாதம் 4 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் எதிர்வரும் 30 ஆம் திகதி சப்பற உற்சவமும் முதலாம் திகதி காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் 2 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்த உற்சவமும் நடைபெற்று 4 ஆம் திகதி மாலை பூங்காவன உற்சவம் நடைபெறும். (அ-7)

## வறுமை ஒழிப்பு தொடர்பில் காத்திரமான தீர்வு வேண்டும்

### ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய நாடுகள் அமைப்பில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடுகளுக்கு இடையில் பாரியளவில் பொருளாதார இடைவெளி காணப்படுவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய நாடுகள் வர்த்தக அமர்வுகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

1971 ஆம் ஆண்டு முதல் இந்த முரண்பாட்டு நிலைமை நீடித்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

வறுமையை இல்லாதொழிப்பது குறித்து பேசப்பட்ட போதிலும் இதுவரையில் அதற்கான தீர்வுகள் வழங்கப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கடந்த கால பிரகடனங்களில் குறிப்பிடப்பட்டதற்கு இணங்க இதுவரையில் வறுமை ஒழிப்பு தொடர்பில் காத்திரமான தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்படவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

அபிவிருத்தி அடையாத நாடுகளின் மீது கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)

## ராஜீவ் கொலை வழக்கின் இரு கைதிகள் தம்மை விடுதலை செய்யக்கோரி மனு

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை பெற்ற இரண்டு பேர் தங்களை விடுதலை செய்யக் கோரி தாக்கல் செய்துள்ள மனுவிற்கு பதில் அளிக்கும்படி மத்திய, மாநில அர்சுகளுக்கு சென்னை உயர் நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டுள்ளது.

ஆயுள் தண்டனை பெற்ற ராபர்ட் பயஸ், ஜெயக்குமார் ஆகியோர் தாக்கல் செய்துள்ள மனுவில், தாங்கள் 21 ஆண்டுகளாக சிறையில் இருப்பதாகவும், தங்களை சிறையிலிருந்து விடுவிக்குமாறும் மனுவில் கூறியுள்ளனர்.

இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் ராஜேஸ்வரன், பி.என்.பிரகாஷ் ஆகியோர் கொண்ட அமர்வு, இந்த மனு தொடர்பாக மத்திய மற்றும் மாநில உள்துறை அமைச்சகங்கள் 4 வாரத்தில் பதிலளிக்குமாறு உத்தரவிட்டது.

மேலும் வழக்கு விசாரணையை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு நீதிபதிகள் ஒத்தி வைத்தனர். (அ-2)

## பொதுநலவாய மாநாட்டுக்கு அரசாங்கம் அதிக செலவு

### ரணில் குற்றச்சாட்டு

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டுக்காக எந்தவொரு நாடும் செலவு செய்யாத வகையில், இலங்கை அரசாங்கம் செலவுகளை மேறகொண்டு வருவதாக எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்ரமசிங்க குற்றம் சுமத்தியுள்ளார்.

பொதுநலவாய நாடுகளின் மாநாட்டிற்கான செலவுகளில் தற்போது இலங்கை மூழ்கிக் கொண்டிருக்கிறது.

இதுவரையில் எத்தனையோ நாடுகளில் பொதுநலவாய மாநாடுகள் நடைபெற்றுள்ளன. எனினும எநதவொரு நாடும் இந்தளவு பணத்தை மாநாட்டுக்காக விரயம் செய்யவில்லை.


ஏற்கனவே இலங்கையில் செலவீனங்கள், நீரில் மூழ்கியுள்ள பொது மக்களின் மூக்குவரை உயர்ந்துள்ளன.

பொதுநலவாய மாநாட்டின் பின்னர் அவர்கள் மேலும் மூழ்க வேண்டிய நிலை ஏற்படும் என்று ரணில் சுட்டிக்காட்டினார்.

பொதுநலவாய நாடுகளுக்காக இன்று கொழும்பின் வீதிகள் ஷம்போ இட்டு கழுவப்பட்டால் மறுநாள் அது ஜெல் போட்டு கழுவப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ-2)




## மீண்டும் ஆரம்பித்தது சோதனை நடவடிக்கை




(மல்லாவி)

பொதுநலவாய மகா நாட்டை முன்னிட்டு மீண்டும் ஓமந்தைச் சாவடியில் சோதனை நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் தெரிய வருவது, ஐக்கிய நாடுகள் சபையின் மனிதவுரிமைகள் அமைப்பின் செயலாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் செய்ததையடுத்து நிறுத்தப்பட்டிருந்த ஓமந்தை சாவடியின் பயணிகள் மற்றும் ஊர்திகள் தொடர்பான சோதனை நடவடிக்கைகள் மீண்டும் தற்போது இறுக்கமான நிலையில் மேற்கொள்ளப்படுவதை அவதானிக்க முடிகின்றது.

இதேவேளை வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் ஏ-9 வீதி உட்பட பல்வேறு நகரப் பகுதிகள் உள்ளடங்கலாக சீருடை தரித்த பொலிஸாரும் சிவில் உடையில் புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது. (ம-15)

# அடிப்படை வசதிகளை காணாத ஆனைவிழுந்தான் கிராமம்

(கிளிநொச்சி)

**கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஆனைவிழுந்தான் கிராமத்தில் பல்வகைப்பட்ட குறைபாடுகள் காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.**

இக்கிராமத்திற்கு நிரந்தர கிராமசேவையாளர் கடமையிலில்லை. ஸ்கந்தபுரம், கண்ணகைபுரம் ஆகிய கிராமங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கிராம அலுவலரே இக்கிராமத்தையும் கவனித்து வருகிறார்.

செவ்வாய், சனிக்கிழமைகளில் மட்டும் இக்கிராம அலுவலர் இப்பிரிவில் கடமைபுரிவதாக தெரிவிக்கப்படுகின்ற போதிலும் இக்கிராம அலுவலரைச் சந்திப்பதென்பது தமக்கு மிகவும் இயலாத விடயமாக காணப்படுவதாக இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் இக்கிராமத்து மக்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் உதவித் திட்டங்கள் எவையும் உரிய முறையில் கிடைக்காததோடு ஒருங்கிணைந்த செயற்பாடுகளும் நடைபெறுவதில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

கடந்த மாகாண சபைத் தேர்தல் காலத்தின் போது வாக்காளர்களுக்கான தற்காலிக அடையாள அட்டைக்குரிய படங்கள் எடுத்தல் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ஆகியன தொடர்பான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகள் அப்பகுதிக்கு சென்ற வேளையிலும் உரிய வேலைத்திட்டங்களை முன்னின்று ஒழுங்குபடுத்தக் கூடிய ஒருவர் இல்லாத சிக்கலான நிலை ஏற்பட்டது.




இத்தகைய குறைபாடுகளுக்கு மத்தியில் இப்பகுதியின் பிரதான வீதியும் மிகவும் பழுதடைந்த நிலையில் காணப்படுகிறது.

இங்கு வசிக்கும் மக்கள் பொருளாதார ரீதியிலும் உதவிக் கொடுப்பனவுகள் இல்லாத நிலையிலும் சிரமமடைவதால் துறைசார்ந்த அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இவர்களின் குறைகளைப் போக்குவதற்கு ஒருங்கிணைந்த செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-254)




## மாணவர்களுக்கு கருத்தரங்கு




(முல்லைத்தீவு)

யாழ்.நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினால் நடத்தப்படும் முல்லைத்தீவு மாவட்ட க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு இன்றும் நாளையும் முற்பகல் 8.30 மணிமுதல் பிற்பகல் 4 மணி வரை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதன்படி இன்று வரலாறு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கும் நாளை வெள்ளிக்கிழமை தமிழ், கணிதம் ஆகிய பாடங்களுக்கான கருத்தரங்கும் நடைபெறவுள்ளன. (அ-5)

## வவுனியாவில் லைபீரிய பிரஜைகள் இருவர் கைது



(குருமன்காடு)

போலி டொலர்களை அச்சிட்ட லைபீரிய பிரஜைகள் இருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வவுனியா பொலிஸ் பிரிவில் வைத்தியசாலை சுற்றுவட்டப் பகுதியில் டொலர்கள் அச்சிடப்பட்டுள்ளதாக வவுனியா வலய குற்ற விசாரணை பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பகுதி நபர் ஒருவருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட நட்பினை அடுத்து வழங்கப்படும் இலங்கை ரூபாவிற்கு மூன்று மடங்கு டொலர் தரப்படும் என கூறி போலி டொலர்களை அவர்கள் வழங்கியுள்ளனர்.

இது குறித்து வவுனியா வலய குற்ற விசாரணை பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து இரு லைபீரிய பிரஜைகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர். (ம-250)

# உள ஆற்றுப்படுத்தலும் சமூக விழிப்புணர்வு நிகழ்வும்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலகத்தில் உள ஆற்றுப்படுத்தலும் சமூக விழிப்புணர்வு நிகழ்வும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

பிரதேச செயலகப் பிரிவில் உள ஆற்றுப்படுத்தல் பணிகளை மேற்கொள்வது, சமூக மட்ட விழிப்புணர்வை மேற்கொள்வது தொடர்பான விடயங்கள் இதில் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது கிராம மட்ட அமைப்புக்களையும் இணைத்து இப் பணிகளை மேற்கொள்வது தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கிளிநொச்சி கரித்தாஸ் -கியூடெக் நிறுவனம் இச் செயலமர்விற்கான நிதி அனுசரணையை வழங்கியது.

இந் நிகழ்வில் கரைச்சி பிரதேச செயலகத்தில், கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் பணிபுரியும் தொடர்புடைய வெளிக்கள உத்தியோகத்தர்கள் , மாதர் கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

வளவாளராக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவ அதிகாரி மா.ஜெயராஜா, கிளிநொச்சி மாவட்டச் செயலக உளவள அதிகாரி தே.துஸ்யந்தன், கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையின் உள சமூகப் பணியாளர் இ.ராஜேந்திரா ஆகியோர கலந்து கொண்டனர். (ம-254)



முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவிற்குட்டபட்ட நீராவிப்பிட்டி கிழக்கு கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 49 பயனாளிகளுக்கு ஐரோப்பிய ஒன்றியம் அவுஸ்திரேலிய அரசாங்கம்(AUSAID) மற்றும் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பிற்கு மான சுவிஸ்முகவர் அமைப்பு(SDC) என்பனவற்றின் நிதிப் பங்களிப்புடன் ஐ.நா.வாழ்வக ஸ்தாபனம்(UN-Habitat) இனால் நடைமுறைப்படுத்தப்படும் நிரந்தர வீடமைப்புத்திட்டத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் அண்மையில் முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற போது..

(படம்:-குருமன்காடுசெய்தியாளர்)


# வவுனியா மாவட்ட சாரண ஒன்றுகூடல்


(குருமன்காடு)

வவுனியா மாவட்ட சாரணர் சங்கம் நடத்தும் சாரண மாணவர்களுக்கான 11 ஆவது மாவட்ட ஒன்றுகூடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் எதிர்வரும் 17 ஆம திகதி மாலை 4 மணி வரை வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளதாக சாரண மாவட்ட ஆணையாளர் எம்.எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பதினைந்துக்கு மேற்பட்ட பாடசாலைகளின் 300 இற்கு மேற்பட்ட சாரணர்களுடன் இவ் வருடத்தின் வருடாந்த ஒன்றுகூடல் நடைபெறும். அத்துடன் பலதரப்பட்ட நிகழ்வுகளும் ஒழுங்கமைத்து நடத்த ஏற்பாடாகியுள்ளன. இதன் ஆரம்ப நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

இதில் சாரண மாணவர்களுக்கான கைத்திறன் போட்டிகள், சாரண பொது அறிவு போட்டி, சாரணர்களுக்கான மரதன்,கயிறிழுத்தல் மற்றும் பல நிகழ்வுகளுடன் எமது மாவட்ட பாடசாலை சாரணர்களுக்கிடையில் போட்டிகள் நடைபெறும் எனவும் எதிர்வரும் 17 ஆம் திகதி காலை 10 மணிக்கு பெண் சாரணியர் மற்றும் குருளைச்சாரணர்களுக்கான நிகழ்வுகள் நடைபெறவிருப்பதோடு இதன் இறுதி நிகழ்வுகள் எதிர்வரும் 17 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடை பெறும எனவும் அவர் தெரிவித்தார். (ம-250)





கிரிக்கெட்டின் அவதாரம் எனப்போற்றப்படும் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் 85 ஆவது அவதார தினத்தின்போதும், விசேட தினம் ஒன்றின்போதும் பாபாவிடம் இருந்து ஆசிகளைப் பெற்றபோது.....

# கிரிக். அவதாரத்தின் 200 ஆவது டெஸ்ட் இன்று

கிரிக்கெட்டின் அவதாரம் எனப்போற்றப்படும் இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் 200 ஆவது டெஸ்ட் இன்று மும்பை வான்கெடே மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

மேற்கிந்தியத் தீவுகளுடனான இப்போட்டி சச்சினின் சொந்த மண்ணில் நடைபெறுவதால் சிறப்பாக நடத்துவதற்கு மும்பையில் பிரமாண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

200 ஆவது டெஸ்ட் போட்டியில் சச்சின் சதம் அடிப்பார் என்ற ஆவலுடன் அவரது ரசிகர்கள் ஆவலுடன் காத்திருக்கின்றனர்.

### தாயாரின் வருகை

எம்.சி.ஏ., சார்பில் சச்சினுக்காக தனிப்பட்ட முறையில் 500 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இப்போட்டியை நேரில் காண உள்ளார் இவரது தாயார் ரஜ்னி. 'வீல் செயரில' தான் வர முடியும் என்பதால், சறுக்கு பாதை அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் 200ஆவது டெஸ்டில் பங்கேற்பதற்கு மரியாதை செலுத்தும் விதத்தில், சச்சின் முகத்துடன் கூடிய தபால் தலை வெளியிடப்பட உள்ளது.

### பாதுகாப்பு அதிகம்

கடந்த 2011இல் வான்கடே மைதானத்தில் நடைபெற்ற உலக கிண்ணக் கிரிக்கெட் தொடரின் இறுதி ஆட்டத்துக்கு அளித்த பாதுகாப்பைவிட, தற்போது கூடுதல் பாதுகாப்பு அளிக்க மும்பை பொலிசார் திட்டமிட்டுள்ளனர்.

### தங்க நாணயம்

கொல்கத்தா டெஸ்டில் இடம்பெற்ற நாணயச் சுழற்சி நிகழ்ச்சியை போல, மும்பையிலும் 10 கிராம் தங்க நாணயும் நாணயச் சுழற்சிக்கு பயன்படுத்தப்படவுள்ளது. போட்டி நடைபெறும் தினங்களில் (நவ.14- 18) ஒவ்வொரு நாளும் சச்சினின் 10,000 முக மூடிகள்(மாஸ்க்), 10,000 ஸ்கோர் கார்டுகள், 10,000 தொப்பிகள் ரசிகர்களுக்கு வழங்கப்பட உள்ளன. பவுண்டரி அடிக்கும்போது காண்பிக்கப்படும் விளம்பர அட்டைகள் அனைத்திலும் சச்சின் 'போட்டோ' இடம் பெற்றிருக்கும்.

இவை தவிர, வான்கடே மைதானத்தில் ஒவ்வொரு நுழைவு வாயிலிலும் இவரது பிரமாண்ட 'கட்- அவுட்' வைக்கப்படவுள்ளன. சச்சின் போட்டோவுடன் கூடிய பலூன்கள், அவரின் சர்வதேச சதங்கள் பற்றிய தகவல்கள் அடங்கிய பனர்களும் மைதானம் முழுவதும் அலங்கரிக்கப்படவுள்ளதாக தெரிகிறது.

### கிரிக்கெட்டுக்கு மூவர்

சச்சின் குறித்து கவாஸ்கர் கூறுகையில், காற்பந்து என்றால் பீலே, கூடைப்பந்து எனில் மைக்கேல் ஜோர்டான், குத்துச்சண்டை போட்டிக்கு முகமது அலி போல, கிரிக்கெட்டுக்கு மூன்று பேர் உள்ளனர். அவுஸ்திரேலியாவின் பிராட்மேன், மேற்கிந்தியத் தீவின் கேரி சோபர்ஸ் மற்றும் சச்சின் என்றார்.

### கபில்தேவின் வாழ்த்து

கபில்தேவ் கூறுகையில், கிரிக்கெட்டின் வைரம் சச்சின். இந்திய அணிக்காக கிரிக்கெட்டில் 24 ஆண்டுகள் சச்சின் பங்கேற்று விட்டார். இவருக்கு அனைத்து சந் தோஷங்களும் கிடைக்க வாழ்த்துகிறேன், என்றார்.

### 130 கோடி மக்களுக்காக...

மேற்கிந்தியத் தீவின் ஜாம்பவான் லாரா கூறுகையில், சுமார் 130 கோடி இந்திய மக்களுக்காக கிரிக்கெட் விளையாடுவது கடினம் எனத் தெரியும். எனக்கு 2 ஆண்டுகள் முன்னதாக விளையாடத் தொடங்கிய சச்சின், எனக்குப் பின் ஆறு ஆண்டுகள் கழித்து விடைபெறுவது வியக்கத்தக்கது. உலகின் மற்ற வீரர்களை விட அசத்தலான தொழில் நுட்பத் திறன் கொண்டவர், என்றார்.

### விளையாட்டு அமைச்சராக...

மத்திய விளையாட்டுத்துறை அமைச்சராக சச்சினை நியமிக்க வேண்டும் என தடகள ஜாம்பவான் மில்கா சிங், முன்னாள் கிரிக்கெட் வீரர் சந்து போர்டே, மல்யுத்த வீரர் சுஷில் குமார் வலியுறுத்தியுள்ளனர். சுஷில் குமார் கூறுகையில்,விளையாட்டுத்துறை அமைச்சராக சச்சின் வர வேண்டும்.

கடந்த 24 ஆண்டுகளாக கிரிக்கெட் விளையாடி வருகிறார். எங்களின் தேவையை இவர் நன்கு அறிந்து, பூர்த்தி செய்வார். பீஜிங் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்றவுடன், சச்சினை சந்தித்து காலில் விழுந்தேன். இந்தியாவுக்காக சிறப்பாக செயற்பட்டுள்ளீர்கள். இதை நீங்கள் தொடரவேண்டும் என்றார். லண்டன் ஒலிம்பிக்கில் வெள்ளி வென்ற பின், கைபேசியில் பேசினேன். சுமார் ஐந்து நிமிடம் சரிங்க சச்சின்.. சரிங்க சச்சின்.. என்று மட்டும் கூறினேன். வேறு என்ன சொல்வது என்றே தெரியவில்லை, என்றார்.

### ஆறு மாதம் அவகாசம்

இந்திய டெனிஸ் வீராங்கனை சானியா கூறுகையில்,

சில ஆண்டுக்ளுக்கு முன் சச்சினால் போட்டியில் சிறப்பாக செயறபட முடியவில்லை. பத்திரிகையில் இவரின் வெற்றி முடிந்து விட்டது என்றெல்லாம் செய்தி வெளி யானது. இதையும் மீறி, அடுத்த போட்டியில் சதம் விளாசினார்.

கிரிக்கெட் தவிர மற்ற விளையாட்டில் இவரின் பங்களிப்பு தேவை. என்றார் டெனிஸ் வீராங்கனை.

# சச்சினை கவர்ந்த சதங்கள்



*இதுவரை நடைபெற்ற **199** டெஸ்டகளில் **51** சதங்கள் அடித்து சாதனை புரிந்துள்ளார் சச்சின் டெண்டுல்கர். இதில் சச்சினுக்கு பிடித்தமான 'டொப்' **5** சதங்கள் வருமாறு,*

### 17 வயதில் சூறாவளியாக...

**119 ஓட்டங்கள்:** 1990ஆம் ஆண்டு (மான்செஸ்டர் மைதானம்) இங்கிலாந்துக்கு எதிரான இந்த டெஸ்டில் 408 ஓட்டங்கள் இலக்கை நோக்கி விளையாடியபோது, 127 ஓட்டங்களுக்குள் 5 முன்னணி வீரர்கள் வெளியேறியதால் இந்திய அணி தோல்வியின் பிடியில் சிக்கியது. வெற்றி பெறமுடியாது என அனைவரும் நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில், 6ஆவது வரிசையில் இளம் சூறாவளியாய் சுழன்றடித்த சச்சின் அணியை தள்ளாட்டத்தில் இருந்து காப்பாற்றியதுடன் தனது முதலாவது சதத்தையும் பதிவு செய்தார். 17 வயது நிரம்பிய சச்சின் இளம் வயதில் டெஸ்ட் சதம் அடித்த இந்தியர் என்ற பெருமையை இந்த போட்டியின் மூலம் பெற்றார். சமநிலையான இந்த டெஸ்டில் அவர் 189 பந்துகளில் 17 பவுண்டரிகளுடன் 119 ஓட்டங்கள் எடுத்து களத்தில் நின்று ஆட்டநாயகனாகவும் தேர்வானார்.

### அதிவேக மைதானத்தில்...

**114ஓட்டங்கள்:** 1992ஆம் ஆண்டு (பேர்த மைதானம், அவுஸ்திரேலியா): உலகின் அதிவேக மைதானமாக வர்ணிக்கப்படும் பேர்த் ஆடுகளத்தில் சிறிதும் அச்சமின்றி இளம் வீரனாக களம் புகுந்து, கிரேக் மெக்டர் மோட், மெர்வ் ஹூயூக்ஸ் போன்ற வேகப்பநது வீச்சு அசுரர்களை சமாளித்து விளையாடியதை கண்டு கிரிக்கெட் உலகமே பார்த்து வியந்தது. 161 பந்துகளில் 16 பவுண்டரிகளுடன் 114 ஓட்டங்கள் விளாசினார்.

### முதுகுவலியுடன்....

**136 ஓட்டங்கள்:** 1999ஆம் ஆண்டு (சென்னை, இந்தியா) கிரிக்கெட் வரலாற்றில் அவ்வளவு எளிதில் இந்த டெஸ்டை மறந்து விட முடியாது. இந்தியாவும், பாகிஸ்தானும் அணுகுண்டு சோதனை நடத்திய சில மாதங்களுக்கு கிரிக்கெட் களத்தில் நேருக்கு நேர் சந்தித்தபோது, சர்வதேச நாடுகளின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்தது. சென்னை சேப்பாக்கத்தில் 45 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரசிகர்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது.

பரபரப்பான கட்டத்தில் பாகிஸ்தான் நிர்ணயித்த 271 ஓட்டங்கள் இலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 82 ஓட்டங்களுக்குள் 5 விக்கெட்டுகளை இழந்துபோதிலும் சச்சின் தனிவீரராக அணியை தூக்கி நிறுத்தினார். அவருக்கு நயன் மோங்கா பக்கபலமாக தோள் கொடுத்தார். அந்த சமயம் சச்சின் கடுமையான முதுகு வலியால் பாதிக்கப்பட்டிருந்தார். இந்த காயம் அவரது கிரிக்கெட் வாழ்க்கையையே கேள்விக்குறியாக்கிக் கொண்டிருந்தது. அதை பொருட்படுத்தாமல் வசிம் அக்ரம், வாக்கர் யூனிஸ், சக்லைன் முஷ்டாக் போன்ற உலகத்தரம் வாய்ந்த பந்து வீச்சாளர்களை சாதுர்யமாக கையாண்டு அணியை வெற்றி நோக்கி பயணிக்க வைத்தார். 136 ஓட்டங்கள் எடுத்த சச்சின் வெற்றிக்கு 17 ஓட்டங்கள் தேவையாக இருந்த போது ஆட்டமிழந்தார். ஆனால் கண்ணிமைக்கும் நேரத்திற்குள் எஞ்சிய விக்கெட்டுகள் காலியாக இந்திய அணி 12 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியை தழுவியது.

### அற்புதமான இரட்டைச் சதம்

**241* ஓட்டங்கள்:** 2004 ஆம் ஆண்டு (சிட்னி மைதானம், அவுஸ்திரேலியா): அவுஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் வாக்கின் கடைசி டெஸ்ட் இதுதான். அவரை வெற்றியுடன் வழியனுப்புவோம் சவால் விட்ட அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களை சச்சின் நையப் புடைத்தெடுத்தார். அவரது இன்னிங்சில் இன்னொரு ஆச்சரியமான விடயம் என்னவென்றால் இரட்டை சதத்தை தொடும் வரை ஒரு 'கவர்டிரைவ்' ஷொட் கூட அடிக்கவில்லை. மொத்தம் 188 ஓட்டங்களை லெக் சைட் மூலமே கொண்டு வந்தார். அவரது இரட்டை சதத்தால் இந்திய அணி 705 ஓட்டங்கள் என்ற இமாலய இலக்கைக் குவித்ததுடன் போட்டியும் சமநிலையில் முடிந்தது.

### பாதிக்கப்பட்ட மக்களுக்காக...

**103* ஓட்டங்கள்:** 2008ஆம் ஆண்டு (சென்னை மைதானம், இந்தியா): இங்கிலாந்துக்கு எதிரான இந்த டெஸ்ட், உணர்வு பூர்வமான ஒரு போட்டியாக அமைந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் மும்பையில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் நடத்திய கொடூர தாக்குதல் நடைபெற்ற இரண்டு வாரத்திற்கு பிறகு அரங்கேறிய டெஸ்ட் இதுதான். இங்கிலாந்து நிர்ணயித்த 387 ஓட்டங்கள் இலக்கை இந்திய அணி வெற்றிகரமாக துரத்திப்பிடித்ததில் தெண்டுல்கரின் பங்களிப்பு மகத்தானது. சதம் அடித்து களத்தில் நின்ற அவர் இந்த வெற்றியை மும்பை தாக்குதலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அர்ப்பணித்தார்.

தன்னை அறிந்தாள்; தன் நாமம் கெட்டாள்;
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே!
– சுந்தரர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரவணைப்பு இராஜதந்திரம்

உன்னையே நீ அறிவாய் என்பது சோக்கிரட்டீஸின் கருத்து. என்னை நான் அறிதல் என்பது மிகவும் முக்கியமானது.

மனித வாழ்வில் ஏற்பட்டிருக்கக் கூடிய தோல்விகளுக்குப் பின்னால் தன்னை அறிதலில் ஏற்பட்ட குறைபாடுகளே காரணமாக இருந்துள்ளன. எனவே எங்களை நாங்களே அறிதல் என்பது மிகவும் முக்கியமான விடயம்.

ஆனாலும் தமிழர்களாகிய நாங்கள் எங்களிடம் இருக்கக்கூடிய பலம், பலவீனங்களையும் மற்றவர்களிடம் இருக்கக்கூடிய பலம், பலவீனங்களையும் அறிவதில் மகாதவறு இழைத்து விட்டோம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்த நாட்டின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் இருக்கக்கூடிய மிகப் பெரிய பலம் தனக்கு எதிரானவர்களை தனது கைக்குள் போட்டுக் கொள்வதுதான்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் அரச தரப்பிற்கு சதா உபத்திரம் கொடுத்து வந்த இடதுசாரிகளை அமைதியாக்கிய பெருமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவையே சாரும்.

வாசுதேவ நாணயக்கார, டி.யு.குணசேகர, பேராசிரியர் திஸ்ஸவிதாரண போன்ற இடதுசாரிகளை அமைச்சர்களாக்கி, அவர்கள் அரசுக்கு ஆதரவாகப் பேசுகின்ற ஒரு பெரும் திருப்புமுனையை கொண்டு வந்தவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.

கூடவே இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய ரணில் விக்கிரமசிங்கவின் மிக நெருங்கிய நண்பர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்றால் யார்தான் நம்புவார்கள்?

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியில் ரணில் வீற்றிருப்பதற்கும், கருஜயசூரிய மற்றும் சஜித் பிரேமதாஸ போன்றவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியைக் கைப்பற்றக் கடும் பிரயத்தனம் செய்தும் அது முடியாமல் போனமைக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே காரணம் எனலாம்.

ரணில் விக்கிரமசிங்கவை தனது நெருங்கிய நண்பராக ஆக்கிக் கொண்டதன் காரணமாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அரசுக்கு எதிர்க்கட்சியே இல்லையென்று ஆயிற்று.

இதேபோல் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர், தன்னை நம்பும் வகையில் ஜனாதிபதி மஹிந்த நடந்து கொள்வது அதிசயமான உண்மை.

இப்போது சனல் 4 செய்தியாளருக்கு கைலாகு கொடுத்து தேநீர் விருந்துபசாரத்தில் பங்கேற்குமாறு அழைத்துள்ளார் ஜனாதிபதி.

இலங்கைக்கு எதிராக ஜெனிவாவில் கொண்டு வரப்பட்ட பிரேரணைகளின் பின்னணியில் சனல் 4 தொலைக்காட்சியின் காணொலி இருந்தபோதிலும் அதனை வெளிக்காட்டாமல், சனல் 4 இன் செய்தியாளரைத் தம்பக்கம் இழுப்பதே புத்திசாலித்தனம் என்று கருதி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவ்வாறு நடந்துள்ளார்.

இலங்கையில் வேறு எந்தத் தலைவர் ஆட்சியில் இருந்தாலும் இவ்வாறு சனல் 4 செய்தியாளருக்கு கைலாகு கொடுத்திருக்கமாட்டார். இதுதான் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பெரும் பலம்.

முன்னதாக சனல் 4 தொலைக்காட்சியின் செய்தியாளர் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி கொடுத்ததே பெரும் இராஜதந்திரம்தான். இதன் காரணமாக, புலிகளின் மனிதவுரிமை மீறல் தொடர்பில் தாம் ஆராய்வதாக சனல் 4 செய்தியாளர் அறிவித்திருப்பது ஜனாதிபதி மஹிந்தவின் அரவணைப்பு இராஜதந்திரம் வேலை செய்துள்ளது என்பதற்குத் தகுந்த எடுத்துக்காட்டு.

## சிற்றூர்தியில் திருட முயற்சித்தவர் பயணிகளிடம் மாட்டிக் கொண்டார்

(யாழ்ப்பாணம்)

சிற்றூர்தியில் பயணித்த பெண்ணின் கைப்பையிலிருந்த ஒரு தொகைப் பணத்தை திருடிச் செல்ல முயன்ற இளைஞர் ஒருவர் பயணிகளிடம் வசமாக மாட்டிக் கொண்ட சம்பவம் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் 769 வழித்தட சிற்றூர்தியில் இடம்பெற்றுள்ளது.

பயணிகளிடையே பெரும் சலசலப்பை ஏற்படுத்திய இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து தெல்லிப்பழை நோக்கி புறப்பட்ட சிற்றூர்தியில் பயணித்த பெண்ணொருவரின் கைப்பையிலிருந்த ஒரு தொகைப் பணத்தை அருகில் நின்ற இளைஞரொருவர் அபகரிக்க முற்பட்டுள்ளார்.

இந்நிலையில் குறித்த இளைஞரின் நடவடிக்கையை கவனித்த சிற்றூர்தி நடத்துநர் பிரஸ்தாப இளைஞரை கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டார்.

இதையடுத்து குறித்த இளைஞரை சூழ்ந்து கொண்ட பயணிகள் பிரஸ்தாப நபரை நையப்புடைத்ததுடன் எச்சரிக்கை செய்து சிற்றூர்தியிலிருந்து வெளியேற்றியுள்ளனர்.

யாழ்.இந்துக்கல்லூரியை அண்மித்து சிற்றூர்தி பயணித்துக் கொண்டிருந்த நிலையில் இடம்பெற்ற இச்சம்பவத்தால் சிற்றூர்தி சிறிது நேரம் அவ்விடத்தில் தரித்து நின்றதோடு சிற்றூர்தியில் பெரும் சலசலப்பு ஏற்பட்டிருந்தது. (செ-5)

## இரு நூல் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

அரியாலையூர் ப.ஸ்ரீஸ்கந்தனின் **மனசுலாவிய வானம், அரியாலையூர் நாடக ஆளுமைகள்** எனும் இரு நூல் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அரியாலை நீர்நொச்சித்தாழ்வு அமரர்கள் மயிலு–மீனாட்சி ஞாபகார்த்த மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக முன்னாள் உபவேந்தர் பேராசிரியர் கலாநிதி க.மோகனதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் அறிமுகவுரையை ச.உருத்திரேஸ்வரன் வழங்க ஆசியுரையை அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் தேவஸ்தான தலைமைச்சிவாச்சாரியார் கிரியா பூஷணம் பிரம்மஸ்ரீ சு.முரளிதரக் குருக்கள் வழங்கவுள்ளார்.

வாழ்த்துரைகளை முன்னாள் யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், சட்டத்தரணி சோ.தேவராஜா, பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் இ.த. ஜெயசீலன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

சிறப்புரையை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பா.அகிலன் வழங்கவுள்ளார்.

நூல் வெளியீட்டுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வழங்க மனசுலாவிய வானம் நூலுக்கான நயப்புரையை அலை சஞ்சிகையின் ஆசிரியர் அ.யேசுராசா, அரியாலையூர் நாடக ஆளுமைகள் நூலுக்கான நயப்புரையை யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் நாடகமும் அரங்கியலும் சிரேஷ்ட விரிவுரையாளர் ப.ரதிதரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.

மேலும் மனசுலாவிய வானம் நூலின் முதற்பிரதியை யாழ்.மாநகர சபை ஆணையாளர் செ.பிரணவநாதன் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

அரியாலையூர் நாடக ஆளுமைகள் நூலின் முதற்பிரதியை பருத்தித்துறை நீதிமன்ற பதில் நீதவானும் சிரேஷ்ட சட்டத்தரணியுமான திருமதி விஜயராணி உருத்திரேஸ்வரன் பெற்றுக் கொள்ளவுள்ளார். (செ-5)

## சத்திய தரிசனம்



நீங்கள் மிருதுவான, கனிவான சொற்களைப் பயன்படுத்தும்போது கடவுளுக்கு நீங்கள் பூசை செய்து வழிபடுகிறீர்கள். இறைவனைப் பற்றிய அர்த்தமுள்ள சிறப்பு இயல்பு இது. மிருதுவான, இனிமையான வார்த்தைகளைப் பயன்படுத்தும்போது அரக்க குணம் கொண்டவர்களைக்கூட நல்ல பண்பான மனிதர்களாக மாற்ற முடியும். சொற்கள் தேனைச் சிந்துகின்றன. சொற்கள் நறுமணம் உள்ள மலர்கள் ஆகின்றன. சொற்கள் வேத ஞானத்தைப் பீடத்தில் ஏற்றிப்போற்றுகின்றன. வார்த்தைகள்தான் ஒரு நரகத்தையோ அல்லது சொர்க்கத்தையோ உருவாக்குகின்றன. வார்த்தைகள் உங்களைச் சிறைப்படுத்த வல்லவை அல்லது விடுதலை தரவும் வல்லவை.

பழைய வழக்கங்கள் மற்றும் கடந்தகால மனப்பாங்குகள் ஆகியன மீண்டும் வராது பார்த்துக்கொள்வதில் நீங்கள் மிகுந்த எச்சரிக்கையுடன் இருந்திட வேண்டும். இவ்வகையில் மூன்றாம் விதியான இறுதிவரை போராடு என்பதனைப் பின்பற்றி நான்காவது சுற்றான **விளையாட்டை முடித்திடுங்கள்** என்னும் நிலையின் முடிவில் வெற்றியினை அடைவீர்கள்.

## பரிசளிப்பு விழா

யாழ்/புனித சாள்ஸ் மகாவித்தியாலய பரிசளிப்பு விழா இன்று காலை 9 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ஜே.கிறிஸ்ரபெல் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா, யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

* * *

(யாழ்ப்பாணம்)

கரணவாய் மணியகாரன் தோட்டம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் கு.பாஸ்கரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தொழிலதிபரும் சமாதான நீதவானுமாகிய சமூகச்சுடர் சு.நடேசு பாஸ்கரன், சிறப்பு விருந்தினர்களாக கரணவாய் தெற்கு கிராம அலுவலர் கே.ரி.புவனேந்திரன், சமூகநலன் உத்தியோகத்தர் வெ.சுப்பிரமணியம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி இந்திராணி பாஸ்கரன் வழங்கவுள்ளார். (அ-5)

## நீரிழிவு பரிசோதனை


சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு கோப்பாய் ஆசிரிய கலாசாலை கணித, விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் நடத்தப்படும் இலவச நீரிழிவுப் பரிசோதனையும் வைத்திய ஆலோசனை வழங்கும் நிகழ்வும் இன்று வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நடைபெறவுள்ளது.

இதன்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய நிபுணர் எஸ்.ஸ்ரீகரன் கலந்து கொண்டு மருத்துவ ஆலோசனைகளை வழங்கவுள்ளார். இதற்கான அனுசரணையை ஹேமாஸ் நிறுவனம் வழங்குகின்றது. (செ-5)

## யமசங்கார உற்சவம்

சுன்னாகம் மயிலணி ஸ்ரீவிஸ்வநாத சுவாமி கோயிலில் ஐப்பசி கடைசி வெள்ளி தினமான நாளை மாலை 3 மணிக்கு யமசங்கார உற்சவம் நடைபெறவுள்ளது.

மாலை 3 மணிக்கு விசேட பூஜைகள் ஆரம்பமாகி தொடர்ந்து மார்க்கண்டேயர் சிவபூஜையும் யம சங்கார நிகழ்வும் நடைபெற்று பிராயச்சித்த அபிஷேகமும் நடைபெறவுள்ளது. (அ-7)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### வாசற்படியில் தலைவைத்து தூங்கக்கூடாது என்று கூறுவது எதனால்?

சிறுவர்களானாலும் பெரியவர்களானாலும் வாசற்படியில் தலைவைத்துத் தூங்கினால் பாட்டிமார் திட்டுவது வழக்கம்.வாசற்படியில் தூங்குவது தீங்கானது. தரித்திரம் என்றெல்லாம் கூறிவந்தனர். ஆனால் தெளிவான ஒரு காரணம் கூற இயலவில்லை. இதனால் முதியவர்கள் வாசற்படியில் தூங்கிய சில கதை பாத்திரங்களுக்கு நேர்ந்த துன்பங்களைக் கூறிபோதித்து வந்தனர்.

அந்த கதைகளைக் கேட்பவர்களுக்கு அது இயல்பாகவே மனக்குழப்பத்தை உருவாக்கும். இதனால் அவர்கள் வாசற்படியில் தலைவைத்துத் தூங்குவதைத் தவிர்க்கநேரிடும். இதனால் கூறுபவருக்கும் மகிழ்ச்சி, கேட்பவருக்கும் திருப்தி.

விஞ்ஞானமுறையில் ஆராய்ந்தால் பாட்டியின் கதையில் கருத்தில்லையானாலும் கூறிய கூற்றில் ஆழ்ந்த கருத்துள்ளதைக் காணலாம். பாரதத்தில் மட்டுமல்ல சீன நாட்டிலும் இந்த நம்பிக்கை கடைப்பிடிக்கின்றனர். சதுர வடிவில் அமைந்த வாசற்படிகள் அவர்கள் தவிர்த்துள்ளனர். அதனால் வாசற்படியின் மேல் பாகம் வளைந்து ஆர்ச் ரூபத்தில் அமைக்கின்றனர்.


ஒரு டௌசிங்ராட் உபயோகித்து வாசற்படியைப் பரிசோதித்தால் நெகடிவ் சக்திகள் பரவுகின்றதை உணரலாம். வாசற்படியில் தலைவைத்துத் தூங்கினால் இவ்வாறு பரவும் சக்திகள் நமது மூளையை பாதிக்கும் என்று கண்டறிந்துள்ளனர்.வாசற்படியில் தலைவைப்பதைத் தடைசெய்வது இதனால் என்று பாட்டிக்கும் தெரியாமலிருந்ததா?

# ஐந்தாம் நாள் நினைவு கூறுதலும் நன்றி நவிலலும்

துணைவன் பிறப்பு
**1946 .12 .17**


இறப்பு
**2009 .05 .06**





துணைவி பிறப்பு
**1949 .02 .03**


இறப்பு
**2013 .11 .09**



## காலம் சென்ற அந்தோனிப்பிள்ளை மனுவேற்பிள்ளையின் மனைவி பிரான்சிஸ்கா (துரைமணியின்) தங்கப்பொன் அவர்கள்

காலஞ்சென்ற சிங்ராசா செபமாலையின் மகளும்
காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை அஞ்சலீனம்மா (பாக்கியம்) அவர்களின் மருமகளும் ஆவார்.







சகோதரர்கள்
சகோதரன் தம்பிராசா மைத்துனி கத்தரீன்
காலஞ்சென்ற சகோதரன் அல்பிறட் மைத்துனி பத்திமாகிறேஸ்
சகோதரன் மரியதாஸ் மைத்துனி இருதயநாயகி (லீலா) லண்டன்
சகோதரன் கலாநிதி வண. யேசுராசா மைத்துனி யோகிலா
சகோதரன் அந்தோனிப்பிள்ளை (அன்ரன்) மைத்துனி காலஞ்சென்றசகுந்தலா
சகோதரன் வண. போதகர் பூலோகசிங்கம் மைத்துனி தியடொய்சியா

பிள்ளைகள்
மகள் ஆசிரியை கொன்சலா மருமகன் யோன்சன் பேரப்பிள்ளைகள் லின்சியா,கியுமன்
மகள் வின்சலாருத்தினி மருமகன் சிறில் பேரப்பிள்ளைகள் ஜீவன், றெனோட்
மகள் அஞ்சலாருத்தினி மருமகன் ரமேஸ் பேரப்பிள்ளைகள் அஜக்சன்,றெனோசிகா)
மகன் கொன்சன் மருமகள் றாஜீ பேரப்பிள்ளைகள் சியா கால்ஸ்டன் லண்டன்
மகன் றஞ்சன் மருமகள் நிமாலினி லண்டன்
மகன் நிக்சன் மருமகள் ஜீன் (அன்ரோன்ஸ்) லண்டன்
மகள் நிக்சலா மருமகன் தாஸ் பேரப்பிள்ளைகள் கரிஸ்ரோன்,ஹெஸ்ரோன் பிரான்ஸ்

மைத்துனர்மார்
காலஞ்சென்ற மைத்துனர் செலஸ்ரீன் (முன்னால்இ.போ.ச.ஊழியர்) சுகோதரி மேரியோசேப்பின் (பாப்பா)
யோசேப் (ஐயா) சகோதரி மேரிதிரேசா (மலர்)
காலஞ்சென்ற அல்பிறட் (ராசு) சகோதரி சறோசா (சித்தி)
காலஞ்சென்ற கில்பேட் சகோதரி மேரி
அல்போன்ஸ் சகோதரி பிரான்சிஸ்கா (இதயம்)
அருள்தந்தை வண. அகஸ்ரின் (மறைக்கல்வி நடுநிலைய இயக்குனர் மறைமாவட்டம் யாழ்ப்பாணம்)

(C/5461)


**12.11.2013 அன்று நடைபெற்ற மனுவேற்பிள்ளையின் மனைவி பிரான்சிஸ்கா தங்கப்பொன் அவர்களின் இல்லத்தில் நடைபெற்ற மரணநிகழ்விலும் திப்பலியிலும் கலந்து கொண்ட மதகுருக்கள் கன்னியாஸ்திரிகள், திருச்சபை போதகர்மார், ஆசிரியர்கள்,மாணவர்கள், சமூகத்தலைவர்கள், வெளிநாட்டில் இருந்து வந்தவர்கள், வெளிநாட்டில் இருந்து அனுதாபம் தெரிவித்த அனைத்து உறவுகளுக்கும், ஆரோக்கியசாமி குடும்பத்தினர் ஜெமட்டகொட, அன்னாரின் இறுதி அடக்க வழிபாட்டில் கலந்து கொண்ட அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவிப்பதோடு 14.11.2013 (வியாழக்கிழமை) அன்று நடைபெறும்நினைவு நாளில் தாங்கள் அனைவரையும் அந்நிகழ்வில் கலந்த கொள்ளும் வண்ணம் மனுவேற்பிள்ளையின் மனைவி பிரான்சிஸ்கா தங்கப்பொன் அவர்களின் சார்பாக அன்புடன் அழைக்கின்றோம்.**

தொடர்புகளுக்கு :- 077 00442035810015 லண்டன்
07754000170 / 0773357751

தகவல்
சகோதரர்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், மைத்துனர்கள்.

# இலங்கையை வீழ்த்தி நியூசிலாந்து திரில் வெற்றி

இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கும், இலங்கை அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் 2ஆவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றது.



அம்பாந்தோட்டை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் அரங்கில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 20.4 ஓவர்களில் ஒரு விக்கெட்டை இழந்து 117 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது இடி, மின்னல் காரணமாகப் போட்டி இடைநிறுத்தப்பட்டது.

அதன் பின்னர் 23 ஓவர்கள் கொண்ட போட்டியாக மாற்றப்பட்டு போட்டி தொடர்ந்து இடம்பெற்ற போது இலங்கை அணி ஒரு விக்கெட்டை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது போட்டியைப்போன்று ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான திமுத் கருணாரத்ன (04) விரைவாகவே ஆட்டமிழக்க, அதன் பின் 2-வது விக்கெட்டுக்காக ஜோடி சேர்ந்த திலகரட்ண டில்ஷானும், குமார் சங்கக்காரவும் சிறப்பான இணைப் பாட்டத்தைப் புரிந்திருந்தனர்.

துடுப்பாட்டத்தில் இலங்கை அணி சார்பாக குமார் சங்கக்கார 59 பந்துகளில் 71 ஓட்டங்களையும், திலகரட்ண டில்ஷான் 72 பந்துகளில் 55 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் நியூசிலாந்து சார்பாக வீழ்த்தப்பட்ட விக்கெட்டை அணியின் தலைவர் கைல் மில்ஸ் கைப்பற்றினார்.

டக்வேர்த் லூயிஸ் முறையில் 23 ஓவர்களில் 198 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 23 ஓவர்களின் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

2 விக்கெட்டுக்களை இழந்து 8 ஓட்டங்களுடனும், 3 விக்கெட்டுக்களை இழந்து 34 ஓட்டங்களுடனும் காணப்பட்ட அவ்வணி சார்பாக 5ஆவது விக்கெட்டுக்காக 93 ஓட்டங்கள் பகிரப்பட்டிருந்தன. எனினும் இறுதி ஓவ்ரில் 20 ஓட்டங்கள் தேவைப்பட்டன. ஹேரத் வீசிய அந்த ஓவரை எதிர்கொண்ட நேதன் மக்கலம், அந்த ஓவரின் இறுதி 4 பந்துகளிலும் (6,4,6,6) 22 ஓட்டங்களை விளாசி அவ்வணிக்கு வெற்றியைப் பெற்றுக் கொடுத்தார்.

துடுப்பாட்டத்தில் நியூசிலாந்து அணி சார்பாக ரொம் லேதம் 68 பந்துகளில் 86 ஓட்டங்களையும், லூக் றொஞ்சி 26 பந்துகளில் 49 ஓட்டங்களையும், நேதன் மக்கலம் 9 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்களையும் பெற்றனர்.



பந்துவீச்சில் இலங்கை அணி சார்பாக நுவான் குலசேகர 4 விக்கெட்டுக்களையும், சச்சித்திர சேனநாயக்க 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக நியூசிலாந்து அணியின் ரொம் லதம் தெரிவானார்.

இத்தொடரின் முதலாவது போட்டி மழை காரணமாகக் கைவிடப்பட்டிருந்த நிலையில், 2 போட்டி களின் நிறைவில் நியூசிலாந்து அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை வகிக்கின்றது.

இரு அணிகளுக்குமிடையிலான 3-வதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச போட்டி எதிர்வரும் 16-ம் திகதி தம்புள்ள ரன்கிரி சர்வதேச அரங்கில் நடைபெறுகிறது.


# அறிவித்தல்

## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

## கிளைக்குழுத் தெரிவு - 16.11.2013 (சனிக்கிழமை)

மேற்படி சங்கத்தின் துணைவிதி 20(2) இன் படி என்னால் ஆக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளுக்கு அமைய மேற்படி சங்கத்தின் பின்வரும் கிளைகளின் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்கான கிளைகளின் பொதுச் சபைக் கூட்டங்கள் மேற்படி ஒழுங்கு விதிகளின் பந்தி 9 இற்கமைய கீழ்க்குறிப்பிடப்படும் கால அட்டவணைப்படி நடைபெறும் என யாழ்ப்பாணம் மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் குமாரசிங்கம் அருந்தவநாதன் ஆகிய நான் 08.04.2013 ந் திகதிய 1596/17 ம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களுக்கமைய சங்கத்தின் எல்லா உறுப்பினர்களுக்கும் இத்தால் அறிவிக்கின்றேன்.

1. கிளைப் பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பம் : 16.11.2013 ந் திகதி, சனிக்கிழமை மு.ப 10.00 மணி
2. கூட்டங்கள் நடைபெறும் இடங்கள் மற்றும் தவிசாளர்களின் பெயர் விபரங்கள்:

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | கூட்டம் நடைபெறும் இடம் | தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 50 | சங்கானை | சங்கத் தலைமைக் காரியாலயம் | கு.சஜீவன் |
| 2 | 51 | நிற்சாமம் | சரஸ்வதி சனசமூக நிலையம், நிற்சாமம் | தி.பிரதீப் |
| 3 | 52 | சித்தன்கேணி | கலைவாணி சனசமூக நிலையம், சித்தன்கேணி | சு.அகிலன் |
| 4 | 53 | காலையடி | ஸ்ரீராம் சனசமூக நிலையம், சுழிபுரம் | இ.விஜயமோகனராஜா |
| 5 | 54 | குடாக்கனை | அம்பாள் சனசமூக நிலையம், சுழிபுரம் | வ.நிதர்சன் |
| 6 | 55 | காளுவன் | தமிழ்த்தாய் சனசமூக நிலையம், திக்கரை | வை.கைலைநாதன் |
| 7 | 56 | தொல்புரம் | கலைவாணி சனசமூக நிலையம், தொல்புரம் | இ.தயாகரன் |
| 8 | 57 | பொன்னாலை | மனிதவள சனசமூக நிலையம், மூளாய் | க.திசாகரன் |
| 9 | 58 | வட்டு கிழக்கு | கலைவாணி சனசமூக நிலையம், துணவி | வி.கு.வின்சன் ஞானதயாளன் |
| 10 | 59 | வட்டு மேற்கு | அக்கினி வைரவர் கோவிலடி, வேரம், மூளாய் | தா.தவமன்னன் |
| 11 | 60 | அராலி வடக்கு | திருமகள் சனசமூக நிலையம், அராலி | தி.வித்தககலாநிதி |
| 12 | 61 | அராலி மேற்கு | அம்பாள் க.தொ.கூட்டுறவுச் சங்கம், அராலி மத்தி | த.கண்ணதாசன் |

ஒப்பம்
வி.கே.அருந்தவநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
யாழ்ப்பாணம்

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அலுவலகம்
857, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
திகதி:- 03.11.2013

(சி-4482)


# சங்கக்கார சாதனை




இந்த வருடத்தில் குறைந்த ஒருநாள் சர்வதேச போட்டிகளின் மூலம் 1000 ஓட்டங்களை விரைவாக பெற்ற வீரர் என்ற பெருமையை இலங்கையின் குமார் சங்கக்கார பெற்றுள்ளார்.

இதன்படி 19 போட்டிகளில் அவர் இந்த 1000 ஓட்டங்களை எடுத்துள்ளார்.

நியூசிலாந்து - இலங்கை அணிகளுக்கிடையிலான இரண்டாவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டி, கடந்த 12-ம் திகதி அம்பாந்தோட்டை, சூரியவெவ மைதானத்தில் நடைபெற்றது.

இந்தப் போட்டியில் விளையாடிய சங்கக்கார ஆட்டமிழக்காமல் 71 ஓட்டங்களை எடுத்ததன் மூலமே இச்சாதனையைப் படைத்தார்.

# உரிமைக்காக போராடும் எமக்கு அவதானம் அவசியம் - விக்கி

(யாழ்ப்பாணம்)

தமிழர்களாகிய நாம் வாழும் உரிமைக்காக சாதாரணமானவர்களுடன் போராடவில்லை. ஒருநாட்டின் இராணுவத்துடன் போராடுகின்றோம்.

எனவே மிகவும் பாதுகாப்பான முறையிலும் அவதானமாகவும் போராட வேண்டும். வெகுசன போராட்டங்கள் மூலம் அழுத்தங்களினைக் கொடுப்பதன் மூலம் எமக்கான தீர்வுகள் நியாயங்கள் கிடைக்கும் என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வலிகாமம் வடக்கு மக்களின் மீள் குடியேற்றத்தினை வலியுறுத்தியும், பொது மக்களின் வீடழிப்பினை நிறுத்தக் கோரியும் மாவிட்டபுரம் கந்தசாமி கோவிலில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.

இப்போராட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று அங்கு சென்ற முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மக்களினைச் சந்தித்து உரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

வலி.வடக்கு மக்களினது பிரச்சினைகள் தொடர்பில் எமக்குத் தெரியும். இரண்டு வருடங்களாக இடிக்கப்படாமல இருந்த வீடுகள் தற்போது இராணுவத்தினரால் இடிக்கப்பட்டு வருவதாக எமக்கு மக்கள் அறியப்படுத்தியுள்ள னர்.

மக்களின் வீடுகள் அழிக்கப்படுவதனால தமது வாழ் நிலங்கள் முழுமையாக நிரந்தரமாக பறிக்கப்பட்டுவிடுமோ என்ற ஏக்கத்தில் மக்கள் உள்ளனர்.

எமது மக்களும் நாமும் இவற்றுக்கெதிராக தொடர்ச்சியாக சாத்வீக வழியில் போராடி வருகின்றோம் என சர்வதேச ஊடகவியலாளர்களிடம் கூறிய முதலமைச்சர்,

எங்களால் எதனையும் செய்ய முடியாதுள்ளது. உள்நாட்டில் எங்கள் பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக கூடியவர்கள் அல்லது கேட்கக்கூடியவர்கள் இல்லை. எனவே எங்கள் பிரச்சினைகளை சர்வதேச நாடுகளின் பிரதிநிதிகளிடமும், ஊடகம் சார்ந்தவர்களிடமும் தொடர்ச்சியாக கூறிக் கொண்டிருக்கின்றோம். குறிப்பாக நேற்று முன்தினம வருகைதந்திருந்த கனேடிய நாட்டின் பிரதநிதிகளிடமும் தெளிவாகக் கூறியிருக கின்றோம்.

நாளை வருகைதரவுள்ள பிரிட்டிஷ் பிரதமரிடமும் நாங்கள் மிகத் தெளிவாக கூறவுள்ளோம். எனவே இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கான முயற்சிகளை எம்மால் முடிந்தவரையில் முயற்சிப்போம். நாங்கள் எமக்கு மறுக்கப்பட்டிருக்கும் வாழும் உரிமைகளுக்காக சாதாரணமானவர் களுடன போராட்டம் நடத்தவில்லை. ஒரு நாட்டின் இராணுவத்துடன் போராட்டம் நடத்திக கொண்டிருக்கின்றோம். எனவே போராட்டம மிக அவதானமாக இருக்க வேண்டும்.

நாங்கள் முதலாவதாக ஆளுநரை மாற்றம் செய்வதற்கான போராட் டத்தை நடத்தியிருக்கின்றோம். எனவே போராட்டத்தை தொடர்ந்தும் முன்னெடுப்போம். மக்கள் ஒன்றிணைந்து இவ்வாறான உண்ணாவிரதப் போராட்டங்களை நடத்துவதன் மூலம் மட்டுமே இவ்வாறான எதேச்சதிகார நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளியிட முடியும். அதேபோன்று இவ்வாறான மக்கள் போராட்டங்களைத் தடுக்கவும், முடக்கவும் இராணுவத்தினரும், அரசாங்கமும பல முயற்சிகளை மேற்கொள்ளும்.

எத்தகைய அடக்குமுறைகளுக்கு மததியிலும் மக்கள் தமது சாத்வீக வழியிலான போராட்டங்களினை நிறுத்த விடாமல் தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும் என்றார். (எ-4,6)

## சனல் 4 ஊடகவிய...

ஆதரவாளர்கள் எனக் கூறிக் கொண்டவர்கள் சூழ்ந்து கொண்டு போராட்டம் நடத்தியுள்ளனர்.

விடுதலைப் புலிகளிடம் இருந்து பணத்தைப் பெற்றுக் கொண்டு சனல் 4 ஊடகவியலாளர்கள் பணியாற்றுவதாக குற்றம் சுமத்தியுள்ள ஆர்ப்பாட்டக்காரர்கள், அவர்களை கொழும்புக்குத் திரும்பிச் செல்லு மாறு கோசம் எழுப்பியுள்ளனர். இதனால அனுராதபுரத்துடன் மக்ரே குழுவினர் மண்டும் கொழும்பு திரும்பியுள்ளனர்.

இதேவேளை, போராட்டங்களைக் கண்டு சோர்ந்து போகப் போவதில்லை என சனல் 4 ஊடகத் தின் ஊடகவியலாளர் கலும் மக்ரே தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், தடைகள் மற்றும் போராட்டங்களை கடந்து வடக்கு நிலைமைகள பற்றிய செய்திகள் அறிக்கையிடப்படவுள்ளன.

தடைகளைக் கருத்திற்கொள்ளாது நாம் எமது பணிகளை தொடரவுள்ளோம். ஆனால் நாங்கள் வவுனியாவிற்கு ரயில் மூலம் பயணம் செய்கின்ற வபரம் எவ்வாறு போராட்டம் நடத்தியோருக்கு தெரிந்தது என்பது பற்றி இலங்கை அரசாங் கத்திடம் விளக்கம் கோரத் திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறான நடவடிக்கைகள் பொதுநலவாய நாடுகள் அமைப்பின் கொள்கைகள் கோட்பாடுகளுக்கு முரணானது, ஊடக சுதந்திரம் உறுதிப்படுத் தப்பட வேண்டியது எங்கும் அவசியமான்து.

இலங்கையில் நல்ல ஊடகவியலாளர்கள் இருப்பதாகவும் அவர்கள் சுயாதீனமாக இயங்க முயற்சிக்க வேண்டுமெனவும் கலும் மக்ரே மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

## 50 சர்வ...

பட்டது.

மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டு மங்கல வாத்தியங்கள் இசைத்து பாடசாலை மாணவிகளின் கலாசார நடனத்துடன் அவர்கள் உற்சாகமாக வரவேற்கப்பட்டனர்.

இதன்போது சர்வதேச பிரதிநிதிகள் சிலர் ஆடிப்பாடி தமது மகிழ்ச்சியையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை இக்குழுவினர் இன்றைய தினம் யாழில் பல தரப்பட்ட சமூகத்தினரையும் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர். (செ-6)

## ஆர்ப்பாட்டம்...

நிலையில் அவர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் காணாமல் போனோரின் விடயத்தில் சர்வதேசம் தலையிட்டு தீர்க்கக்கோரியும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட இருந்தது.

அதனைக் குழப்பும் முகமாகவே இவர்களினை ரி.ஐ.டியினரும் பொலிஸாரும் திருப்பியனுப்பி உள்ளனர் என வடக்கு மாகாண சபையின் உறுப்பினர் திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்தார். (செ-4,6)


# மரண அறிவித்தல்

## தம்பையா இராஜேந்திரன்

(ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் வடமராட்சி)

சிவகிரி, வதிரி, கரவெட்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பிரதம கணக்காளர் (வட மாகாண கல்வியமைச்சு) தம்பையா இராஜேந்திரன் நேற்றுப் புதன்கிழமை 13.11.2013 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான தம்பையா - தங்கமுத்து தம்பதிகளின் இளையமகனும் காலஞ்சென்ற பாலகிருஸ்ணன் பொன்னம்மா தம்பதிகளின் மருமகனும் அன்னலட்சுமியின் அன்புக் கணவரும் வத்சல்ஜன் (சுதன்) (றைடன் கோப்பிரேசன் யாழ்ப்பாணம்) அஞ்சனா (மக்கள் வங்கி, கந்தளாய்) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

021 226 3085 தகவல் : சுதன் (மகன்) (C-5463)


## இடிப்பு...

இலங்கையில் நடந்த போரில் உயிரிழந்த தமிழர்களின் நினைவாக முள்ளிவாய்க்கால் முற்றம் கட்டப்பட்டது. உலக தமிழ் பேரமைப்பு சார்பில் கடந்த 8-ம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறக்கப்பட்டது.

இரண்டு நாட்கள் நடைபெற்ற விழா கடந்த 10-ம் திகதி முடிவடைந்த நிலையில் நேற்றுக்காலை 500க்கும் மேற்பட்ட பொலிஸாரின் பாதுகாப்புடன் நினைவு முற்றம் சுற்றுச்சுவர் இடிக்கப்பட்டது.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்ற சுற்றுச்சுவர் புறம்போக்கு நிலத்தில கட்டப்பட்டிருப்பதாக கூறி வருவாய்த்துறை, நெடுஞ்சாலைத்துறை காவல் துறையினரால் பொக்லைன் இயந்திரம் மூலம் இடிக்கப்பட்டுள்ளது.

இதைக்கண்டித்து கடையடைப்பு போராட்டம் செய்த பழ.நெடுமாறன் கைது செய்யப்பட்டார். இதையடுத்து அங்கு வந்த வைகோவை பொலிஸார் தடுத்தனர். ஆனால் ஆவேசமாக தடையை மீறி முள்ளிவாய்க்கால் முற்றத்தின் உள்ளே சென்று அங்குள்ள மாவீரர் மண்டபத்தில் அமர்ந்தார் அங்கு வைகோ செய்தியாளர்களிடம் பேசியபோது,

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் திறப்பது தொடர்பாக பழ. நெடுமாறன் முதல்வர் ஜெயலலிதாவை தொடர்ந்து தொடர்பு கொண்டார். ஆனால் பதிலேதுமில்லை. அடுத்து அவர் தா.பாண்டியன் மூலமாக பேசி வந்தார். அப்போதும் சரியான பதிலில்லை. இதையடுத்து கடந்த 8-ம் திகதி நினைவு முற்றம் திறக்கப்பட்டது.

இந்நிலையில் அந்த முற்றத்தை இடித்து தள்ள ஆணையிட்டுள்ளார் ஜெயலலிதா. முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தை இடித்த ஜெயலலிதாவின் இந்த செயல் பச்சை அயோக்கியத்தனமானது.

கண் துடைப்பு தீர்மானங்களை நிறைவேற்றிவிட்டு பிரபாகரன் படத்தை வைக்கக்கூடாது என்று வழக்குகள் போடுகிறார். ஆனால் லட்சோப லட்சம் மக்களின் நெஞ்சத்தில் இருக்கும் பிரபாகரனை நீக்க முடியாது.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம்! இது போயஸ் கார்டன் சொத்தோ ஜெயலலிதாவின் சொத்தோ கிடையாது. கேள்வி கேட்க ஆள் இல்லை என்று இப்படியெல்லாம் செய்துகொண்டிருக்கிறார். இதைப் பார்த்து உலகத்தமிழர்கள் காறித்துப்புவார்கள்.

ஈழ ஆதரவாளர்கள் மீது தேசிய பாதுகாப்பு சட்டம் பாய்கிறது. எத்தனை தேசிய பாதுகாப்பு சட்டம் பாய்ந்தாலும் அவை எல்லாம் எங்கள் கால் தூசுக்குச்சமம்.

முள்ளிவாய்க்கால் முற்றம் எங்கள் சொத்து. நாங்கள் உள்ளே போவோம். அதை தடுக்க முடியாது. ஜெயலலிதாவின் இந்தச் செயல்களுக்கு பாவமன்னிப்பே கிடையாது என்றார் வைகோ கடுமையான ஆவேசத்துடன். (செ-11)


# 31-ம் நாள் மோட்சதீப ஆராதனையும் நன்றி நவிலலும்



அன்புடையீர்!

கடந்த 16.10.2013 புதன்கிழமை அன்று தென்னாபிரிக்காவில் சிவபதமடைந்த எமது சிரேஷ்ட புதல்வன்

அமரர்

## தேவராஜா ராஜ்பவான்

அவர்களின் மோட்சதீப ஆராதனை நாளை 15.11.2013 வெள்ளிக்கிழமை காலை 9.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்றைய தின நிகழ்வில் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் கலந்து கொண்டு ஆத்மசாந்தியுடன் கூடிய மோட்சதீப ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நன்றி நவிலலுக்கான மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

கீரிமலை றோட், சண்டிலிப்பாய். 021 3001066, 0778152444

இங்ஙனம் : குடும்பத்தினர் (4437)



# Vacancy

இலங்கையில் முன்னணி வகிக்கின்ற No1 நிறுவனமான G.M.International (pvt) Ltd இற்கு துடிப்பும் கடினமாக உழைக்க கூடிய ஆண், பெண் இருபாலாருக்கும், குறுகிய காலத்தில் எதிர் பார்ப்புக்களை நிறைவேற்ற நினைப்பவர்களுக்கும் மேலதிக கல்வியை தொடர இயலாத இளம் சமுதாயத்திற்கும் அரியதொரு வாய்ப்பு!

- வயதெல்லை 18-30
- தகைமை - O/L or A/L
- அனுபவம் அவசியமற்றது

- Administration
- Customer Service
- Supervisor
- Marketing trainee
- Management trainee

பயிற்சியின் போது 18000 - 25000 பயிற்சியின் பின் - 40000 /- மேல்

தொடர்பு : 0772712511, 0214993166 (C-5462)

# உடனடி வேலைவாய்ப்பு

(20 பேர் மட்டும் தேவை)

தொடர்புகளுக்கு : 0775566224,0770771377

முழுநேர வேலைவாய்ப்புக்கு கீழ்க்காணும் வெற்றிடங்களுக்கு துடிப்பும் ஆர்வமுமுள்ள இளைஞர், யுவதிகள், தேவைப்படுகின்றனர். தங்களுக்கு O/L தகைமை இருப்பின் எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

MARKETING / SALES
WARE HOUSE / DISTRIBUTION
MANAGEMENT TRAINEE

வயதெல்லை 18-35 வரை அனுபவம் அவசியம் இல்லை

குறிப்பு : சர்வதேச சான்றிதழ் வழங்கப்படும் உணவு மற்றும் தங்குமிட வசதிகள் இலவசம்.

NO : 70,4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (4486)


## இரண்டாவது...

பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் இரண்டாவது நாளாகவும் கலந்து கொண்டிருந்தார்.

இன்றையதினமும் தொடர்ந்து போராட்டம் நடைபெறவுள்ளதாலும் போராட்டத்தினை வெளிநாட்டுப் பிரதிநிதிகளும், சர்வதேச ஊடகவியலாளர்களும் சென்று பார்வையிடுவதனால் அனைவரினையும் இன்றைய போராட்டத்தில் கலந்துகொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் கோரியுள்ளனர். (செ-4,6)


# கோழிக் குஞ்சுகள் விற்பனைக்கு

தடுப்பூசி ஏற்றப்பட்ட நல்லின ஒரு நாள் ஊர்க்கோழிக் குஞ்சுகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு: 021 7200616 (4485)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.